Free Circulation Germany-England-Swiss

வைகாசி May.2019

# வெற்றிமணி
Vettimaniy

Successful Publishing 25 Years IN EUROPE

ESTD 1950

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

29 வது ஆண்டு நிறைவில்

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை




Königswall 16 (Am HBF) 44137 Dortmund Tel:0231 162377 Fax:0231 147836

# தோல்விக்குள் ஒளிந்திருக்கும் வெற்றி

Dr.IN

## உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிர் குடித்த தாக்குதல்கள்



## பெண்பிள்ளைகளின் தன்னம்பிக்கை இடைவெளி



## நூற்றாண்டு சிறப்பிதழ்

வெற்றிமணி ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்



## எம்.ஜி.ஆருடன் பணியாற்றிய ஈழத்து விஜயசிங்கம்.



S.K.SILKS GOLD PARAADISE

அசத்தலான ஆடைத் தெரிவுகள்

என்றும் புதியது

அழகின் இரகசியமும் அதுவே!

திருமண பட்டுப்புடவைகள் பஞ்சாபிகள் பாட்டிசாறிகள்
சிறுவர்களுக்கான ஆடைகள், அனைத்தும் நம்மிடம் கிடைக்கும்.

17th Anniversary

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647

Adler str 33 - 44137 Dortmund

MITCHAM (UK) U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles
Page 2

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.12

Gopara Gnanam GMBH
Tel:0231 5450028 Mob:0171 330 6542
Rheinische str.81 - 44137 Dortmund
Page.02

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.39

# இரவும் பகலும் இரவல் காதல்

சிவப்பிரியன்




காதலிக்கக்கூட உன்னிடம் சொந்தச் வார்த்தைகள் இல்லையா? தமிழுக்கு அத்தனை பஞ்சமா? இந்த நிலையில் எப்படிக் காதல் சொந்தக்காலில் நிற்கும்.
யாரோ யாருக்கு சொன்னது எல்லாம் , எனக்கும் உனக்கும் என்று ஆகிவிடுமா?

ஒரு சொல் போதும். அது உன்னுடையதாக இருந்தால், உயிர் உள்ளவரை கரையாது.
தமிழை பயன்பாட்டு மொழியாகப் பாவியுங்கள். எழுத்தாளர்களும், கவிஞர்களும் மட்டும்தான் இன்று தமிழ் எழுதலாம் என்று எண்ணாதீர்கள். நமக்கு இன்று வெறும் 4 பால்பெட்டி 2 தேங்காய், வெங்காயம், என்று" வெறுமனமே கடைப் பொருட்கள் வாங்க பட்டியல் எழுதுவதோடு தமிழ் நின்றுவிட்டது. அதனையும் முழுவதுமாக தமிழில்தான் எழுதுவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.


கற்றவர்கள், கல்லாதவர்கள், அனைவருக்குமான தாய் மொழி தமிழ். அன்று கல்வியறிவு குறைந்த ஒரு தாய்கூட தன் பிள்ளைக்கு எழுதும் கடிதம் எத்தனை சுகமானது. அந்தக் கையெழுத்தை வாசிக்கும்போது தாய் மடியில் படுக்கும் சுகம் வரும். எழுத்தில் வார்த்தைக்கு வார்த்தைக்கு உன்னை ராசா! ராசா! என்றும், இராசாத்தி இராசாத்தி என்றும் அரியணையில் ஏற்றிவைத்துவிட்டு தான் மட்டும் ஓலைப்பாய் ஒன்றில் படுத்துறங்கும் காட்சி கண்ணில் தெரிகிறது அல்லவா!. நீ எழுதிய ஒரு கடிதத்தை பத்துதரம் அல்ல உன்னினைவு வரும்போது எல்லாம் படித்து மகிழும். உன் எழுத்தில் நீ எழுத மறந்தவற்றையும், மறைத்தவற்றையும். உன் கையெழுத்தைவைத்தே கண்டுபிடிக்கும் ஆற்றல் அன்னைக்கு இருக்கும்.

எனவே நீங்கள் சொந்தமாக எழுதுங்கள். உங்களைப்பிடித்தவர்களுக்கும் உங்களுக்குப் பிடித்தவர்களுக்கும் அது நிச்சயம் பிடிக்கும்.
வட்சப்பில் காலைவணக்கம் எழுதுகின்றீர்களா. முதலில் சொந்தமாக ஒருவரியாதல் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். அதனை அனுப்புங்கள்.

யாரோ அனுப்பியதை நீங்களும் வாசிக்காமல் அதனையே உடன் பிறருக்கும் அனுப்பிவிடாதீர்கள். ஆண்டவன் இத்தனைகோடி மனிதர்களைப்படைத்து எத்தனைகோடி முகங்களைவைத்தான். நல்லவேளை அவனும் ஒன்றையே எல் லோருக்கும் Forward பண்ணாமல் விட்டுவிட்டான்.
உங்கள் கைத்தொலைபேசியில் தமிழ் எழுத்து இல்லையா கவலையை விடுங்கள். சாப்பிட இருந்தால் முதல் சாப்பாட்டை படம் எடுத்து கடவுளுக்கு அனுப்புவதுபோல் யாவருக்கும் அனுப்புவோம். ஆலயத்தில் அரோகரா என்று இருகரம் கூப்பிவணங் கமுடியாமல் கரத்துள் கைத்தொலைபேசியைப் பொத்திவைப்போம் அல்லது. ஆண்டவனுக்கே படம் காட்டுவோம்.

எனவே முடியாது தெரியாது என்று சொல்லமுடியாது. உங்களுக்கு என்று சிலவாசகங்களை நீங்களே ஒரு காகிதத்தில் எழுதிக்கொள்ளுங்கள் அதனைப் படம் எடுங்கள் பின்பு அனுப்புங்கள். அதனை வாசிப்பவர் உங்கள் அன்னைாக இருக்கலாம் தந்தையாக இருக்கலாம் ஏன் காதலன், காதலியாகக்கூட இருக்கலாம். அவர்கள் அதில் காணும் சுகம் சும்மா like போடுவதுபோல் இல்லை அது. உலகிலேயே அதிகம் good morning போடுவது இந்தியர்கள்தானாம். இந்தியாவிலேயே அதிகம் போடுவது தமிழன்தானாம். இதனை இங்கிலாந்து ஒரு ஆய்வில் சொல்லியுள்ளதாக ஒரு கருத்து உள்ளது. இங்கிலாந்து மக்கள் பெருமகிழ்வுகொண்டு இருப்பார்கள். காரணம் தமிழர்கள் எல்லோரும் தாம்பேசும் ஆங்கிலமொழியில் good morning என்று எழுதியதற்காக.

ஒரு தாய்கூட தன் வயிற்றில் பிறந்த எல்லோருக்கும் ஒரே உணவைத் தினமும் சமைத்துக் கொடுப்பதில்லை. இன்று அவனுக்குபிடிக்கும் என்று புட்டு அவித்தேன், நாளை சின்னவனுக்கு பிடிக்கும் என்று தோசை சுடுவேன், மூத்தவளுக்கு இனிப்புத் தான் விருப்பம் என்று பாலப்பம் சுடுவேன் என்று சொல்வதை நீங்கள் கேட்க வில்லையா?
தாயும் தாய்மொழியும் ஒன்றுதான். விருப்பம் இல்லை என்றால் திணிப்புக்கு இடமில்லை. தமிழுக்கா பஞ்சம் விரும்பியவர்களுக்கு விரும்பியதை சொந்தமாகக் கொடுங்கள். (அம்மா மகனுக்கு தோசை விருப்பம் என்றால் அவள்தான் சுட்டுக்கொடுப்பாள். ஏன் என்றால் மகனுக்கு அம்மா சுட்டால்தான் தோசை)




## இரவல் காதல்

ஒவ்வொரு காலையும் சிறப்பாக விடியட்டும், முடிந்தால் சொந்தங்களுக்கு சொந்தமாக ஒரு வரி எழுதுங்கள். இன்னும் ஒருவிடையம் ஒரு 20 வயது இளைஞன் சொன்னான் இன்று "தன்னை எத்தனைபேருக்குத் தெரியும் என்பதைவைத்தே தன் அறிவை எடைபோட்டுக் கொள் கிறார்கள் " என்று. இந்ததெரியும் என்பதற்கும், அறிவுக்கும் என்ன சம்மந்தம் என்று புரியவில்லை என்றான். எவ்வளவு உண்மையான வார்த்தை. ஒரு விஞ்ஞானியோ, ஒரு ஞானியோ, முகம்காட்டுவது இல்லை. ஆனால் அவர்களை பலர் அறிந்து இருக்கிறார்கள். அந்த அறிதல் அறிவால் ஞானத்தால் அவர்கள் குணத்தால் வந்தது. உங்கள் நல்லெண்ணங்களால் உங்கள் முகங்களைக்காட்டுங்கள். முகத்திற்கு அழகு தருவதும் உங்கள் நல் எண்ணங்கள்தான். பிறருடைய எண்ணங்கள் அல்ல.










வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை 273


ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


**“வெற்றிமணிமொழி”**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Sanje:07824 61 83 83

**Vettimaniy Ltd**

Company No: 8876276


# உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிர் குடித்த தாக்குதல்கள்



- கொழும்பிலிருந்து ஆர். பாரதி -

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற 8 குண்டுவெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 24 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இவர்களிடம் பல கோணங்களில் விசா ரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. தாக்குதல் குறித்து ஏப்ரல் முதல் வாரத்திலேயே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும், அதனையிட்டு ஏன் அக்கறை செலுத்தப்படவில்லை என்பது முக்கிய கேள்வியாக இப்போது எழுப்பப்பட்டிருக்கின்றது. இந்தத் தவறுக்குப் பொறுப்பேற்கப்போவது யார்?

கிறீஸ்தவர்களின் உயிர்த்த ஞாயிறு பண்டிகையான கடந்த 21 ஆம் திகதி இலங்கையில் 3 முக்கிய தேவாலயங்கள், 3 பிரபல ஹோட்டல்கள் உட்பட 8 இடங்களில் பெரும் குண்டுவெடிப்புகள் அடுத்தடுத்து இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்களில் சுமார் 300 பேர் உயிரிழந்துள்ளனர். பலரின் உடல்கள் சம்பவம் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து சதைத்துண்டங்களாக மீட்கப்பட்டுள்ளன. கொல்லப் பட்டவர்களில் சுமார் 40 பேர் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் என்பது கவனத்துக்குரியது. அத்துடன், இந் தக் கொடூர சம்பவங்களில் சிக்கி 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இஸ்லாமிய தீவிரவாதிகள் இலங்கையைக் குறிவைத்து செயற்படத் தொடங்கியிருக்கின்றார்கள் என்பது பழைய செய்தி. இவர்களுக்காக கிழக்கில் காத்தான்குடி பகுதி யில் பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

புலனாய்வுப் பிரிவுகள் இது குறித்த தகவல்களை அரசாங்கத்துக்குக் கொடுத்திருந்த போதிலும், அரசாங்கம் அதனிட்டு தீவிரமாகச் செயற்படவில்லை. முஸ்லிம் அரசியல் தலைமைகளின் ஆதரவு தேவையாக இருந்தமையால், இவ்விடயத்தை அரசாங்கம் மென்மை யாகக் கையாண்டதுதான் இந்த நிலைமைக்குக் காரணம் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவங்கள் இடம்பெற்ற மூன்று இடங்களிலிருந்து 3 ஆண்களின் தலைகளும் மீட்கப்பட்டுள்ளன. இவை தற்கொலைத் தாக்குதலுக்கான சந்தேகத்தை உறுதிப் படுத்தியுள்ளன. அதனைவிட, தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலைத் தாக்குதல்தாரிகளில் ஒருவரைத் தவிர மற்றையவர்கள் வெளிநாட்டவர்கள் எனச் சொல்லப் படுகின்றது. மிகவும் சிறப்பான பயிற்சியைப் பெற்றவர்களே களத்தில் இறக்கப்பட்டிருக்கின்றார்கள்.

தேவாலயங்களில் உயிர்ப்பு ஞாயிறு பண்டிகை கொண்டாடப்பட்டவேளையிலும், ஹோட்டல்களில் நேற்றுக் காலை ஈஸ்டர் காலை விருந்து நடைபெற்ற நேரத்திலும் நன்கு திட்டமிட்டு இந்தக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் காலை கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், சங்கிரிலா ஹோட்டல், சினமன் கிராண்ட் ஹோட்டல், கிங்ஸ்பெரி ஹோட்டல் ஆகியவற்றில் குண்டுகள் வெடித்துள்ளன. முதலாவது குண்டுவெடிப்பு காலை 8.45 மணியளவில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடந்துள்ளது. இதன் பின்னர் கொழும்பின் மூன்று பிரபல ஹோட்டல்களில் குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்தன.

இதன் தொடர்ச்சியாக காலை 9 மணியளவில் நீர்கொழும்பில் கட்டுவபிட்டி புனித செபஸ்ரியன் தேவால யத்திலும், மட்டக்களப்பில் சீயோன் தேவாலயத்திலும் குண்டுகள் வெடித்துள்ளன. காலை 8.45 இற்கும் 9.15 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிகளில் இந்த 6 குண்டு வெடிப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இதன் பின்னர் பிற்கல் தெஹிவளையிலும், தெமட்ட கொடையிலும் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்துள்ளன.

கொழும்பு சங்கிரிலா ஹோட்டலில் இருந்து முஸ்லிம் ஆண் ஒருவரின் தலை உடல் சிதைவடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. நீர்கொழும்பு கட்டுவபிட்டி புனித செபஸ்ரியார் தேவாலயத்திலிருந்து ஆண் ஒருவரின் தலைப்பகுதி மட்டும் மீட்கப்பட்டுள்ளது.

இவர் முஸ்லிம் எனக் கூறப்படுகின்றது. இரண்டு இடங்களில் மீட்கப்பட்ட தலைகள் குறித்து விசாரணை நடத்தும் பொலிஸார், அந்தத் தலைகள் தற்கொலைக் குண்டுதாரிகளான ஸஹ்ரான் ஹாசிம் மற்றும் அபு மொஹம்மத் ஆக இருக்கலாம் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் உடல் சிதைவடைந்த நிலையில் தலைப்பகுதியுடன் முஸ்லிம் ஆண் ஒருவரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நடந்த தாக்குதல்களில் அனேகமானவை தற்கொலை குண்டுதாரிகளாலேயே நடத்தப்பட்டுள்ளன எனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தனவும் உறுதிப்படுத்தியிருக்கின்றார். இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் ஒரு இஸ்லாமிய தீவிரவாதக் குழு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி 08 ம் பக்கம்.




## வெற்றிமணி ஸ்தாபகர் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் நூற்றாண்டு விழாச் சிறப்புக் கட்டுரை!





# நூறு வயது காணும் பொழுதிலும் வெற்றிமணியாய் அவர் பணிகள்

வெற்றிமணி மாணவர் சஞ்சிகையை உருவாக்கிய, அமரர் மு.க.சு.ப்பிர மணியம் என்கின்ற ஒரு உன்னதமான மனிதரின் நூற்றாண்டுவிழா இது.
மு.க.சுப்பிரமணியம் அவர்கள் 1980 இல் மறைந்துவிட்டாலும், இன்றும் பேசப்படும் மனிதராக இருப்பதற்கு அன்று அவர் தீர்க்கதரிசனத்துடன் மேற்கொண்ட பணிகளே காரணமாகின்றன.

யேர்மனி இங்கிலாந்து சுவிஸ் நாடுகளில் வாழ்பவர்களில் பலரும் அவரை நேரில் கண்டு இருக்க வாய்ப்பில்லை என்பதனை அறிவோம்.. இருந்தாலும் அவர் மறைந்தபின்னரும் வாழும் மனிதராக இருப்பதனால் அவரை உங்களால் எடைபோடமுடியும் என்று கருதுகின்றோம்.
அவர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார் என்பதற்கு அவர் நூற்றாண்டு தினத்திலும் வெற்றிமணி பத்திரிகையாக வெளிவந்துகொண்டு இருப்பது சான்றாகிறது. இதன் மூலம் அவரை அறிந்தவர்கள் இங்கு பாதி என்றால், மீதி அவர் ஆரம்பித்த பத்திரிகைமூலம் அறிந்தவர் ஆகின்றீர்கள். எனவே முழுமையாக அவரை புரிந்தவர்களாகவே மக்கள் இருப்பார்கள்.

அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் மே மாதம் 14 ஆம் திகதி 1919 ஆண்டு குரும்பசிட்டியில் ஒரு விவசாயக்குடும்பத்தில் பிறந்தவர். இவர் திரு திருமதி கந்தவனம் தம்பதியனருக்கு எட்டுபபிள்ளைகளில் இவர் ஏழாவதாகப் பிறந்தார்.

### கல்வியிலும் சமூகத்தொண்டிலும் நேரத்தை அர்ப்பணித்தார்.

.இவரது மூத்த அண்ணன் அமரர் க.நாகலிங்கம் அவர்கள் மகாஜனாக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும், கனிட்ட பாடசாலை அதிபராகவும் கடைமையாற்றியவர்.
சிறுவயதில் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் மிகுந்த துடிதுடிப்புடன் நடந்துகொள்வார். தான் நினைத்ததை முடிப்பதில் விடாப்பிடியாக இருப்பார். ஆனால் அண்ணர் என்றால் மட்டும் ஒரு பயபக்தியுடன் நிற்பார்.. அண்ணன் மீது உள்ள பாசமும் பக்தியும் அவரது வாழ்வை உயர்த்தியது.
அமரர்.முக.சுப்பிரமணியம் அவர்களை படிப்பித்து ஒரு ஆசிரியரா உயர்த்திய பெருமை அவரது அண்ணருக்கே சாரும்.
1941 ஆண்டு கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு போட்டிப்பரீட்சைமூலம் தெரிவுசெய்பட்டு, அங்கு மூன்று வருடப்பயிற்சி பெற்றார்.
பரீட்சையில் சிறப்புச்சித்தியும் பெற்றார்.
அங்கு அன்று கலாசாலை அதிபராக இருந்த ஏ.ஆர்.சண்முகரத்தினம் அவர்கள் இவரது ஆழுமையக் கண்டு கலாசாலை விடுதி மாணவர் தலை வராகவும், கரபந்தாட்த்தில் சிறந்து விளங்கியமையால் வியைாட்டுத் துறைத் தலைவாகவும் நியமித்தார்.


04.06.1977

பாசமிகு தம்பியாக தான் அதிபராக இருந்து ஓய்வுபெறும் நேரம் தனக்கு கல்விபுகட்டிய அண்ணனை மறவாது கௌரவித்த தம்பி

அங்கு பல பேர் சுப்பிரமணியம் என்ற பெயருடன் மாணவர்களாக இருந்தமை யால், இவரை அவர்களிடம் இருந்து வேறுபடுத்தியறிய மு.க.சுப்பிரமணியம் என்று அழைத்தார். ஆதுவே பின்னர் ஆசிரியர் உலகில் எம்.கே.எஸ் என்று பிரபலமானார்.
ஆசிரியர் உலகில் அன்று மறக்கமுடியாதவராக எம்.கே.எஸ் திகழ்ந்தார் என்பதனை அக்காலத்தில் இருந்த கல்வியதிகாரிகள் வழிமொழிந்துள்ளனர்.

காங்கேசந்துறை வட்டாரக் கல்வி,விளையாட்டு, இவற்றின் அமைப் பாளராகவும் பரீட்சைக் காரியதரிசியாகவும் இருந்து அளப்பெரும் தொண்டுகள் ஆற்றி கல்விப்பணிப்பானரதும், உதவி அரசாங்க அதிபரதும் பாராட்டுதலைப் பெற்றவர்.அகில இலங்கை ஆசிரியர் பாடசாலை தமிழாசிரியர் சங்க உபதலைவராகவும். நுவரெலியா முல்லைத்தீவு கிளை களின் தலைவராகவும் காரியதரிசியாகவும் இருந்து பெரும் தொண் டாற்றியவர்.
காங்கேகன்துறை ஆசிரியர் சங்க கிளையை ஆரம்பத்தவர்களில், இவர் முக்கியமானவர்.
கல்விப்பணி மட்டுமன்றி இலங்கை கயரோக தடைச் சபையின் வலிவடக்கு கிளையின் உபதலைவராகவும் இருந்து தொண்டாற்றியவர்..
1964 ஆண்டு ஒட்டுசுட்டான் காதலியார் சம்மளம் குளத்தில் அரசினர் தமிழ் பாடசாலை தலைமை ஆசிரியராக இருந்த வேளை அங்கு பயின்ற மாணவர்களை இடையில் படிப்பை நிறுத்தி கமத்திற்கு பெற்றோர் அழைத்துச்சென்றனர்.
அறுவடைகாலத்தில் பெற்றோருக்கு பிள்ளகளின் உதவி தேவை என்பதனை அறிந்து அந்த நாட்களில் அரச அனுமதியுடன் விடுமுறை பெற்று பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் உதவினார்.
இதனால் பிள்ளைகளின் படிப்பை இடைநிறுத்தி கமத்திற்கு அழைத்துச் சென்று படிப்பை இடைநிறுத்தாது பாதுகாத்த பெருமை அமரர் சுப்பிரமணியம் அவர்களையே சாரும்.. பல ஆர்வம் மிகுந்த மாணவர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்து மேற்படிப்பிற்கு வழிசமைத்துக் கொடுத்தார்.

### பொன். பரமானந்தரின் இலட்சியப் புதல்வர் அதிபர் மு.க.சுப்பிரமணியம்

1968 முதல் 1977 வரை குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலத்தின் அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். ஓய்வு பெற்ற வேளை பொன். பரமானந்தரின் இலட்சியப் புதல்வர் என்றும் மகாஜனக்கல்லூரிக்கு ஒரு ஜெயரத்தினம். தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு ஒரு ஐ.பி. துரைரத் தினம். பொன்.பரமானந்தருக்கு ஒரு மு.க.சுப்பிரமணியம் அவர்கள் என்று வருங்கால சந்தியினர் விதந்து கூறுவார்கள் என்பது வெள்ளிடமலை.

இவ்வாறு 1977 ஆண்டு பொன்.பரமனந்தர் பெற்றோர் ஆசிரியர் சங்கம். வெளியிட்ட சேவை நல மலரில் கே.கே.சோமசுந்தரம் வடமாகாணக் கல்வியதிகாரி குறிப்பிட்டு இருந்தார். (25.05.1977)
இவரது ஆசிரியப்பணி:
சகாராக்கல்லூரி மாத்தளை 01.06.48 - 31.01.1949 -St.Andrews College நாவலப்பிட்டி 01.02.49-31.12.1949- கதிரேசன் தமிழ் பாடசாலை நாவலப்பிட்டி 01.01.1950- 02.01.1955- வெலம்பொட அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (GTMS) பாடசாலை 03.01.1955 - 31.07.1957- பூண்டுலோயா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 01.08.1957-1961

தொடர்ச்சி 7ம் பக்கம்







Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Luckyfly
பதிவுக்கு முந்துங்கள்...
Sommer Offer
599 €
குறுகிய காலத்திற்கு மட்டுமே!
பதிவுக்கு முந்துங்கள்!
01.5.2019 முதல்
25.6.2019 வரை
46 Kg
Gulf Air
19.07.2019 முதல் Ab;
739 €
25.06.2019 முதல் Ab;599€
உங்கள் பிரயாணச் சீட்டுக்கான
பணத்தை தவணைமுறையில் கட்ட
வங்கிக் கடன் பெற்றுத்தரப்படும்!
5,000 € முதல் 10,000€ வரை
Mob:No: 0179 1484 892
www.Lucky-fly.de
e.mail:siva 0108 @hotmail.com
QATAR AIRWAYS
Emirates
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
Rheinische str.56
44137 Dortmund
Tel:+49 231 96762806




அனைவருக்கும் எங்கள் மேதின வாழ்த்துக்கள்


4ம் பக்கத் தொடர்ச்சி

## வெற்றிமணி ஸ்தாபகர்

ஓமந்தை மருதோடை தமிழ் மகாவித்தியாலம். 1961. - 28.02.1964 ஓட்டுசுட்டான் காதலியார் சம்மளங்குளம் 01.03.1964 - 02.02.1968- குரும்பசிட்டி பொன். பரமானந்தர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 03.02.1968-18.03.1978 என இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியத்தொழில் புரிந்து இறுதியில் அதிபராக தனது சொந்த ஊரான குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலத்தில் அதிபராக இருந்து 1977 ஆண்டு ஓய்வு பெற்றார்.
இதில் ஒரு சிறப்பு என்ன வென்றால் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களது மனைவியும் ஓர் ஆசிரியை ஆவார். அவரும் தன் கணவன் சென்ற நகரம் எல்லாம் பின் தொடர்ந்து இறுதியில் 1978 ஆண்டு ஓய்வு பெற்றார்.

## மாணவர்களுக்குச் செய்த பணி!






அதிபராக இருந்து ஓய்வுபெற்ற வேளை...04.06.1977

நாவலப்பிட்டியில் ஆசிரியராக இருந்த வேளை தினகரன் சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் வந்த குறுக்கெழுத்துப் போட்டிகளின் சிறந்த விடை விமர்சனி 1950 ஆண்டு வெற்றி மணியை வெளியிட்டார். போட்டிகளில் வெற்றி என்பதனைக்குறிக்க “வெற்றி” என்பதனையும் சுப்பிரமணியம் என்பதில் உள்ள “மணி”யினையும் இணைத்து வெற்றிமணி எனப் பெயர் இட்டார்.

வெற்றிமணியின் ஸ்தாபகராக அவர் இருந்தபோதும். அக்கால சட்டதிட்டங் களுக்கு அமையவும் 2 வருடங்களுக்கு ஒருமுறை, 5 வருடங்களுக்கு ஒரு முறை, ஆசிரிய இடமாற்றங்கள் என்பதனைக் கருத்தில் கொண்டும். ஆசிரியராக வேறு பல பெரியவர்களின் பெயர்களை இட்டு நடத்தி வந்தார்.
08 பக்கங்கள் பின் 16,32 59 என பக்கங்கள் தேவைக் கேற்ப அதிகரித்த வண்ணம் இருந்தன. 1954 ஆண்டு முழுக்க முழுக்க மாணவர் பத்தரிகையாக உருவெடுத்து இலங்கையில் வெளிவந்த முதல் மாணவர் சஞ்சிகை அதாவது சிறுவர் மாத இதழ் வெற்றிமணியே என்ற மகுடத்தை தனதாக்கியது.

**வெற்றிமணி டாண் டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்**
**நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய் –**
என்ற வாழ்த்து ஒலியுடன் வெளிவந்தது வெற்றிமணி.
மலையக மக்களின் கல்வி திட்டமிட்டு நசுக்கப்பட்ட வேளை அவர்களது கல்விக்கும் ஆற்றலுக்கும் முதற்களம் அமைத்துகொடுத்தது வெற்றிமணி.

தான் ஆசிரியராக கடமை புரிந்த பாடசாலைகளில் எல்ல எழுத்தாற்றமிக்க ஆசிரியர்களையும் மாணவர்களையும் வெற்றிமணியில் எழுதவைத்தார்.
வெற்றிமணியில் ஆசிரியர் மாணவர்கள் என பலரது கட்டுரைகளையும் பிரசுரித்தார். ஆரம்பத்தில் மாணவர்கள் தரும் சிறு சிறு கட்டுரைகளையும் அதன் தகுதிபாராது மாணவர்களை ஊக்குவிப்பதற்காக பிரசுரித்தார். ஆடு மாடு கோழி என வீட்டு பிராணிகளது கட்டுரைகள் என பல சிறுவர்களால் எழுதப்பட்டு வந்தன.
பழைய வெற்றிமணியைப் பார்த்தபோது ஆசிரியரிடமே ஒரு முறை கேட்டுவிட்டேன். “இது என்ன கட்டுரை இதனைவிட நல்லது கிடைக்க வில்லையா? எழுத்து வல்லமைமிக்க மாணவர்கள் இல்லையா? ஏன் இப்படி தரமில்லாத கட்டுரையை ஏன் பிரசுரித்தீர்கள்” என்று ஆசிரியரைக் கேட்ட போது அவர் சொன்னபதில்:
இந்த கட்டுரை வந்தபின்புதான் வெற்றிமணியில் பல சிறப்பான கட்டுரைகள் வரத்தொடங்கின. வாசகர்கள் படைப்பாளிகள் எல்லோரும். அட இதனைவிட



**1957 இல் இன்ப அதிர்ச்சிக்குள்ளான மாணவனுக்கு**
**2010 இல் இன்ப அதிர்ச்சி கொடுத்துக் கௌரவித்தது**

எம்மால் நன்றாக எழுத முடியும் என்று அவர்களுக்கு எண்ணத் தோன்றியது. எனவே எப்போதும் சிறப்பான ஆக்கங்கள்தான் வெளியிடவேண்டும் என்பது அல்ல.எழுத்தாளரை கிளர்ந்து எழும்வண்ணம் இப்படி சிலவற்றைச் செய்யத்தான் வேண்டும். என்றார். அது மட்டுமன்றி ஆடு,மாடு,கோழி பற்றி எழுதிய மாணவர்கள் பிற்காலத்தில் பெரும் எழுத்தாளர்களாக உருவெடுத் தார்கள் என்பது இன்னொரு செய்தியாகும்..

வெற்றிமணியில் எழுதும் மாணவர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கு முகமாக சிலசமயம் அவர்கள் கற்கும் பாடசாலைக்கு நேரில் சென்று புத்தகங்கள் அன்பளிப்புச் செய்து மகிழ்விப்பதுண்டு. அப்படி ஒரு நிகழ்ச்சி நீர்கொழும்பில் கல்விகற்றுக்கொண்டிருந்த (1957 களில்) ஒரு மாணவனுக்கும் நிகழ்ந்தது. பிற்காலத்தில் அவர் யார் என அறியவந்தபோது அவர் யேர்மனியில் சிறந்த எழுத்தாளனாக தமிழ் அறிஞராக போற்றப்படும் திரு.பத்மகுணசீலன் எனத்தெரியவந்தது. 1950 ஆண்டு தாயகத்தில் தொடங்கிய வெற்றிமணி யேர்மனியில் அதன் மணிவிழாவை கொண்டாடிய போது அவருக்கு சிறப்புக் கௌரவம் வழங்கப்பட்டது. படத்தில் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்த பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுடன் பத்மகுணசீலன், வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களையும் அவர்களது புதல்வி சிவஜெனனி அரவிந்தன் அவர்களையும் காணலாம்.

அன்று ஆசிரியர் தொழிலில் கிடைத்த வருமானம் மிகக்குறைவு. அவரது மனைவியாரின் ஊதியத்திலும் அடிக்கடி பணம் பெற்றே வெற்றிமணியை நடத்தி வந்தார். பிற்காலத்தில் முல்லைத்தீவில் தண்ணீரூற்றில் சக்தி அச்சகத்தை நிறுவி அதன் மூலம் வெற்றிமணி சஞ்சிகையும், பலரது ஆக்கங்களையும், நூல்வடிவாகவும் வெளியிட்டு அரும்பெரும் சேவை செய்தார்.
1980 ஆண்டு அன்னாரது மறைவின் பின் வெற்றிமணி தாயகத்தில் வராது போயிற்று. 1980 ஆண்டு அமரர். மு.க.சுப்பிரமணியம் அவர்களின் புதல்வன் மு.க.சு.சிவகுமாரன் இன்றைய வெற்றிமணி ஆசிரியர் யேர்மனிக்கு வந்து, தனது இருப்பை ஓர் அளவு உறிதிப்படுத்திக்கொண்டு தந்தையின் பணியை மீண்டும் வெற்றிமணி பத்திரிகையாக ஆரம்பித்தார்.

1994 ஆண்டு ஆரம்பித்த வெற்றிமணி ஐரோப்பாவிலே வெள்ளிவிழாக்காணும் முதல் பத்திரிகை என்ற பெருமைக்குரியது. பல பத்திரிகைகள் புலம் பெயர்நாடுகளில் தோன்றியிருந்தாலும், இலவசமாக வர்ணத்தில் தொடர்ந்து வந்து வெள்ளி விழாக் காண்பது வெற்றிமணி மட்டுமே.

ஸ்தாபகரது நூற்றாண்டு காலத்திலும் அவர் ஆரம்பித்த வெற்றிமணி இன்றும் பவனிவருகிறது என்றால், இதற்கு காரணம் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களது ஆசியும், படைப்பாளிகளின் எழுத்தும், வாசகர்களின் இரசனையும், வர்த்தகர்களது தன்னலமற்ற அளப்பெரிய ஆதரவும் என்றால் மிகையாகாது.

தாயகத்திலும், இங்கும் வரலாறு படைத்து தொடரும் வெற்றிமணி மக்களின் ஓர் அங்கமாகிவிட்டது என்றால் அது உண்மையே.



# பீலபெல்ட் தமிழ்க் கல்வி கலைக் கல்லூரி வெள்ளிவிழாக் கொண்டாட்டம்











படங்கள்:நந்தபாலன்

பீலபெல்ட் தமிழ்க் கல்வி கலைக் கலலூரி தனது வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தை 28.03.2019 அன்று Großen Ratsaal des neuen Rathauses der Stadt Bielefeld ல் கொண்டாடியது. முதன்மைவிருந்தினராக பீலபெல்ட் மாநகரசபைமுதல்வர் (Oberbürgermeister) திரு Pit Clausen அவர்கள் கலந்து கொண்டார்.

03ம் பக்கத் தொடர்ச்சி

## உயிர்த்த ஞாயிறு தினத்தில்.....

ஆறு தாக்குதல்கள் தற்கொலைத் தாக்குதல்கள் என்று புலன் விசாரணையாளர்கள் தரப்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்கொலைத் தாக்குதல் நடத்தியவர்கள் சர்வதேச ரீதியில் தகுந்த தரப்பிடம் உயர் பயிற்சிபெற்றவர்கள் என்றும் தாக்குதலின் விளைவு உச்சமாக இருப்ப தற்காக உடலின் முன், பின் பக்கங்கள் இரண்டிலுமோ வெடி மருந்துகளை அவர்கள் கட்டி இருந்தனர் என்றும் திர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடயங்கள் குறித்து விளக்கமளித்த பிரதமர் தெரிவித்தார்.

இத்தகைய தாக்குதல் ஒன்று நடைபெறும் என கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி இந்தியத் தரப்பு இலங்கைக்கு எச்சரித்திருந்தது என்றும் - அது குறித்து இலங்கையின் பாதுகாப்பு உயர் வட்டாரங்களுக்கு எச்சரிக்கப் பட்டது என்றும் - இந்த எச்சரிக்கை குறித்து அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவு தனது பாதுகாப்பு அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவுறுத்திருந் தது என்றும் - இந்த எச்சரிக்கை அறிவுறுத்தலை தாங்களும் நன்கு அறிந்திருந்தனர் என அமைச்சர்கள் ஹக்கீமும் மனோ கணேசனும் தெரிவித்த போதிலும், தமக்கு அது பற்றி எதுவும் தெரியாது என பிரதமர் கூறியிருந்தார்.

இலங்கையின் பாதுகாப்பில் எந்தளவுக்கு ஓட்டைகள் இருந்துள்ளன என்பதை இது வெளிப்படுத்துகின்றது. எச்சரிக்கையை உடன் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இந்தத் தாக்குதல்களைத் தவிர்த்திருக்க முடியும். இப்போது இதற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்? ஜனாதிபதியா? பிரதமரா?

இலங்கையில் முதல் முறையாக ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாத அமைப்பு தனது தாக்குதலை அரங்கேற்றியுள்ளதாக தெரிகிறது? இவர்கள் எப்படி, மூளைச் சலவை செய்தார்கள், எப்படி இவ்வளவு வெடிகுண்டுகளை திரட்டினர் என்பது போன்ற விசாரணையில் தற்போது இலங்கை காவல்துறையினர் ஈடுபட்டு வருகிறார்கள்.




## பெண்பிள்ளைகளின் தன்னம்பிக்கை

# இடைவெளி



மனோதிடமுள்ள பிள்ளைகளை வளர்த்தெடுக்க, மனோதிடமுள்ள பெற்றோராக நாம் இருக்கவேண்டும்

குழந்தைப்பருவம் எப்பொழுதும் அழகானது மட்டுமல்ல. சவால்கள் நிறைந்தது. குழந்தைகள் கோபம், கண்ணீர், மற்றும் அடம்பிடித்தலும் நிலத்தில் விழுந்து புறழ்வதும், குழந்தைப்பருவத்தில் எதிர்பார்க்கவேண்டிய ஒன்றே. உணர்வுகள் இல்லாமல் மனிதர்கள் இல்லை. பெற்றோராக, நம் எதிர்பார்ப்புகளும் அதற்கு அமைவாக இருக்கவேண்டும். சவாலான பொழுதுகளில் PAUSE button இனை அழுத்த மறக்காதீர்கள் என்கிறார்கள் csey நிபுணர்கள். குழந்தை நிலத்தில் விழுந்து புரளும் சந்தர்ப்பத்தில் கூட, இது உதவும். பொதுவாக, பெற்றோரின் இதய துடிப்பு, மூச்சு வேகம் மற்றும் உடல் தொழிற்பாடுகள் நம் குழந்தைகள் உடல் தொழிற்பாடுகளோடு இசைவாக இருக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆகவே, பெற்றோராக நாம் அமைதி காக்கும்போது, அந்த அமைதி, ஆறுதல், நம் பிள்ளைகளையும் அமைதிப்படுத்தும்.

பல சமயங்களில், ஏன் இப்படி செய்கிறாய் என நம் பிள்ளைகளை கேட்கிறோம். அதே கேள்வியை, அதாவது நான் ஏன் இப்படி கோபப்படுகிறேன் அல்லது பதட்டப்படுகிறேன் என்ற கேள்வியை நீங்களே உங்களிடம் கேட்டு கொள்ளுங்கள். அதற்கான காரணத்தை கண்டறிந்து திருத்த பாருங்கள். எதற்கு "ஆம்" என்கிறோம், எதற்கு "இல்லை" என்கிறோம் என ஆராய்ந்து பாருங்கள். பிள்ளையின் அழுகையை, ஆரவாரத்தை நிறுத்த எப்பொழுதும் அவர்கள் கேட்பதற்கெல்லாம் "ஆம்" என்று நீங்கள் தலையாட்ட தேவையில்லை. அன்புடன் "இல்லை" என மறுக்க, பெற்றோராகிய நாம் கற்றுக்கொள்ளவேண்டும். "ஆம்" என சொல்வது அந்த பொழுதுக்கு ஒரு இலகுவான பதிலாக இருக்கலாம். ஆனால், காரணத்தை பிள்ளைகள் புரிந்துகொண்டால், "இல்லை" என்ற பதில் பயனுள்ளதாகிறது. அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கி கொள்ளுங்கள்.

பிள்ளைகளை உங்கள் சுயமரியாதையின் பிரதிபிம்பமாக பார்க்காதீர்கள். அப்படி பார்க்கும்போது, உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப அவர்கள் இல்லையெனில் ஏமாற்றம் அடைந்துவிடுவீர்கள். பொதுவாக, இது எம் சமூக வரைமுறையாக இருக்கிறது. அதாவது, எம் பிள்ளைகள் சரியாக இல்லை என்றால், அது பெற்றோராகிய நம் தவறுதான் என்பது. அந்த எண்ணத்தை விடுத்து, நாம் அமைதி கொள்ளவேண்டும். நமக்கு ஒரு வாழ்க்கையை நாம் அமைத்து கொண்டது போல், எம் பிள்ளைகளுக்கும் ஒரு வாழ்க்கை அமையத்தான் போகிறது.



Dr. புஷ்பா கனகரட்ணம்
Ph.D., C. Psych.
Clinical Psychologist

### தோல்விக்கு பயந்து புதிய விடயங்களில் இறங்க தயங்குகிறாரா?

8-14 வயதில், பெண்பிள்ளைகளின் தன்னம்பிக்கை 30% குறைவடைகிறது. 14 வயதில், பெண்பிள்ளைகள்அதி தாழ் நிலையில் இருக்கும்போது, ஆண் பிள்ளைகள் தன்னம்பிக்கை 27% அதிகமாக இருக்கிறது. இந்த தன்னம்பிக்கையை வளர்த்தெடுக்க நாம் தான் எம் பெண் பிள்ளைகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

உங்கள் மகள் சவால்களை எதிர்கொள்ள பயப்படுகிறாரா? தோல்விக்கு பயந்து புதிய விடயங்களில் இறங்க தயங்குகிறாரா? வகுப்பில் மற்றோர் முன்னால் பேச வெட்கப்படுகிறாரா? புது நண்பர்களை ஏற்படுத்திக்கொள்ள பின்தங்குகிறாரா? இந்த சந்தர்ப்பங்களில், அதீத யோசனை, மற்றவர்களை திருப்திப்படுத்த அதீத பிரயத்தனம், மற்றும் perfect ஆக தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம், எல்லாமே தோன்ற ஆரம்பித்து, உங்கள் மகளின் தன்னம்பிக்கையை மேலும் குறைத்துவிட தொடங்குகிறது.

### மனோதிடமுள்ள பெற்றோராக நாம் இருக்கவேண்டும்



பதின்மவயதோடு ஏற்படும் மூளை மாற்றங்கள் பெண்பிள்ளைகளில் தேவையற்ற யோசனைகளை அதிகரித்து விடும் சாத்தியம் இருக்கிறது. அவர்களுக்கு உதவ, புதிய சவால்களை துணிவோடு அணுக நாம் ஊக்கம் அளிக்கவேண்டும். பெற்றோராக உங்கள் வாழ்க்கை சவால்களை எப்படி எதிர்கொண்டீர்கள், தோல்விகளை எப்படி ஏற்றுக்கொண்டீர்கள் என்பது பற்றி எல்லாம் உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம். எது ஒரு பிள்ளைக்கு சவாலாக அமையும் என்பது வேறுபடலாம். சிலருக்கு, ஒரு புதிய விளையாட்டு குழுவில் இணைவது சவாலாக இருக்கலாம்.

தொடர்ச்சி 10ம் பக்கம்



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

## மனோதிடமுள்ள.... 09ம் பக்கத் தொடர்ச்சி



### பதின்மவயதில் college/university க்கு எப்படி தயார்படுத்தலாம்?

அதுவே சிலருக்கு ஒரு நண்பரை வீட்டுக்கு வரவேற்பது சவாலாக இருக்கலாம். இப்படியான சவால்களை எடுக்கவும், பிள்ளைகளின் தேவையற்ற பயத்தை போக்கவும் அவர்களுக்கு உறுதுணையாக இருங்கள். வாழ்க்கையின் மேடு பள்ளங்களை அரவணைக்க உங்கள் பிள்ளைகளை தயார்படுத்துங்கள். உங்கள் மனோதிடம், உங்கள் பிள்ளைக்கும் நிச்சயம் தொற்றிக்கொள்ளும்.

பதின்மவயதில் college/university க்கு எப்படி தயார்படுத்தலாம்?
உங்கள் பிள்ளைக்கு தொடர்ந்து படிக்க college அல்லது university யில் இடம் கிடைத்திருந்தாலும், அவர்கள் அதற்கு தயாராக இருக்கிறார்களா? முன்கூட்டியே, highschool இல் இருக்கும் உங்கள் பிள்ளைகளின் சுயாதீனத்தை (independence) பலமாக்குவதன் மூலம், உங்கள் பிள்ளைக்கு நீங்கள் உதவலாம். பெற்றோராக நாம் 100% நம்பிக்கையோடு இருக்கலாம். ஆனால் நம் பிள்ளைகளை பற்றி ஆரம்பத்திலேயே கணிப்பிட்டு பார்க்கவேண்டும். இங்கு மூன்று முக்கிய விடயங்கள் அடங்கும்: ஆரோக்கியம், கல்வி, மற்றும் நிர்வாகம். இவற்றில் நம் பிள்ளைகள் எவ்வளவுக்கு சுயாதீனத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்?

ஆரோக்கியம் என்று பார்த்தால், சில பிள்ளைகளுக்கு ஏதாவது நோய் நிலை இருக்கலாம் (நீரிழிவு, Asthma etc), குடி/போதை பாவனை, அல்லது ஒழுங்கற்ற நித்திரை பழக்க வழக்கமாக இருக்கலாம். இப்படியான ஒரு பிரச்னையை தாமாக சுயாதீனமாக கையாள பழகி இருக்கிறார்களா என்பது முக்கியம். உதாரணமாக, பெற்றோராகிய நீங்கள் தான் உங்கள் பிள்ளையை காலையில் alarm வைத்து எழுப்ப வேண்டும். பாடசாலைக்கு நேரத்துக்கு போக நினைவுபடுத்த வேண்டும் என்றால், உங்கள் பிள்ளை மேற்படிப்புக்கு இடம் மாறி சென்று எப்படி சமாளிக்க முடியும்?

அடுத்தது கல்வி, பாடசாலை சார்ந்தது. உங்கள் பிள்ளை பள்ளி வேலைகளை தனியாக தரம் பிரித்து, அந்தந்த விடயங்களை சரியான நேரத்துக்கு செய்து, பாடசாலையில் ஒப்படைக்க வேண்டிய விடயங்களை சுயாதீனமாக, சரியாக, நேரத்துக்கு ஒப்படைக்கிறாரா? அல்லது நீங்கள் கண்ணில் விளக்கெண்ணெய் வைத்து அவர்களை மேல்பார்வை பார்க்கவேண்டி இருக்கிறதா?
11ம் வகுப்பின் இறுதியிலும், "homework police" போல் நீங்கள் உணர்கிறீர்கள் என்றால், நீங்கள் விரைவில் இந்த வேலையில் இருந்து ஓய்வெடுத்து கொள்ளவேண்டும் என்றே பொருள். பாடசாலை வேலை சார்ந்து உங்கள் பிள்ளை பொறுப்பை உணர்ந்துகொள்வது மிக முக்கியம். பல சமயங்களில் எங்கள் பிள்ளைகள் பாடங்களில் என்ன புள்ளிகள் வாங்குகிறார்கள் என்பதிலேயே நம் கவனம் இருக்கும். ஆனால், தன்னிச்சையாக ஒரு பிள்ளை படித்து எடுக்கும் C grade, நீங்கள் பின்னாலும் முன்னாலும் கண்காணிப்பதால் எடுக்கும் A - அல்லது B - இனை விடவும் சிறந்தது. ஏனென்றால், மேல்படிப்பில் வெற்றிபெறுவதற்கு கல்வி-சார்ந்த சுயாதீன பழக்க வழக்கங்களை உங்கள் பிள்ளைகள் வளர்த்துக் கொள்வதென்பது மிக முக்கியம். அதுவே வெற்றியை தரும்!



உங்கள் பிள்ளை மேற்படிப்புக்கு தயார் என்பதற்கான மூன்றாவது அறிகுறி, நாளாந்த, எளிமையான விடயங்களை உங்கள் பிள்ளை சுயாதீனமாக செய்கிறார் என்பதே. இது ஒரு கால அட்டவணையை (calendar) வைத்து தன் அலுவல்களை கவனிப்பதாக இருக்கலாம், பாடசாலைக்கு தேவையான படிவங்களை நிரப்புவதாக இருக்கலாம், காலதாமதம் இன்றி செய்ய வேண்டிய விடயங்களை செய்வது, தன் விடயம் சார்ந்து ஒரு எளிமையான தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவது..இப்படி, ஒரு வயத்துவந்தவர்க்குரிய சில காரியங்களை செய்யும் பக்குவம் உங்கள் பிள்ளைக்கு இருக்கிறதா?

குழந்தை பருவத்தில், பதின்மவயதில், பெற்றோராக நாம் வழிகாட்டினோம்.

College/university வாழ்க்கைக்கு தானே இந்த விடயங்களை நிர்வகிப்பது என்பது உங்கள் பிள்ளைக்கு இன்றியமையாததாகிறது.






# பக்கவாத நோய்

Dr IN



**டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.**
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

எமது மக்களில் பலருக்கு வரும் பக்கவாத நோய் பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.
கேள்வி: எனது தந்தைக்கு 65 வயது. கடந்த வாரம் வரை அவருக்கு பெரிதாக காய்ச்சல் வந்து கூட நான் பார்த்ததில்லை. ஆனால் கடந்த வாரம் திடீரென்று மயங்கி விழுந்துவிட்டார். நாங்கள் உடனே வைத்தியரிடம் அழைத்து சென்றோம்.
வைத்தியர் இரத்த அழுத்தம் காரணமாகவே மயங்கி விழுந்தார் எனக் கூறினார். தற்போது எனது தந்தைக்கு வலது கையும் வலது காலும் பலமில்லாமல் இருப்பதுபோல் கூறுகின்றார். அத்துடன் பேசுவதற்கும் சிரமப்படுகின்றார். இதற்கான காரணம் என்ன? இதை முழுமையாக குணப்படுத்த முடியுமா? யாரை அணுகினால் முழுமையாகக் குணப்படுத்த முடியும்?
பதில்:- அவருக்கு குறைந்த அளவிலான பக்கவாதம் வந்திருப்பதாகவே கருதுகிறேன். முழுமையான பக்கவாதம் எனில் அவரது ஒரு பக்க கையும் காலும் முழமையாக இயங்காதிருந்திருக்கும். அதை ஹெமிபிளிஜியா (Hemiplegia) என்பார்கள்.

உங்கள் தந்தைக்கு 'வலது கையும் வலது காலும் பலமில்லாமல் இருப்பது போல்..' என்று நீங்கள் சொல்வதிலிருந்து அவை இயங்குகின்றன, ஆனால் முழமையான பலத்துடன் அல்ல. அதாவது தசைகள் முழுமையான வீச்சுடன் செயற்படமுடியாதிருக்கிறது. இதை ஹெமிபரீசிஸ் (Hemiparesis) என்பார்கள். ஹெமிபிளிஜியாவில் கை கால்கள் மட்டுமின்றி முகத்தின் தசைகளும் பாதிப்படையக்கூடும். முகத்தின் தசைகளும் சரியான முறையில் இயங்க முடியாததால்தான் அவர் பேசுவதற்கும் சிரமப்படுகிறார்.

பேசுவதற்கு மட்டுமின்றி உண்பது, உடுப்பது, நடப்பது, குளிப்பது, கழிப்பறை செல்வது போன்ற பல நாளாந்த செயற் பாடுகளிலும் சுயமாக இயங்க அவருக்கு முடியாதிருக்கலாம். அவ்வாறெனில் வீட்டில் உள்ளவர்களின் உதவி பெருமளவு தேவைப்படும்.
சிகிச்சையின் முக்கிய அம்சமாக இருப்பது இயங்குவதற்கு சிரமப்படும் பகுதிகளை மீண்டும் உறுதியானதாக்கி செயற்பட வைப்பதுதான். உடற்பயிற்சி (Physiotherapy) சிகிச்சை மூலம்தான் அவரை பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும். இதற்கென நீங்கள் ஒரு உடற்பயிச்சி சிகிச்சையாளரின் உதவியைப் பெற வேண்டும்.

அவரின் உதவியுடன் வீட்டில் உள்ள நீங்கள் அனைவரும் இதற்கான ஒத்தாசையை வழங்க வேண்டும். கை கால்கள் விரல்கள் உட்பட இயங்க முடியாதிருக்கும் அவரது உறுப்புகள் அனைத்திற்கும் தசைநார்களுக்கும் பயிற்சிகள் அளிக்க வேண்டும். இவை இயங்காது என்று எண்ணி அவற்றை கைவிட்டுவிட்டு மற்றப் பகுதியை மட்டும் பாதிக்கப்பட்ட உங்கள் தந்தை முயலக் கூடாது. கூடியளவு பேச்சுக் கொடுத்து அவரைப் பேச வைக்க முயல வேண்டும்.
உங்கள் தந்தைக்கு வலது கையும் காலும் பலமில்லாது இருப்பதாகக் கூறினீர்கள். இயலாத அந்தப் பக்கத்தையே அவர் கூடியளவு உபயோகிக்க முயல வேண்டும். உதாரணமாக முகங் கழுவுவது, பல் விளக்குவது, எழுதுவது, தலை சீவுவது, உடை மாற்றுவது போன்ற அனைத்துச் செயற்பாடுகளுக்கும் இயங்குவதற்கு சிரமப்படும் பகுதியையே முன்னுரிமை கொடுத்து பயன்படுத்த வேண்டும்.

அதேபோல நடக்கும்போதும் பலமற்றதாகத் தோன்றும் வலது பகுதியையே அவர் தூக்கி வைத்து நடக்க வேண்டும். இந்த சிகிச்சை முறையை (modified constraint induced therapy) எனச் சொல்வார்கள் இதைத் தவிர மின் தூண்டல் செய்வதும் பயன் தரும். இதை அதற்கான பயிற்சி உள்ள உடற்பயிற்சி கொடுப்பவர்தான் செய்ய வேண்டும்.

பல துணைச் சாதனங்களையும் (assistive devices) தேவைக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும். உதாரணமாக நடக்கும்போது முழங்கால் தளர்கிறது எனில் அதற்கான முழங்கால் தளைப்பட்டி (Knee brace) உதவலாம். கைத்தடி, சக்கர நாற்காலி, நடக்க உதவும் றுயடமநச போன்றவற்றையும் தேவை அறிந்து பயன்படுத்தவும்.
சில வசதிகளை வீட்டில் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அவர் நாளாந்த நடவடிக்கைகளை இலகுபடுத்தவும், மற்றவர்கள் துணையை குறைத்து தன்னளவில் இயங்கக் கூடிய மனத்துணிவை வளர்ப்பதற்கும் முடியும்.

நடக்கும்போது பற்றி நடப்பதற்கு சுவர்களில் பிளாஸ்டிக் அல்லது இரும்புப் பைப்புகளை பதித்து வைக்கலாம். ரொயிலட் இருக்கையிலிருந்து தானாக எழுவது சிரமம் எனில் சற்று உயரமான ரொயிலட் இருக்கையை வைக்க வேண்டும்.
பிரஸ் பண்ணுவதற்கு கையை அவரால் உயர்த்த முடியாவிட்டால் இடது கையைப் பயன்படுத்த வேண்டாம். பிரஸ்சை ஒரு நீண்ட குச்சியைக் கட்டி வலது கையாலேயே பிரஸ் பண்ணட்டும். இதனால் பாதிப்புற்ற தசைநார்கள் பலம் பெறும்.
பிரஸர் இருந்தால் அதற்கான மருந்தை மருத்துவரின் ஆலோசனையுடன் பயன்படுத்தவும். இதைத் தவிர இது போன்ற பிரச்சனை மீண்டும் வராதிருக்க குருதி உறைதலைத் தடுக்கும் Aspirin, clopidogril போன்ற மருந்துகளையும் கொடுத்திருப்பார்கள். அவற்றையும் தவறாது உட்கொள்ள வேண்டும்.
நன்றி: தமிழ்தகவல்-கனடா



# தேவதை கட்டிய கோயில்





அமரர்
மு.க.சுப்பிரமணியம்
ஸ்தாபகர் வெற்றிமணி 1950

ஒரு நாள் தேவதைகளின் இராணி மற்றத் தேவதைகளை அழைத்து நாம் ஒரு அழகியகோயில் கட்டவேண்டும் அதற்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வாருங்கள் எனக் கட்டளையிட்டது.

உடனே வைரக்கற்கள், முத்துக்கள்,தங்கம், மாணிக்கக்கற்கள், ஆகியவற்றைக் கொண்டு வருவதாகக்கூறி தேவதைகள் சென்றன. கோயில்கட்டுவதற்குத் தேவையான பொருட்களுடன் தேவதைகள் திரும்பின.

இராணி கோயிலைக் கட்ட ஆரம்பித்தது. வைரக்கற்களால் அத்திவாரம் இடப்பட்டது. கதவுகள் முத்துக்களாலும் யன்னல்கள் மாணிக்கக் கற்களாலும் ஆக்கப்பட்டன. கூரை சூரியனின் ஒளிபடும்போது பல்நிறங்களையும் காட்டக்கூடிய ஒருவகைக் கற்களால் வேயப்பட்டது. அழகும், பிரகாசமும் மிக்க கோயில் கட்டி முடிக்கப்பட்டது.

எல்லாத் தேவதைகளும் அந்தக் கோயிலைச் சுற்றி நடனமாடின. களைப்படைந்த தேவதைகள் இராணியிடம் சென்று அழகிய கோயிலைக் கட்டித் தந்தமைக்கு நன்றி கூறினர்.

இதுதான் உலகத்திலேயே அழகுள்ள கோயில் என்றது ஒரு தேவதை. அப்படியல்ல மனிதர்கள் இதனிலும் பார்க்கச் சிறந்த கோயிலைக் கட்டக் கூடிய சக்தியுள்ள வர்களாக இருக்கின்றார்கள் என்றது ராணி.

யாம் கட்டிய கோயிலிலும் ஆழகாக மனிதர்கள் கட்டியதை யான் காணவில்லையே அவர்கள் கற்களாலும் செங்கட்டிகளாலும் மரங்களாலும் அல்லவா கட்டுகின்றனர் என்றது ஒருதேவதை.

இராணியோ புன்சிரிப்புடன் யான் கூறும் கோயிலை நீங்கள் அது எமது கோவிலிலும் பன்மடங்கு சிறந்தது.
அழியாதுநிலைத்து நிற்கக் கூடியது. புயல், மழை,பனி இவை எல்லாம் எமது கோவிலைஅழித்துவிடும். ஆனால் மனிதர்கள்கட்டும் கோவிலை இவை அழிக்கவேமுடியாது என்றார்..
.
எல்லாத் தேவதைகளும் ஒருமித்த குரலில் ,எங்களுக்கும் அந்தக் கோயிலைப் பற்றிக்கூறுங்கள், என்றன
சரி கூறுகின்றேன்.

அக்கோவிலின் பெயர்

**குணம்**

நற்குணம்தான் மனிதனுக்கு கோயிலைப்போன்றது. அவர்கள் உபயோகித்த

கற்கள் நாம் உபயோகித்த கற்களிலும் பார்க்கச் சிறந்தவை. சிலவற்றைக் கூறுகின்றேன்.

**உண்மை**

உண்மை வைரக்கல் போன்றது. இதுதான் அவர்களது கோயிலின் அத்திவாரமாகும். உண்மையின்றி எந்த நற்குணத்தையும் ஆக்கமுடியாது.

**நேர்மை கீழ்ப்படிவு**

இன்னும், நேர்மை கீழ்ப்படிவு என்பனவும் உண்டு. தேவதைகள் கொண்டு வந்த தங்கத்தைப் போன்று உண்டு. இந்த அன்பே மற்ற யாவற்றையும் ஒன்றாய் இணைப்பது. என்றது இராணி உடனே எல்லாத் தேவதைகளும் உண்மை தான் அவர்கள் கோயில் சிறந்ததுதான் என்றன.

**குணக்கோயில்**

ஒவ்வோரு சிறுவனும், சிறுமியும் கோயில் கட்டவேண்டும். அக்கோயில் தான்.குணக்கோயில். நீங்கள் யாவரும் அவர்கள் இக் கோயிலைக்கட்ட உதவ வேண்டும் என்றது இராணி.

இதோ இப்பொழுதே உதவி செய்கின்றோம் என்று கூறியபடி பறந்தன தேவதைகள் சிறுவர் சிறுமியரை நாடி..










அனைவருக்கும் எங்கள் இனிய மேதின வாழ்த்துக்கள்

# மூத்தோர் சொல்லும், முதிர் நெல்லிக்கனியும்



மனித நாகரிகம் எங்கு செல்கிறோம் என்ற நோக்கங்கள் இன்றி பல விடயங்களில் கால் போன போக்குக்கு பயணித்துக் கொண்டிருப்பதையே இன்றைய சமுதாயத்தில் காணக்கூடியதாக உள்ளது. இதனால் சலிப்போடும், மன உழைச்சலோடும் வாழ்வை கடமைக்காக வாழ்கின்ற இளையோர்களின் பரிதாப நிலையை எங்கும் அவதானிக்க முடிகிறது.

கலை, கலாச்சாரம், காதல், வீரம் என்று வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் திகட்டத் திகட்ட எம் முன்னோர்களால் எப்படி தித்திப்போடு வாழ முடிந்தது? ஒரு நாளின் இருபத்து நான்கு மணித்தியாலங்கள் எப்படி இன்றைய சமுதாயத்திற்கு மட்டும் போதாமல் இருக்கின்றது? முன்னோர் தம்மையும் பார்த்து தம் சந்ததிகளுக்கும் சேர்த்து வைத்த சொத்தில் ஒரு சிறு பகுதியைக் கூட ஏன் இன்றைய சமுதாயத்தினரால் உருவாக்க சிரமமாக உள்ளது? இவை எல்லாவற்றிற்கும் உரிய ஒரே காரணம் வாழ்வின் அத்தியாவசியங்களின் புரிதல்களில் ஏற்பட்ட மாற்றங்களேயாகும். முன்னோர்கள் தமக்கான அத்தியாவசியங்களை புரிந்து கொள்வதிலும், அவற்றிற்கு எதிரான விடயங்களிலிருந்து தப்பிப் பிழைப்பதையும் ஒவ்வொருவரும் நன்கு அறிந்து வைத்திருந்தமை மட்டுமன்றி வாழும் கலையையே பிரதான கல்வியாகவும் கொண்டிருந்தனர். அவற்றை தம் மரபுவழி சந்ததிகளுக்கு கற்றுக் கொடுப்பதையும் தலையாய கடமையாகவும் கொண்டிருந்தனர்.

இன்றும் பொதுவாக நன்கு வயதில் மூத்த ஒருவராவது கிராமத்து வீடுகளில் முதன்மை மரியாதைகளோடு நடத்தப்படுவார். அவருடைய சொல்லுக்கு மொத்தக் குடும்பமும் கட்டுப்படும். பாடசாலைக் கல்வி தவிர இவரிடமிருந்து இவரது சந்ததிகள் கற்றுக் கொள்கின்ற விடயங்களே மிக அதிகமாகவும், முழு நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கும். மிகப்பெரிய விசக்காச்சல் பீடித்தாலும் கூட வீட்டிலே கிடைக்கும் கசாயத்தோடு அதிலிருந்து விடுதலை கிடைத்துவிடும். சாதாரண சளிக்காச்சலுக்கே இன்று மருத்துவரிடம் சென்று மணிக்கணக்கில் காத்திருக்கின்றோம். அதிக மன உளைச்சல் காரணமாக பெரியவர்களோடு நேரம் செலவழிக்க முடியாமலும், அவர்கள் ஏதாவது பேசிவிட்டால் கடும் வாக்குவாதங்களும் புரிவது மட்டுமன்றி அவர்களை பாரம் என்று ஒதுக்குகின்ற அளவுக்கு குறுகி விட்டது வாழ்வியல். களஞ்சியங்கள், தானியக்கிடங்கு, பண்டமாற்று, பலகாரம், கொண்டாட்டம் என இருந்த சமுதாயம் இன்று திண்டாட்டமான வாழ்வோடு திக்குமுக்காடுகிறது. குறுகிய காலத்திற்குள் ஏற்பட்ட மனித மேம்பாட்டு வீழ்ச்சியை தடுக்காமல் போனதற்கு காரணங்கள் சிலவற்றைத்தான் முன்வைக்க முடியும்.

முக்கியமானது கற்றலில் உள்ள நவீனத்துவத்தால் மூத்தோருக்கும் இளையோருக்கும் இடையிலான இடைவெளி. பெரும்படிப்பு என்ற பெயரில் மூத்தோர்களின் புரிதல்களுக்கு அப்பால் இவை இருப்பதனால் இளையோருடனான அறிவியல், அனுபவ உரையாடல்கள், நெருக்கங்கள் வெகுவாகக் குறைந்து போனது. முன்னைய காலத்தில் எந்தவொரு கல்வியை இளையோர் கற்பினும் அதை ஓரளவிற்கேனும் இதுதான் கற்கின்றனர் என்ற புரிதலாவது மூத்தவர்களிடம் இருந்தது. இன்றைய நிலையில் தாய், தந்தையர் கூட தம் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள் என்று புரிந்து கொள்வதற்கே மிகவும் சிரமப்படுகிறார்கள். இதனால் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்களும் மிக அத்தியாவசிய தேவை கருதியே சுருக்கமாக இடம்பெறுகிறது. முதியவர்கள் வீட்டின் எங்கோ ஒரு மூலையில் தம் வாழ்நாளில் கழித்த காலங்களை தமக்குள் அசைபோட்டபடி வாழ நேர்கிறது.



கரிணி


வாழ்க்கை என்றால் என்ன?
சுருக்கமாக விடை கூறவேண்டுமாயின் வாழ்க்கை என்பது "உயிர் வாழ்தல்" ஆங்கிலத்தில் "life is a fight for survival" என்று கூறுவார்கள். எந்த உயிரியும் தான் தப்பிப் பிழைப்பதையே அன்றாட செயலாகக் கொண்டுள்ளது. அதற்கு எதிரான விடயங்களோடு போராடி தனக்கானதைப் பெற்றுக் கொள்கிறது, எதிர் அழுத்தம் அதிகமாகும் போது அது புரட்சியாக மாறுகிறது. புரட்சி புதுமையை புகுத்தலாம் ஆனால் வாழ்வில் உள்ள பசுமையை அழித்துவிடக் கூடாது. இன்றைய நிலையில் வாழ்விலும், மனதிலும் வறட்சியால் வாடுபவர்களே அதிகம் எனலாம்.
வாழ்வில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர்கள் தாம் அனுபவித்து தெளிந்ததையே மரபுவழியாக பழமொழிகள், பொன்மொழிகள் என்று தந்து விட்டுச் சென்றனர். இனிவருகின்ற சமுதாயம் அதை ஏறெடுத்துப் பார்க்குமா என்பதே பெரிய கேள்விக்குறியாக உள்ளது. ஒரு பாதையின் கடினத் தன்மையை, நெளிவு சுழிவுகளை நாமே பயணித்து படிப்படியாக அனுபவம் பெறுவதைக் காட்டிலும் அதில் பயணம் செய்தவர்கள் கூறிய அறிவுரைகளின் படி பயணிப்பது வெகுவாக சிரமங்களைக் குறைக்கும். மூத்தோர்கள் எப்போதும் நம்பிக்கை மிகுந்த அரிய புத்தகங்கள் நிறைந்த நூலகம் போன்றவர்கள். அவர்களது அறிவுரை அனுபவம் சார்ந்தது.

பழமொழிகளில் உதாரணமாக:-
அந்தி ஈசல் பூத்தால் அடை மழைக்கு அச்சாரம்.
தும்பி பறந்தால் தூரத்தில் மழை.
எறும்பு ஏறில் பெரும் புயல்.
மார்கழி மழை மண்ணுக்கு உதவாது.
தையும் மாசியும் வீடு மேய்த்து உறங்கு.
வெள்ளமே ஆனாலும் பள்ளத்தே பயிர்செய்.
காணி தேடினும் கரிசல்மண் தேடு.
களர் கெட பிரண்டையைப் புதை .
கெட்ட நிலத்துக்கு எட்டு வன்னி கெட்டகுடும்பத்துக்கு எட்டு வெள்ளாடு.
நன்னிலம் கொழுஞ்சி நடுநிலம் கரந்தை கடைநிலம் எருக்கு.
களரை நம்பி கெட்டவனும் இல்லை மணலை நம்பி வாழ்ந்தவனும் இல்லை.
கோரையை கொல்ல கொள்ளுப்பயிர் விதை
ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
கடன் இல்லாக் கஞ்சி ஒரு வயிறு போதும்.
தன் வீட்டு விளக்கென்று முத்தமிடலாமா?

இப்படியான அனுபவ அறிவுகள் மரபுவழி வந்தவை. இவற்றை எல்லாவற்றையும் தாமே உணர்ந்து அறிவதற்கு ஒருவரது ஆயுட்காலம் போதாது. வீடுகளில் வயதானவர்கள் மேற்பார்வையில் வளரும் குழந்தைகள் பொறுமை, பக்குவம், தெளிவு என மிகவும் அனுபவசாலியாக பின்னாளில் பிரகாசிப்பார்கள் என்பதே உண்மை "உனக்கு ஒன்றும் தெரியாது" என்ற ஒற்றை வரியில் பெரியவர்களை மௌனமாக்கிவிடும் இளையவர்கள் மிகப்பெரும் இலவசமான கற்றலை இழக்கின்றனர் என்றே கூற வேண்டும்.
சில பெரியவர்கள் இளையோர்களின் உணர்திறன், விருப்பு வெறுப்புகளை ஆராயாமல் தமது விருப்பங்களை வில்லங்கமாகத் திணித்து இளை யோர்களின் அதிருப்திக்கு ஆளாகுவார்கள். இதில் பெரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும். காலத்தால் மாறுபடாத நல்ல விடயங்களிற்கு முதன்மை கொடுத்து பழக்கப்படுத்துதல் வேண்டும்.
மூத்தோர்கள் சொல்லும் முதிர்ந்த நெல்லிக் கனியும் முன்பு கசக்குமாம், பின்னர் மிகவும் இனிக்கும் என்று சும்மாவா சொன்னார்கள்?



# மோனாலிசா - உலகத்தையே திரும்பிப் பார்க்கவைக்கும் பேரழகி!




## தனசேகர் பிரபாகரன்

காதல் இருக்கும் இடத்தில் தான் கலைகள் செழிக்கும், காதலிக்காமல் கவி பாடவும், தூரிகை எடுத்து தீட்டவும் முடியுமோ? காதலித்துப்பாருங்கள் அன்றாடம் நாம் பேசும் பேச்சு கூட அழகாகும், ஒரு கவிஞனோ எழுத்தாளனோ அவன் வாழ்க்கையை க.மு க.பி என்று பிரிக்கலாம், காதலிப்பதற்கு முன் காதலிப்பதற்கு பின்...!
உலகத்தின் காதல் நகரம், ஆனால் காதலியில்லாமல் பாரிஸ் நகரில் சுற்றுவது ஒரு துரதிஷ்டவசமான ஒன்று தான்.
பாரிஸ் நகருக்கு வந்தால் ஈபிள் கோபுரத்தை பார்ப்பது எவ்வளவு முக்கியமோ அதே போன்று முக்கியமானது அந்த உலக அழகியை பார்ப்பது !

கைகளில் ஓடும் ரேகைகையை விட அந்த இரண்டு நாட்கள் பாரிஸ் ரேகை தான் முக்கியமாக தெரிந்தது, தேடித் தேடி பார்ப்பதிலும் ஒரு அலாதியான இன்பம் இருக்கதான் செய்கிறது.
பாரிஸில் லூவ்ர் அருங்காட்சியகம் நோக்கி, ஆம் நான் முன்னம் சொன்ன அழகி அங்குதான் குடியிருக்கிறாள். இவளது சிரிப்பின் ரகசியத்தை உலகமே அறிந்து கொள்ள ஆவலாய் இருக்கிறது, மந்திர புன்னகை புரியும் மாது டாவின்சியின் கைவண்ணம் "மோனா லிசா".

இவளை பார்க்காதவர் கூட அழகிற்கும் ஓவியத்திற்கும் எடுத்துக்காட்டாய் இவளை கூறுவது வழக்கம் !
லூவ்ர் அருங்காட்சியகம் - உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகங்களில் ஒன்று, ஓடி ஓடி பார்த்தாலும் ஒரு வாரம் போதாது, கூட்டமும் அதிகம் அதனால் பாரிஸ் வரும் முன்பே முன்பதிவு இணையத்தில் செய்துவிட்டு நுழைவுசீட்டு பெற்றாகிவிட்டது, இதனால் சுமார் இரண்டு மணிநேரம் வரிசையில் நிற்பதை தவிர்க்கலாம் !

பெரிய நுழைவாயிலில் எட்டி வைத்து நடந்து உள்சென்றால் திறந்த வழியில் கண்ணாடி பிரமிடும், பதினாறாம் லூயி மன்னரின் சிலையும் தூரத்தில் சிறிதாக ஈபிள் கோபுரமும் கண்ணில் படுகின்றன. அந்த பிரமிடின் கீழே தான் அருங்காட்சியகத்தின் நுழைவு வாயில், கீழ்தளமும் மேல்தளமுமாக பிரமாண்டமாய் விரிந்து நிற்கிறது லூவ்ர்.
ஐரோப்பிய மறுமலர்ச்சி காலத்தில் முக்கியமானவராக கருதப்பெறும் டாவின்சி,அவரது கைவண்ணமே இந்த மோனா லிசா, கியோர்கியோ வசாரி என்பார் எழுதிய குறிப்பிலிருந்து பிரான்சிஸ்கோ டெல் கியோகாண்டோவின் மனைவியை ஓவியமாக டாவின்சி வரைந்தார் என்று கருதப்பெறுகிறது,

மோனா என்பது மடோனா அல்லது மேடம் என்ற சொல்லுக்கு இணையாக கருதப்பெறுகிறது.


தனசேகர் பிரபாகரன்

இந்த ஓவியம் பிரெஞ்சு தேசத்தில் இருந்தது, ஒரு காலத்து அந்த அருங்காட்சிய காவலராலேயே திருடப்பட்டு இத்தாலிக்கு கொன்று செல்லப்பட்டது.
இந்த ஓவியம் ஆறு பிரதிகள் எடுத்து விற்கப்பட்ட செய்தியும் உண்டு, முடிவில் 1931 இல் மறுபடியும் இந்த ஓவியம் பாரிஸின் லூவ்ர் அருங்காட்சியகத்திற்கு மறுபடியும் கொண்டுவரப்பட்டட்து.

இன்று கண்ணாடிக்கூண்டில் மிகவும் பாதுகாக்கப்பட்ட இடத்தில் மந்திரப்புன்னகையால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஆறு மில்லியன் மக்களை தம்பால் இழுக்கிறாள் இந்த மோனா லிசா. 2005ம் ஆண்டு வரை, ஒளி உமிழும் விளக்கு மூலம் காட்சிப்படுத்தப்பட்ட சித்திரம், அதற்கு பின்னர் வந்த காலங்களில், அதிக திறன் கொண்ட ஒளி உமிழும் விளக்கு மூலம் காட்சிப்படுத்தப்பட்டது. மேலும் அகச்சிவப்பு மற்றும் புற ஊதாக் கதிர்கள் தாக்கப்படா வண்ணம் வடிவமைத்தருந்தனர்

அருங்காட்சியத்தில் உள்நுழைந்தவுடன் முதலில் தேடியது இந்த மோனாலிசாவின் இடத்தை தான், ஏன் அங்கு வந்த பாதிக்கூட்டம் அந்த ஓவியத்தை நோக்கித்தான் படையெடுத்தது, ஆங்காங்கே வழிகாட்டி மோனலிசா இருக்குமிடத்திற்கு நம்மை அழைத்து செல்கின்றன, மைக்கலாஞ்சிலோ சிற்பங்கள் தாண்டி, கிரேக்க சிலைகள் தாண்டி மாடியேறி சென்றால் விரிந்து பரந்த க்ராண்ட் காலரியில் மக்கள் ஆர்ப்பரித்து பார்த்து நிற்கும் மோனா லிசா.



பாரிஸில் லூவ்ர் அருங்காட்சியகம்

கூட்டம் அலைமோதுகிறது ஒவ்வொருவரும் அருகே சென்று அவளை தம்முடைய கைப்பேசிகளில் படமெடுத்து கொண்டு செல்ல முந்துகின்றனர், சிலர் செல்பிக்கள் எடுத்துக்கொள்கின்றனர், பலத்த பாதுகாப்பு, எப்போதுமே இரண்டு காவலர்கள் கையில் துப்பாக்கியுடன் நிற்க, ஒளிக்கதிர்கள் கூட பாதிக்காத கண்ணாடிக்கூண்டில் மந்திரப்புன்னகை அழகி மெல்ல சிரித்துக்கொண்டிருக்கிறாள் !
படத்திற்கும் நேரில் பார்ப்பதற்கும் சிறிது வித்தியாசம் இருக்கதான் செய்கிறது லூவரில், ஆனால் அதே பிரம்மாண்டம் சற்றும் குறையாமல், நாவலின் வரிகளும் திரைப்படத்தின் காட்சிகளும் கண்முன்னே வந்து செல்கின்றன, வரிசையில் நின்று கடைசியில் அந்த அழகுத் திருமுகத்தை நானும் கண்டுவிட்டேன். காதல் நகரம் பாரிஸ் செல்பவர்கள் கட்டாயம் இவளையும் பார்த்து வாருங்களேன் !






# கடவுச்சொல்

கே.எஸ்.சுதாகர்

**சிறுகதை**

சுரேந்தருக்கு 15 வயதாகிவிட்டது. கடந்த மாதம் தான் அவன் தனது பதினைந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடினான். நீண்ட நாட்களாகத் தனக்கொரு ஐ - போன் வாங்கவேண்டுமென்று விருப்பம் கொண்டிருந்தான். அவனது தாயார் அதற்கெனவே சிறுகச் சிறுகப் பணம் சேமித்திருந்தார். அவனது பிறந்தநாள் அன்று, சுரேந்தர் ஆச்சரியப்படும் விதத்தில் அவனது பரிசுப்பொருள், ஐ - போன் கிடைத்தது. அது முதல் கொண்டு, உறங்கும் நேரம் தவிர்ந்த ஏனைய பொழுதுகளில் எல்லாம் அவனது கைகளில் ஐ-போன் தவழ்ந்து விளையாடியது.

நேற்று, சனிக்கிழமை அவனது பள்ளி நண்பன் சுதேஷின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக அவனது வீட்டிற்குச் சென்றிருந்தான். சுதேஷ் பிஜி தேசத்தைச் சேர்ந்தவன். அவனின் வீட்டிற்கு, முன்பும் பல தடவைகள் சென்றிருக்கின்றான். பிறந்தநாள் கொண்டாட்டம் தடல்புடலாக நடந்து கொண்டிருந்தது. ஆண்களும் பெண்களுமாக அவனது வயதையொத்த நண்பர்கள் கூச்சலும் கும்மாளமுமிட்டவாறே இருந்தார்கள். கேக் வெட்டியாயிற்று.

அதன்பின்னர் டிஸ்க்கோ நடனம் ஆடுவதற்காக கராஜ் சென்றார்கள். வெளியே இருட்டு மெல்ல ஆக்கிரமித்திருந்தது. சுதேஷ் கராஜ் கதவை றிமோற் கொன்ரோலரினால் திறந்து வைத்தான். கீச்சாமாச்சா என்று சத்தமிட்டவாறே நண்பர்கள் உள்ளே சென்றார்கள். அங்கே டிஸ்க்கோ ஆட்டத்திற்கான மின்விளக்குகள் ஏற்கனவே அலங்கரிக்கப்பட்டிருந்தன. பல வர்ணங்கள் கொண்ட அதற்கென வடிவமைக்கப்பட்ட, வட்ட வடிவமான பெரிய மின்குமிழ்கள் கூரையின் மேலே தொங்கிக் கொண்டிருந்தன. பட்டை தீட்டப்பட்ட இரத்தினக்கற்கள் போல ஒளிர்வதற்காக அவை காத்திருந்தன.

அவற்றை ஒளிரவிடுவதற்காக ஏற்கனவே ஒளிர்ந்துகொண்டிருந்த மின்விளக்கை அணைத்தான் சுதேஷ். 'டிஸ்க்கோ லைற்'றின் ஆளியை அழுத்துவதற்குள் இடைப்பட்ட நொடி நேரத்தில், ஏழெட்டு அந்நிய இளைஞர்கள் சரசரவென உள்ளே நுழைந்தார்கள். இருளோடு இருளாகக் கலந்தார்கள். அவர்களின் நிறமும் இருளை ஒத்திருந்தது. சூடான் எதியோப்பியா சோமாலியா இவற்றுள் ஏதாவதொரு நாட்டைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். டிஸ்க்கோ வெளிச்சத்தில் சிவப்பு பச்சை நீலம் மஞ்சள் என்று கடும்கலரில் அவர்களின் ஆடைகள் இருந்தன.

கராஜ்ஜின் உள்ளேயிருந்தவர்கள் திகைப்பில் இருந்து விடுபட முன்னர், வந்தவர்கள் அன்பாக அவர்களின் முதுகை அணைத்துத் வருடியபடி அவர்களின் ஜீன்ஸ் பொக்கற்றுக்குள் கையை நுழைத்துத் தேடுதல் வேட்டையில் இறங்கினார்கள். சலசலப்பு ஆரம்பிக்கத் தொடங்குகையில் சிலரின் ஐ - போன்கள் மாயமாய் மறைந்தன. சுதேஷ் சத்தமிட்டவாறு வீட்டிற்குள் ஓடினான். பொலிஷிற்கு போன் செய்வதற்குள் அவர்கள் நழுவி விட்டார்கள். நிராயுதபாணியாக வந்தவர்கள், போகும்போது ரொக்கத்துக்கு அதிபதியாகப் போய்விட்டார்கள்.

சுரேந்தருக்கு எங்கிருந்தோ துணிவு பிறந்தது. நாலாபக்கமும் சிதறி ஓடியவர்களின் பின்னால் துரத்தியபடி ஓடிச் சென்றான். சுரேந்தருக்கு தனது பொக்கற்றுக்குள் கையை நுழைத்தவனை நன்றாக ஞாபகம் இருந்தது. அவனின் திசை நோக்கி மன்றாடிக் கெஞ்சியபடி ஓடினான்.

"அண்ணா! எத்தனையோ வருஷமாகச் காசைச் சேர்த்து வாங்கின போன். தயவு செய்து தா அண்ணா!" ஆங்கிலத்தில் அழுதழுது துரத்தினான் சுரேந்தர். கல்லையும் கரைக்கும் அவனது குரல் கேட்டு ஓடியவன் நின்றான். ஆடவில்லை, அசையவில்லை. சுரேந்தர் கிட்ட வரும் வரைக்கும் பொறுமையாக நின்றான் அவன். கிட்ட வந்ததும் கன்னத்தைப் பொத்தி ஒரு அறை போட்டான். சுரேந்தர் நிலை குலைந்து கீழே விழுந்தான். அவனைத் தூக்கி நிறுத்தியவன்,



"பாஸ்வேர்ட்டைச் சொல்லு" என்றான்.

கடவுச்சொல் என்பது கடவுள் மாதிரி. அதை எப்படிச் சொல்ல முடியும்? அங்குமிங்கும் பார்த்தான் சுரேந்தர். "முடிஞ்சால் தேடிப்பிடி" சொல்லிவிட்டு, அவனை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு சுதேஷின் வீடு நோக்கி திரும்பி ஓடினான்.

இந்நேரம் சுதேஷ் பொலிஸை வரவழைத்திருப்பான்'.

இருளிற்குள் ஒரு மரத்தின்கீழே முனகல் சத்தமொன்று கேட்டது. குனிந்து பார்த்தான். சுதேஷ் தலையைப் பிடித்தபடி இருந்தான். அவனது காதிற்குள்ளால் இரத்தம் வடிந்தபடி இருந்தது.
"ஓடி வாருங்கோ.... எல்லாரும் ஓடி வாருங்கோ" சத்தமிட்டான் சுரேந்தர்.

"என்ன நடந்தது?" சுரேந்தர் அவனைக் கேட்டான்.
"ஐ - போனின்ரை பாஸ்வேர்ட் கேட்டான். சொல்லேல்லை. அதுதான் அடிச்சுப்போட்டு ஓடிவிட்டான்" என்றான் சுதேஷ். சுரேந்தர் தன் காதுகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.


வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்.யேர்மன்.பிரஞ்.துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

Frankfurt நகரில்....

# Jaffna Bazar

அட்ஷய திருதியை முன்னிட்டு விஷேட விலைக்கழிவுகள்



உங்கள் பழைய நகைகளைத் தந்து
2019 ஆண்டின் புதிய டிசைன் நகைகளைப் பெறுங்கள்!

**தங்க நகைகள்**
**தரமானவை மட்டும்**
**என்றும் எம்மிடம்**
**கிடைக்கும்**




உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான
மரக்கறி மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்
வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்

Kaiser Straße.49
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353
e.mail:jbspiece2018@yahoo.com

0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425


அனைவருக்கும் எங்கள் இனிய மேதின வாழ்த்துக்கள்

# நாளை என்பதும், இல்லை என்பதும் ஒன்றே!




ஒன்றே செய், நன்றே செய், அதுவும் இன்றே செய்.
அப்பாவோ அம்மாவோ அல்லது ஒரு நண்பரோ உங்களிடம் ஒரு வேலையைச் செய்யச் சொன்னால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்.
உங்களுக்கு பிடித்த வேலை என்றால் ஓம் இப்பவே செய்கிறேன் என்பீர்கள். கொஞ்சம் பிடிக்காத வேலை என்றால் நாளை செய்கிறேன் என்பீர்கள்.

இந்த வேலை இரண்டுமே நல்லவேலையாகக்கூட இருக்கலாம். ஆனால் உங்கள் மனம் அந்த வேலையை ஒரு வேலையாக மட்டும் பார்க்கும்போது நாளை என்றும். அதனை ஒரு சுகமாகப் பார்க்கும் போது இப்போதே என்றும் முடிவு எடுக்க வைக்கின்றது.

உங்களுக்கு கடினமான ஒரு வேலையாக இருந்தால் அதனை முதலில் செய்யவேண்டும். அதனை முடித்துவிட்டால் உங்கள் மனம் இலேசாகிவிடும். அதன் பின் பாடிப்பாடி உங்களுக்குப்பிடித்த வேலையைச் செய்யலாம்.
நாளை என்பதும் இல்லை என்பதும் ஒன்றே என்று நம்மூரில் ஒரு பழமொழி உண்டு, எனப் பெற்றோர்கள் சொல்வதுண்டு. இந்த அனுபவ வார்த்தைகள் உண்மையில் யதார்த்தமானவையே.
ஒரு வேலையைத் தொடங்குவதுதான் கடினம். தொடங்கிவிட்டால் பாதிவேலை முடிந்தமாதிரி. உங்களுக்கு பிடித்தவருக்கு ஒரு கடிதம் எழுதுவது என்றால் அது வேலையா? அது சுகம். பக்கம், பக்கமாக எழுதுவோம். ஆனால் ஒரு விசாவிற்கு ஒருவிண்ணப்பப்படிவம் உங்கள் பெற்றோருக்கு நிரப்ப வேண்டும் என்றால், சொல்லத்தேவை இல்லை.
எனக்கு ஆயிரம் வேலையிருக்கு இப்ப இது செய்வது கஸ்டம் என்று, சொல்லும்போதே கைத்தொலைபேசியில் விரல்கள் நோண்டும்.



றஜினா
தருமராஜா

அன்பு அதனை அக்கணமே காட்டி விடவேண்டும். அன்பானது பிற்போடவேண்டிய காரியமல்ல. பெற்றோரிடம் காட்டும் அன்பாக இருந்தாலும் சரி, மற்றைய மனிதருக்குக் காட்டும் அன்பாக இருந்தாலும் சரி அன்றே காட்டவேண்டும்.
பெற்றாறோர்கள் ஒரு நாள் இல்லாத சமயத்தில் தாங்க முடியாத வேதனை உண்டாகிவிடும்.
சரியான நேரத்தில் காட்டவேண்டிய அன்பினைப் பிற்போட்டுப் பின் தவிக்காதீர்கள்.

உண்மையில் உங்கள் அன்புக்கு பாத்திரமானவர்களுக்கு உங்களால் முடிந்ததைச் செய்வது, அவர்களுக்கு நீங்கள் செலுத்தும் மரியாதை. அதுவே பேரன்புமாகும். இந்த அன்பை நீங்களும் சுமந்தபடி செய்வீர்களானால் நாளை என்ற சொல் மறைந்து, இன்று எனும் பூக்கள் உங்கள் முன் பூத்துக்குலுங்கும்.

மனதில் ஒன்றைச் செய்வேண்டும் என ஓர் ஆசை வந்துவிட்டால் அதனை நாளை என்று பிற்போடாமல், அதே நாளில் நிறைவேற்றி விடுங்கள். நாளை ஒருவேளை உங்களால் முடியவில்லை என்றால் மிகவும் வேதனையாக இருக்குமல்லவா?

அன்பு, பாசம், காதல், நட்பு, தொழில், கல்வி, தொண்டு, கடமை, பணி எல்லாவற்றையும் சரியான நேரத்தில் செய்ய வேண்டும். பிற்போட்டு ஏமார்ந்தும் ஏமாற்றியும் விடாதீர்கள். வேலைகளைப் பிற்போடுவதால் கடைசியில் பல வேலைகள் குவிந்து எதனைச் செய்வது என்று தெரியாது பெரும் மனவழுத்தத்திற்கு உள்ளாகிவிடுவோம். இது மாணவர்களாக இருந்தாலும் சரி, வளர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இவை பொருந்தும். எமக்கு காரணமின்றி வரும் பல நோய்களுக்கு இந்த மன அழுத்தமே காரணம்.

தொழிலும், கல்வியும் நம் வயதும் நேரமும் ஓடுமுன் நிறைவேற்ற வேண்டியவை. கற்கவேண்டியதுக்கு வயதெல்லை இல்லை. ஆனால் சில வற்றுக்கு வயதும் அவசியம்.
தொண்டு, கடமை மற்றும் பணி என்பதும் நாம் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டும். வரும் வாய்ப்பினைப் பின் போடவேண்டாம். இவைகளை நாம் கைவிட்டுவிட்டால் நாம் உதவ முடியவில்லை என்று பின் ஒரு நாள் வருந்துவோம்.

பொறுமை என்பது இருப்பது நன்று. ஆனால் அதுவே சோம்பல் என்று ஆகிவிடக்கூடாது.

ஆகவே நன்றே செய் அதை இன்றே செய்!






## நெடுந்தீவு முகிலனின்




சிலரது அன்பு பனித்துளி போன்றது.
சூரியன் வரும் வரை தான் – அது
புல்லோடு வாழும்.

தூக்கி எறிவதால் உங்களை புரிந்து
கொள்ளவில்லை என்று வருந்தாதீர்கள்.
அவர்களுக்கு வேறு ஒருவரை பிடித்திருக்கலாம் !

பிடித்தவர்களை அவர்களின் விருப்பம் போலவே வாழ விட்டுப் பாருங்கள். விரைவில் அவர்களையே விலக நேரிடும் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப்பவே !

உலகத்தை உண்மையாக நேசிப்பவர்கள்
மரணத்தைப் பார்த்து பயப்படுவது இல்லை
அதனால் பிரிவு ஏற்படுகிறது என்றே வருந்துகிறார்கள்.

பலர் கூட இருந்தாலும் பயனில்லை…
பறிக்கப்பட்டு விடும் புன்னகை சிலர் விலகினாலே போதும்
சொந்தமாகி விடும் கண்ணீர்.



பிடித்து இருக்கிறது என்பதால்
யாரும் மேலதிக விளக்கம் கொடுக்க முனையாதீர்கள்
நேசம் என்பது எந்த எதிர்பார்ப்புகளும் அற்றது.

வெள்ளம் அதிகமாகி விட்டால் எப்படியாவது
அணை உடைந்து தானே ஆக வேண்டும்.
எவ்வளவுதான் அடக்கி வைத்திருந்தாலும்
சிலரிடம் பேசும் போது மட்டும் கண்ணீர் பெருக் கெடுத்து ஓடும்.

நிழலைப் போன்றது தான் நம்மோடு இருக்கும் உறவுகளும் …
சேர்ந்து வரும் பின்னுக்கு வரும் சில வேளை முன்னோக்கி போகும்
இருள் என்றாள் இல்லாமலே போய்விடும்.

சொல்லி புரிய வைக்க முடியாதது வேதனை வாழ்க்கையின் எந்த நிலைக்கு போனாலும் அதை அனுபவித்தவன் ஒருபோதும் மறக்க மாட்டான்




மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை
நீங்கள் நினைக்க ஆரம்பித்து விட்டால்…
நீங்கள் உங்களை இழந்து விடுவீர்கள்.

## அழகு

அழகுக்காக மட்டுமே
ஒன்றை அடைந்து விடாதீர்கள்
முதலில் அதன் கவர்ச்சி
பிரமிப்பை ஏற்படுத்தும்
பிறகு அதை விட நீங்கள்
இன்னொன்றை ரசிக்கும்போது
தன்னிலை மறந்து விடுவீர்கள்.





# விழுறைக்கு ஊருக்குப்போனால் பனைமரத்தைச் சுற்றி வாருங்கள்.

## பனைமரத்தினால் கிடைக்கும் பயன்கள் மற்றும் மருத்துவ குணங்கள்





நம்நாட்டின் இயற்கைச் செல்வங்களுள் சிறப்பானது பனைச்செல்வம். இதை வற்றாத புதையல் என்றே கூறலாம். பனைமரத்தின் ஒவ்வொரு பாகமும் ஆதிகாலம் தொட்டே பயன்பட்டு வருவதால் பழங்கால மக்கள் பனையை கற்பத்தரு என போற்றினர்.
பனைமரம் பாலை விட்டு காய்க்க தொடங்கினால், அந்த பாலையிளிருந்து பதநீர் எனும் தெலுவு கிடைக்கும், அதே தெலுவில் சுண்ணாம்பு அடிக்காமல் விட்டால் அது சுவையானதாகவும், அதே நேரம் கொஞ்சம் போதையுடன் கூடிய இயற்கையான கள் என்ற பானம் கிடைக்கும்.

கொஞ்சநாள் கள்ளு இறக்கிய பின்னர் வளரும் பாளையில், பனங்காய் காய்க்கும், இந்த காய்களில் தான் குறிப்பிட்ட பருவத்தில் நொங்கு கிடைக்கும். அதற்கு அடுத்த கட்டமாக, காய்கள் கொஞ்சம் முதிர்ந்த பின்னர் சேவாய் என்று சொல்லப்படும் முற்றிய பணங்காயிலிருந்து சதை பகுதியை கத்தியால் சீவி எடுத்து வேகவைத்தும் உண்ணலாம்.

அதற்கு பின்னர், பழுத்து கனிந்தால் பனம்பழம் கிடைக்கும், பழத்தை உண்டு விட்டு போடும் கொட்டை முளைவிட்டு வளரும், கொஞ்ச நாட்கள் போனால் கொட்டைக்குள் உருவாகும் சீப்பை கிடைக்கும், இந்த சீப்பை குழந்தைகள் உண்பதற்கு சுவையாகவும், சத்தானதாகவும் இருக்கும். அதை இன்னும் கொஞ்சநாள் விட்டால் பனங்கிழங்கு கிடைக்கும் சத்து மிகுதியான இந்த கிழங்கு மனிதனின் வயிற்றுப் புண்ணுக்கு மிகச்சிறந்த மருந்தாகும். அதுமட்டுமன்றி ஆண்மைக் குறைபாடைநீக்கிகும் தன்மையும் இதற்குண்டு.

நுங்கில் அதிகஅளவு வைட்டமின் பி, சி இரும்புச்சத்து, கால்சியம், துத்தநகம், சோடியம், மக்னீசியம், பொட்டாசியம், மற்றும் புரதம் போன்ற சத்துகள் அதிகமாக இருக்கிறது. பனை மரத்தில் இருந்து கிடைக்கும் நுங்கு நீரை தொடர்ந்து சாப்பிட்டு வர கோடை காலத்தில் ஏற்படும் வேர்க்குரு நீங்கும். தோலுடன் நுங்கை சாப்பிட்டு வர சீதக்கழிச்சல் நீங்கும்.



நுங்கில் உள்ள நீர் சத்தானது, வயிற்றை நிரப்பி பசியையும் தூண்டுவதோடு மலச்சிக்கல், வயிற்றுபோக்கு இவ்விரண்டிற்கும் நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. பனங்கிழங்கிற்கு ஊடல் குளிர்ச்சியை தரும் தன்மை உண்டு. இந்த கிழங்கை சாப்பிட்டு வந்தாலுடல் அழகு பெறும். உடல் பலமும் அதிகரிக்கும்.
நுங்குக்கு கொழுப்பை கட்டுப்படுத்தி உடல் எடையை குறைக்கும் ஆற்றல் கொண்டது. உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் நுங்கு சாப்பிட்டால் நல்ல பயன்பெற முடியும்.

## ஈழவாணி கலைக்கூடம் போஃகும்



பல ஆண்டுகளாக நமது போஃகும் நகரில் கலைவகுப்பை ஆரம்பிக்க வேண்டும் என்னும் கனவு எல்லோரிடமும் இருந்துவந்தது இருப்பினும் " காலமும் நேரமும் கடந்தேசென்றது இருப்பினும் பலரின்முயற்சியின் மத்தியில் ஒரு கலை வகுப்பை உருவாக்கப்பட்டுள்ளது. இம்முயற்சியில் இணைந்து செயல்படும் அனைத்து பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் என் உள்ளம் நிறைந்த நன்றி. மிருதங்க வகுப்பில் இணைந்துள்ள மாணவர்களையும் மிருதங்க ஆசிரியை "மிருதங்க கலாஜோதி" "விரலிசைவர்த்தினி" செல்வி கார்த்தனா தனபாலசிங்கம் அவர்களையும் காணலாம். செய்தி: ரவீந்திரன் வெற்றிவேலு



july, Aug ,
மாதங்களில்

எம்மக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
லூட்ஸ் மாதா கோவில்
பஸ்மூலம் செல்ல
ஒழுங்கு செய்துள்ளோம்.

லூட்ஸ் மாதா
புனிதப்பயணம்

லூட்ஸ் மாதா கோவில்
உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

K.முருகா : 02972 7754
Handy: 0175 850 14 89


அனைவருக்கும் எங்கள் இனிய மேதின வாழ்த்துக்கள்




வாழ்க்கை என்பது வெற்றியும் தோல்வியும் கலந்த பயணம் என்பார்கள். இல்லை ! அது மிகப்பெரிய தவறு.
வாழ்க்கை என்பது அனுபவங்களின் பயணம். அதில் சில அனுபவங்களை வெற்றி என நாம் எடுத்துக் கொள்கிறோம், சிலவற்றை தோல்வி எனக் கருதிக் கொள்கிறோம் அவ்வளவு தான்.

எல்லா வாழ்க்கை அனுபவங்களும் தன்னுள்ளே வெற்றியையும் தோல்வியையும் பொதிந்து வைத்திருக்கின்றன. சிலருக்கு வெற்றியாய்த் தோன்றும் நிகழ்வு, சிலருக்கு தோல்வியாய்த் தெரியும். "அட நல்ல மழை பெய்யுது.. ரொம்ப மகிழ்ச்சி" என சிலர் சொல்கின்ற அதே கணத்தில், "அட, நாற்று முளைச்சு வர டைம்ல மழை பெய்யுதே, எல்லாம் வேஸ்ட் ஆயிடுமே" என சிலர் கவலைப்படுகிறார்கள். ஒரே நிகழ்வு சிலருக்கு வெற்றியின் சின்னமாகவும், சிலருக்கு தோல்வியின் அடையாளமாகவும் மாறிவிடுகிறது.

**எந்தெந்த வழிகளில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க முடியாது என நான் கண்டுபிடித்திருக்கிறேனே"**




வெற்றி என்பதும், தோல்வி என்பதும் நமது எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது. நமது எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஒரு விஷயம் நடந்தால் அதை நாம் வெற்றி என்கிறோம். நமது எதிர்பார்ப்புக்கு எதிராக ஒரு விஷயம் நடந்தால் அதைத் தோல்வி என முடிவு செய்து விடுகிறோம். உண்மையில் அப்படியல்ல, நாம் தோல்வி என நினைக்கின்ற அனுபவங்கள் நம்மை பல நேரங்களில் மிகப்பெரிய வெற்றிகரமான அனுபவங்களுக்குள் அழைத்துச் செல்கின்றன.

தாமஸ் ஆல்வா எடிசனைப் பற்றிச் சொல்லும் போது ஒரு விஷயத்தைக் குறிப்பிடுவார்கள். அவர் மின்விளக்கு கண்டு பிடிக்க முயன்று கொண்டிருந்த காலகட்டத்தில் சுமார் ஆயிரம் முறை தோல்வியடைந்தார்.





அப்போது அவரது நண்பர் அவரிடம், "அட ஆயிரம் தடவை முயற்சி செஞ்சும் சக்சஸ் ஆகலையே" என அங்கலாய்த்தார். எடிசனோ கூலாக, "யார் அப்படிச் சொன்னது ? எந்தெந்த வழிகளில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க முடியாது என நான் கண்டுபிடித்திருக்கிறேனே" என்றாராம்.

ஒரு விஷயத்தை நாம் எப்படி அணுகுகிறோம் என்பதே நம்மை வெற்றிகரமாய் இயக்குகிறது. நாம் நினைத்த விஷயம் நடக்கவில்லையே என நாம் நினைக்கும் போது தோல்வியடைந்து விடுகிறோம். அடுத்த பாதையில் பயணத்தைத் தொடர்வோம் என நினைக்கும் போது வெற்றியின் சூட்சுமத்தைக் கற்றுக் கொள்கிறோம். இன்று தாமஸ் ஆல்வா எடிசனின் கண்டுபிடிப்புகளில் 1093 காப்புரிமை பெற்று அவர் பெயரைச் சொல்கின்றன. அதன் காரணம் அவரது அணுகுமுறை தான்.

நினைக்கும் விஷயம், நினைக்கும் விதத்தில், நினைக்கும் நேரத்தில் நடப்பதே வெற்றி என்பது நாம் உருவாக்கி வைத்திருக்கும் மாயையே. விதைகளை விதைக்கிறோம். சில விதைகள் ஓரிரு நாளில் முளைவிடும். ஒரு சில முளை விட சில வாரங்கள் எடுக்கும். ஒரு சில விதைகள் நட்டதையே நாம் மறந்த பின்பு தான் தரைக்கு மேலே தலை நீட்டி ஹாய் சொல்லும். அதற்காக சட்டென முளைப்பது மட்டுமே வெற்றி எனக் கொள்ள முடியுமா ? தாமதமாய்க் கிடைக்கிறது என்பதால் தோல்வி என முடிவு செய்ய முடியுமா ?

சீனாவில் ஒரு மூங்கில் மரம் உண்டு. அதை முளையாக நட்டு வைத்தால் ஒரு சின்ன வளர்ச்சி கூட இல்லாமல் இருக்கும். வாரங்கள், மாதங்கள் கணக்கல்ல, சுமார் 5 ஆண்டுகள் எந்த ஒரு சலனமும் இல்லாமல் அப்படியே நிற்கும். ஆனால் அதன்பின் சடசடவென வளர்ந்து வானத்தை எட்டிப் பிடிக்குமளவுக்கு விஸ்வரூபம் எடுக்கும். அதாவது 5ம் வகுப்பு படிக்கும் ஒரு பையன் ஒரு மரத்தை நட்டு வைத்தால், அவன் பத்தாம் வகுப்பு முடித்த பின்பு தான் வளரவே ஆரம்பிக்கும் !அதற்காக அது தோல்வி என சொல்லி விடமுடியுமா ?




எந்த ஒரு தோல்வியையும் உடைத்துப் பார்த்தால் வெற்றிகள் ஒளிந்திருக்கும். இந்த மூங்கில் மரம் முதல் ஐந்து ஆண்டுகள் மண்ணுக்குள் வேர்களை பரப்பிக் கொண்டே இருந்தது. அது தான் பிற்காலத்தில் மரம் பிரம்மாண்டமாய் எடுத்து வளரும்போது தாங்கிப் பிடிக்கும் வலிமையைத் தருகிறது. எனில், தாமதம் என்பது தோல்வி அல்ல, தயாரிப்பு. தாமதமாகும் வெற்றி என்பது, அந்த வெற்றியை ஏற்றுக் கொள்ள காலம் நம்மை பக்குவப்படுத்தும் தயாரிப்புக் காலம் எனக் கொள்ளலாம்.

தொடர்ச்சி 21 ம் பக்கம்



20ம் பக்கத் தொடர்ச்சி...

# தோல்விக்குள் ஒளிந்திருக்கும் வெற்றி






நதி வேகமெடுக்க வேண்டுமெனில் அருவிகள் வேண்டும். விழுந்த இடத்தில் காலொடிந்து கிடப்பதில்லை நதிகள். அருவியின் அடிவாரம் தான் அதன் விஸ்வரூபத்தின் ஆரம்பம். "நான் பாட்டுக்கு போயிட்டே இருந்தேன், அருவி வந்து அலைக்கழித்து விட்டது" என ஓரமாய் அமர்ந்து கண்ணீர் விடுவதில்லை நதி.

வாழ்க்கையை சற்றே திரும்பிப் பார்த்தால், நாம் தோல்வி என ஒரு காலத்தில் கருதிய விஷயங்கள் இன்றைக்கு நல்ல முடிவையே தந்திருப்பதை உணரலாம். தோற்றுப் போன ஒரு கல்வி, இன்னொரு துறையில் நமக்கிருந்த அபரிமிதமான அறிவை வெளிக்காட்டியிருக்கலாம். தோற்றுப் போன ஒரு காதல் இன்றைய அழகிய குடும்பத்தின் காரணமாக மாறியிருக்கலாம். தோற்றுப் போன ஒரு வேலை இன்னொரு வேலைக்காக நம்மை உருவாக்கியிருக்கலாம். எல்லாமே அனுபவங்கள். அனைத்தையும் அன்புடன் கரம் குலுக்கி வரவேற்பதில் இருக்கிறது வாழ்க்கையின் ஆனந்தம்.




நாளை என்ன நடக்கும் என்பது தெரியாததால் தான் பல விஷயங்களைத் தோல்விகளாய் நாம் கருதிக் கொள்கிறோம். அப்படித் தெரியாத நிலை தான் வாழ்க்கையை அழகாக்குகிறது, சவாலாக்குகிறது, சுவாரஸ்ய மாக்குகிறது. இந்த அழகை அறிந்து கொள்ள முடியாதவர்கள் தான் சட்டென முடங்கி விடுகிறார்கள். அல்லது வாழ்க்கையை முடித்துக் கொள்ளத் துணிந்து விடுகிறார்கள்.

காலம் நம்மைச் செதுக்கி பாறைக்குள் ஒளிந்திருக்கும் சிலைகளை வெளிக்கொண்டு வருகிறது, காலம் நம்மை வனைந்து களிமண் நிகழ்வுகளிலிருந்து அழகிய பாண்டங்களை வெளிக்கொண்டு வருகிறது, காலம் நம்மை வார்த்தெடுத்து கூடுடைக்கும் பட்டாம் பூச்சியாய் நம்மை உருமாற்றுகிறது, காலம் நம்மை வடிவமைக்கிறது, நாம் செய்ய வேண்டியதெல்லாம் அந்தக் காலத்தை தோல்வி என முடிவு செய்து தோற்றுப் போகாமல் இருப்பது தான்.



ஆன்மீகவாதிகள் இதை அழகாக எடுத்துக் கொள்வார்கள். "எது எப்போ தரவேண்டும் என்று கடவுளுக்குத் தெரியும். அதை அப்போ தருவார்."

என அமைதியாக சொல்லிக் கொண்டு தங்கள் வேலையைப் பார்க்கப் போய்விடுவார்கள். உண்மை தான். சில வேண்டுதல்களை கடவுள் உடனே தருவதுண்டு. சிலவற்றுக்கு சிறிது காலம் எடுத்துக் கொள்வார். இன்னும் சிலவற்றைத் தரவே மாட்டார். எல்லாமே வெற்றி தான்.

எது நமக்குத் தேவை என்பதை நம்மை விட அதிகமாய், தெளிவாய் இறைவன் அறிகிறார். அதனால் தான் நமக்குத் தேவையானதை மட்டும் தருகிறார். பத்து வயதுப் பையன் பைக் கேட்டால் தந்தை உடனே வாங்கித் தந்துவிடுவதில்லை. அவன் அந்த பைக்கை பாதுகாப்பாய் ஓட்டும் காலம் வரை பொறுத்திருக்கிறார். தாமதம் என்பது பையனின் பார்வையில் தோல்வி, தந்தையின் பார்வையில் தயாரிப்பு. இந்த பார்வையைப் புரிந்து கொண்டால் வாழ்க்கையை மிகவும் ஆனந்த அனுபவமாக எதிர் கொள்ள முடியும்.

**Easy Holiday**
Travels & Tours



உலகின் எப்பாகங்களுக்கும் சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் நிறைந்த மனதுடன் தருகின்றோம்

தொடர்புகளுக்கு: Thureiraj Rukshan

Mob:0152 1365 4331 - 0152 04153138

எம் மக்களின் அபிமானம் வென்ற
**Easy Holiday**
Travels & Tours

தாய்நாடு சென்றுவர மலிவு விலையில்
- விமானச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதிகள்
- வாகன வசதிகள்
- வீசா உதவிகள் (இந்தியா இலங்கை)
- ஹோட்டல் வசதிகள்



Emirates ETIHAD Gulf Air OMAN AIR QATAR

Westring 36
44623 Herne
Germany

Tel:02323 965 4426 Fax:02323 9654427
e.mail: ezholiday16@gmail.com

# உயிர்ப்பின் அருகில் மரணம்

சேவியர்







உயிர்த்த
இயேசுவின்
புனித முகத்தில்
இரத்தத் துளிகள்.

பரமனின்
திருமுன்னிலையிலேயே
கலியுக
யூதாஸ்களின்
இருள் வேட்டை.

தூயகத்தின்
பரிசுத்தப் பகுதிகளில்
பலியான ஆடுகளின்
ஆபேல் கதறல்.

மனிதத்தின்
கடைசித் துளியையும்
மரணிக்க வைத்து
மரண வேட்டை
நடத்தியவர்களே !

துணிகரப் பாவத்தை
அகத்தில்
அணிந்து
பணிவில் பலிபீடத்தில்
பகடை ஆடியவர்களே !

மன்னிப்பு கேட்கும்
வாய்ப்பைக் கூட
மறுதலித்து
தற்கொலை வேட்டையில்
தடம் மாறிப் போனவர்களே.

மனிதத்தை
உதறுகையில்
முதல் தோல்வி அடைந்தீர்கள்.

மனிதர்கள்
சிதறுகையில்
முழுத் தோல்வி அடைந்தீர்கள்.

எந்தக் கடவுளும்
மன்னிக்காத
மரண இருளுக்குள்
இடம் பெயர்ந்து விட்டீர்கள்.

இயேசுவின்
மௌனம்
அங்கீகாரமல்ல
அபாயமானது.

ஒருவர்
கடவுளின் கோவிலை அழித்தால்
கடவுள்
அவரை அழித்துவிடுவார்.

இறைவனின்
வார்த்தைகள்
முடமானவையல்ல
நடமாடுபவை.

உயிர்ப்பின் நாளில்
உயிர்த்தவரைச் சந்தித்தவர்களே,

உங்கள் மரணம்
எங்களுக்கு ரணம்,
உங்களுக்கு
இது
விண்ணக நுழைவு தினம்.

மரணத்தின் திரை தாண்டி
நாங்களும்
அங்கே வருகையில்
உங்களைச் சந்திக்கிறோம்.
அதுவரை உங்களுக்கு
தற்காலிக விடைகொடுக்கிறோம்.

# உறவுகளை மறப்போமா...?

ஜீவிதா- யேர்மனி

ஆண்டுகள் பத்து
ஓடிக் கடக்கிறது - உறவுகளே
எம் மனம் மட்டும்
உங்களைத் தொலைத்த இடங்களில்
அப்படியே கிடக்கிறது
முல்லை நந்திக்கடல் தொடக்கம்
முள்ளிவாய்கால் வரை
வலி சுமந்த நினைவுகள்
எம்மைக் கொல்கிறதே

வைகாசி வந்தால் விசாகம்
விழாக் கொண்டாட்டம் எல்லாம்
உங்களின் கடைசிக் காலத்துடன்
முற்றுப்பெற்றதே

இப்போது உப்புடன் கலந்து வரும்
வைகாசிக் காற்றும்
உங்கள் நினைவை மட்டுமே
சுமந்தே வருகிறது

உக்கிரம் கொண்ட வகற்றாபளை அம்மன்
ஏன் வக்கிரத்துடன்வந்த
வஞ்சகனை வதைக்கவில்லை
நாம் தினம் வழிபட்ட
உள்ளூர் தெய்வமும்
உலகத்துடன் சேர்ந்து
எங்களுக்கு வஞ்சனை செய்ததே
காலங்கள் கடந்தாலும் கடவுளே
உன்னையும் மன்னிக்க மாட்டோம்

கயவரின் கழுகுக் கூட்டம்
எங்களின் பிஞ்சிகள்
பசியில் வாடி வதங்கிய நேரம் பார்த்து
உங்கள் பஞ்சு உடல்களை
கோரக் குண்டுகளால் கிழித்துத் தின்றதே
அதனை மறப்போமா
ஒருவாய் கஞ்சிக்கு
வரிசையில் நிற்கவைத்து
தாயின் வயிற்றைக் கிழித்து
சேயுடன் சேர்த்து உயிரைக் குடித்த
அரக்கனின் அனிதியை மறப்போமா

தள்ளாத வயதில் வாடி வதங்கி
ஒரு துளித் தண்ணீர் தாகத்தில்
வேதனையுடன் மண்ணில் விழுந்து
தம் தாய் நிலத்தில் விதையான
வயோதிபர்கள் எத்தனை,
எப்படி மறப்போம் எங்கள் உறவுகளை
இரத்தக்காட்டேறி
உதிரம் குடித்து உயிரை எடுத்த
உங்கள் மூச்சு அடங்கிய இடத்தினிலே-என்றும்
எங்களின் கண்ணீர் மழை சொரியும்....!















# The Castle of Thiruvasagam

Prof. Dr. Shanmugayogini Ravindran
University of Jaffna

The Castle of Thiruvasagam is situated in Navatkuli, Jaffna along A9 road in a 10 acre land. In the luscious environment with lovely river and Palmyra groves Navatkuli is chosen to build the Thiruvasaga Castle. The castle stands there as the highest, beautiful and outstanding holy place of Lord Dakshinamurthy- the Guru of Saint Manickavasagar - at Navatkuli. The Castle of Thiruvasagam in Navatkuli, Jaffna, Sri Lanka reminds us of Chiddambaram temple in India where Manicka vasagar's Thiruvasagam and Thirukovayar are engraved in rock stones. The visitors and worshippers of the Castle of Thiruvasagam first worship Lord Ganesh and bathe Sage Agasthiyar and then worship Manickavasagar who stands besides an immense Shivalingam on a rock Chariot of 21 feet height surrounded by cooling water. The immense Palipeedam and Nantheeswarar attract one to worship them first and then the Dakshinamurthy in His appropriate form with the features such as abayakastham etc. and seated under the Kurumthai tree with the expression of giving His Grace and Initiation. Along and behind the Moorthy there are 108 Shivalingas adorned in pattu veshti and ruthratcha garland. The pious devotees worship the Moorthy to get education, protection, redemption from the evil and to be blessed with good health, wealth, great knowledge and Gnana. Many pray to get the good benefits of Viyaala bagavan by worshiping Dakshinamurthy. Therefore, there are special poojas on every Thursdays.

The great endeavour to build this castle of Thiruvasagam, the founders, donors, well-wishers and Temple Trust should be thanked, and their work should be appreciated. Today in this digital age it is astonishing to see how Mr.Vinothan from Mullaitivu has piously engraved Thiruvasagam on the rock stones which are installed on the walls of this castle.

Manickavasagar was born in Thiruvathavur. He sang many hymns in praise of Lord Shiva. Among them Thiruvasagam and Thirukovayar are very popular. Vathavurer (Manickavasagar named after his birth place) won the title of Thennavan Paramarayar with his excellent knowledge. He was appointed as the Minister of the Pandya King Varagunavarman II from 862CE -885CE.

Vathavurer was very often tested by Lord Shiva who made him realise the Almighty. He chose Dasa marga life of a servant of God, and Gnana marga- as a life of a knower of God. Vathavurer was named as Thiruvaathavoorar, Manivasagar and Manickavasagar. The words in Manickavasagar's hymns and songs could be valued as Maanikkam( precious gems) and the love towards Lord Shiva as the string with which he tied the gems of words to make the garland of religious songs.











23ம் பக்கத் தொடர்ச்சி...

Ramana Maharshi expressed that Manickavasagar left this planet in his physical form without any remains- in the form of a great light (Jothy).





King Varaguna Pandyan once sent Vathavurer to purchase horses by entrusting him with lots of money. On his way Manickavasagar started to seek a Guru to realise the Truth. Lord Shiva came in the form of a brahmin with Sivaganabotham in his hand. Vathavurer recognised Him. He was further inspired - out of great love of God Shiva -to build the Tirupperunturai temple out of the money given by the king to buy horses. When Vathavurer failed to carry out the king's order buy the horses, the king sent soldiers to search for the Minister. Vathavurer forgot about the King's order and stayed in Tirupperunturai and waited for the Lord to get His Grace. On an auspicious day he saw and realised that the sage seated under the Kurunthai tree is the guru whom he was searching in this and in his previous births. Manickavasagar sat in front of the Sage there and watched Him. The Guru closed his eyes and did not utter any words. In a short while Manickavasagar was drawn by the Guru's speechless- mouna- upadesha without any sound- in a silent manner. Saint Manickavasagar sang many verses in praise of Lord Shiva taking the form of Dakshinamurthy to redeem him from this birth. His long search for a spiritual guru came to an end and finally he got initiated by Him.

Soon Lord Shiva in order to save his Disciple from Varaguna pandyan disguised himself as a horse merchant and converted jackals as horses and took them to the palace. After handing over their fake horses the merchant (Lord Shiva) disappeared. At midnight all the horses took their original form as jackals and yelled. Pandyan punished Manickavasagar. Lord Shiva thus made many miracles prepare Vathavurer to become fit to be His disciple.

Thiruvasagam evokes bakthi and makes one fully surrender to Lord Shiva. The yearning for Lord Shiva's Grace to lift him up from mundane life to high spiritual Plato is the essence of Thiruvasagam. Thiruvasagam melts everybody.

Dr.Aruthirumurugan along with his team has worked tirelessly to build this temple and to maintain the spiritual atmosphere. The Castle of Thiruvasagam attracts people from within and outside from the country. The translations of Thiruvasagam in all different languages too are exhibited.

Let us feel and experience Manickavasagar's meeting of Guru Dakshinamurthy, his initiation and total surrender to Lord Shiva and realise the Truth to attain Mukthi in this birth itself.

Written by

Prof. Dr. Shanmugayogini Ravindran
Senior Lecturer in English
Department of English Language Teaching
University of Jaffna





# The Educational Achievement Level at G.C.E O/L in the Northern Province of Sri Lanka





Bavvatharani Ravindran
Nallur/ Jaffna

Education in Sri Lanka date back to the Ithikasa, Purana periods. Sri Lanka was named after King Ravana as 'Ravana Bhoomi'. There are stone inscriptions and other evidences which indicate how Gurukula education was conducted in Sri Lanka. The sons of kings when they attained the age of 12 were sent to Gurukulams to learn all the skills and all the fields in education under great gurus such as Vasishter and other Rishis. In earlier times along with the Gurukula education there were other places such as the front veranda (Thinnai). Pandits taught the children excluding females. This education is called in Thinnai palli. On the other hand, the Indian brahmins and pandits initiated and conducted the temple Pooja and taught Sanskrit.

In Sri Lanka various foreign regimes who ruled for considerable years until its independence have promoted and provided educational facilities. Sri Lanka has direct influence of India not only in industries but also in education. During the regime of Sera, Chola, Pandia we get the best literature on art, history, religion, aesthetics and education.

It was during the Britishers rule that various types of educational initiatives taken in Sri Lanka. The higher education in Sri Lanka commenced in the early 1800s. In 1870 the Ceylon Medical College was opened. In 1884 the School of Agriculture was established and in 1875 the Colombo Law college was established. After 1893 the Government Technical Colleges were established. in 1942, July first University of Ceylon, the Colombo campus and University of Peradeniya were established. Today there are 15 universities in Sri Lanka.

There are 10,390 Government schools in Sri Lanka today. The curricular offered is approved by the Ministry of Education. The structure of the educational system is divided as primary, junior, secondary, senior secondary, collegiate and tertiary. Schooling is compulsory from 5 to 13 years of age. Education is given free of charge at all levels including the university level.
Literacy levels and educational attainment levels rise steadily year by year. Today the literacy rate of youth stands by 97%. The medium of education could be Tamil, Sinhala or English.

In this article the educational achievement levels in G.C.E O/ L from 2015 to 2018 are analysed. The G.C.E O /L is an abbreviation of General Certificate Examination in Ordinary Level.
This article discusses the attainment, and achievement levels at G.C.E O/ L examination conducted from 2015 to 2018.
In Addition to the government schools there are 33 non fee levying, assisted private schools and 33 autonomous private schools. There is another category of English medium International Schools approved and registered by The Board of Investment in Sri Lanka. The tertiary level has 15 universities.

The admission to the university today is based on the results of the G.C.E A/L examination and Z score (which considers the difficulty level of the subject due to facilities) and therefore the admissions have become extremely competitive.

| 2015 | | | |
|---|---|---|---|
| District | Pass in 5 or more subjects | Eligible to study G.C.E Advanced level | |
| Northern Province | 17,752 | No | Percentage |
| | | 10,719 | 60.38 |
| North West | 31,733 | 22,107 | 69.66 |
| North Central | 16,560 | 11,030 | 66.61 |

| 2016 | | | |
|---|---|---|---|
| District | Pass in 5 or more subjects | Eligible to study G.C.E Advanced level | |
| Northern Province | 17,413 | No | Percentage |
| | | 10,562 | 60.66 |
| North West | 33,833 | 23,896 | 70.63 |
| North Central | 19,041 | 12,632 | 66.34 |

| 2017 | | | |
|---|---|---|---|
| District | Pass in 5 or more subjects | Eligible to study G.C.E Advanced level | |
| Northern Province | 17,999 | No | Percentage |
| | | 11,901 | 60.12 |
| North West | 34,752 | 25926 | 74.60 |
| North Central | 19,455 | 13625 | 70.03 |

| 2018 | | | |
|---|---|---|---|
| District | Pass in 5 or more subjects | Eligible to study G.C.E Advanced level | |
| Northern Province | 16,659 | No | Percentage |
| | | 11,660 | 69.99 |
| North West | 34,564 | 26,599 | 76.96 |

Report from Department of Examination Sri Lanka 2018

These tables clearly display the fact that there is remarkable increase in the performance in 5 or more subjects at the G.C.E O/L from 2015 to 2018.The thirty years of the war, economic crisis, lack of employment, high cost of living in the north of Sri Lanka have direct impact on the gradual but striking increase in obtaining the achievements of educational goals G.C.E O/L.




Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€89
15 மாதங்கள்
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
£/€69
15 மாதங்கள்
60க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
5000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தி திரைப்படங்கள்
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ் திரைப்படங்கள்
EROS NOW
4000க்கும் அதிகமான தமிழ் & ஹிந்தி திரைப்படங்கள்
SUBSCRIBING TO LYCATV IS EASY!
CALL OUR 24/7 CUSTOMER SERVICE ON
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
www.lycatv.tv

# ஈழத்துச் சிறுவர் இலக்கிய உலகில் மு.க.சுப்பிரமணியம் அவர்களின் பங்கும் , மாணவர்களுக்கு ஆற்றிய பணிகளும்.







கௌசி

அமரர் மு.க.சுப்பிரமணியம்

இலங்கையில் குழந்தைகளுக்கான முதல் முதல் வெளிவந்த சிறுவர் மாத இதழாக வெற்றிமணி இடம்பெறுகின்றது. இவ்வெற்றிமணியாகிய சிறுவர் சஞ்சிகையை வெளியீடு செய்து அதன் மூலம் சிறுவர் இலக்கியங்களுக்குப் பங்களித்த M.K.S என்று அழைக்கப்படும் அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களும் பெருமைக்குரியவராகக் கருதப்படுகின்றார்.

தொலைநோக்குச் சிந்தனை உள்ள ஒருவரால் மாத்திரமே இவ்வாறாக மாதம் ஒரு சஞ்சிகை அதுவும் முழுக்க முழுக்க சிறுவர்களுக்காக மட்டுமே வெளியிட முடியும். இதற்கு ஆசிரியப் பணியை அவர் மேற்கொண்டது மட்டுமல்லாமல் மாணவர்களுடன் உள்ளன்புடன் பழகியமையும் காரணமாக இருந்திருக்கின்றது. அத்துடன் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் 1980 இல் மறைந்துவிட்டாலும், இன்றும் பேசப்படும் மனிதராக இருப்பதற்கும் ஆசிரியத்தொழிலில் மட்டுமே நின்றுவிடாது மாணவர்கள் நலன் கருதி அவர் ஆற்றிய சேவைகள் தான் காரணமாக இருந்திருக்கின்றன.

இவர் மே மாதம் 14 ஆம் திகதி 1919 ஆண்டு குரும்பசிட்டியில் ஒரு விவசாயக்குடும்பத்தில் திரு.திருமதி கந்தவனம் தம்பதியனருக்கு எட்டுப் பிள்ளைகளில் ஏழாவதாகப் பிறந்தார். கல்வியிலும் சமூகத்தொண்டிலும் நேரத்ததை அர்ப்பணித்தார். காங்கேசந்துறை வட்டாரக் கல்வி, விளையாட்டு, இவற்றின் அமைப்பாளராகவும் பரீட்சைக் காரியதரிசியாகவும் இருந்து அளப்பெரும் தொண்டுகள் ஆற்றி கல்விப்பணிப்பாளர், உதவி அரசாங்க அதிபர் போன்றோரின் பாராட்டுதலைப் பெற்றார். அகில இலங்கை ஆசிரியர் கலாசாலையின் தமிழாசிரியர் சங்க உபதலைவராகவும். நுவரெலியா, முல்லைத்தீவு கிளைகளின் தலைவராகவும் காரியதரிசியாகவும் இருந்து பெரும் தொண்டாற்றினார். காங்கேகன்துறை ஆசிரியர் சங்க கிளையை ஆரம்பத்தவர்களில், இவர் முக்கியமானவராகக் காணப்படுகின்றார்.

இவர் 1964 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் காதலியார் சம்மளம் குளத்தில் அரசினர் தமிழ் பாடசாலை தலைமை ஆசிரியராக இருந்த போது அங்கு பயின்ற மாணவர்களை இடையில் படிப்பை நிறுத்தி கமத்திற்கு பெற்றோர் அழைத்துச் சென்றனர். அறுவடை காலத்தில் பெற்றோருக்கு பிள்ளைகளின் உதவி தேவை என்பதனை அறிந்து அந்த நாட்களில் அரச அனுமதியுடன் விடுமுறை கொடுத்து பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் உதவினார். இதனால் மாணவர்களின் படிப்பை இடைநிறுத்தி கமத்திற்கு அழைத்துச் சென்று படிப்பை இடைநிறுத்தாது பாதுகாத்த பெருமை அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்களையே சாரும்.

பல ஆர்வம் மிகுந்த மாணவர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்து மேற்படிப்பிற்கு வழிசமைத்துக் கொடுத்தார். மலையகத்திற்கு இடமாற்றம் கிடைக்கும் ஆசிரியர்கள்,

அங்கு வசதிக்குறைவு என்ற காரணத்தால் யாராவது அரசியல்வாதிகளைப் பிடித்து தமது இடமாற்றத்தை நிறுத்திவிட்டு அங்கு கல்விப்பணி புரிய போகமாட்டார்கள் என்பது நான் அறிந்த உண்மை. ஆனால், மு.க.சுப்ரமணியம் அவர்கள் நாவலப்பிட்டி, வெலம்பொட, பூண்டுலோயா போன்ற மலையகப் பகுதிகளில் அரசினர் பாடசாலைகள் பணியாற்றி, அங்கு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக உழைத்துள்ளார்.

அரசினர் பாடசாலைகள் தவிர்ந்து மலையகத் தோட்டப்பாடசாலைகளின் வளர்ச்சியிலும் கவனம்செலுத்தினார். தொழிலாளர் பிள்ளைகள் 5 ஆம் வகுப்புக்கு மேல் கல்வி கற்பதில்லை. அக்காலத்தில் அவர்கள் கல்வி முன்னேற்றம் மறைமுகமாகத் தடை செய்யப்பட்டும் இருந்தது.

இதனால் தான் அரசினர் பாடசாலையில் ஆசிரியராக இருந்தபோதும் தோட்டப்பாடசாலைகள் அரசு என்று தொழிற்சங்கங்கள் மூலம் அரசுக்கு அழுத்தம்கொடுத்தார். அது மட்டுமன்றி தோட்டப்பாடசாலைகளில் கல்விபயின்ற சிறப்பான மாணவர்களின் கல்வி தொடர பலவழிகளிலும் உதவி புரிந்தார்.

எனவே இவ்வாறான மாணவர்களுக்கான கற்றல் வளர்ச்சிக்கு தன் எண்ணம் முழுவதையும் ஈடுபடுத்திய வேளையே யாரும் அக்காலத்தில் நினைத் திருக்காத மாதாந்த சஞ்சிகை ஒன்று மாணவர்கள் முன்னேற்றம் கருதி வெளியிட வேண்டும் என்ற தன் கனவை நனவாக்கினார்.

மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்தல், அவர்கள் அறிவைத் தூண்டும் விதமான அறிவியல் கல்வியை மேம்படுத்தக் கூடிய கட்டுரைகளை கற்றோரிடம் இருந்து பெற்றுச் சஞ்சிகையில் பிரசுரித்தல், மாணவர்களை எழுதத் தூண்டல் போன்ற நோக்கங்களைக் கொண்டு நாவலப்பிட்டியில் ஆசிரியராக இருந்த வேளை, தினகரன் சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் வந்த குறுக்கெழுத்துப் போட்டிகளின் சிறந்த விடை விமர்சனி என்னும் வெற்றி மணியை 1950 ஆண்டு வெளியிட்டார்.

தொடர்ச்சி 28 பக்கம்



28 ம் பக்கத் தொடர்ச்சி

## ஈழத்து சிறுவர் இலக்கிய உலகில்....சுப்பிரமணியம்

1954 ஆண்டு முழுக்க முழுக்க மாணவர் பத்திரிகையாக உருவெடுத்த வெற்றிமணி மலையக மக்களின் கல்வி திட்டமிட்டு நசுக்கப்பட்ட வேளை அவர்களது கல்விக்கும் ஆற்றலுக்கும் முதற்களம் அமைத்துக் கொடுத்தது. போட்டிகளில் வெற்றி என்பதனைக் குறிக்க வெற்றி என்பதனையும் சுப்பிரமணியம் என்பதில் உள்ள மணியினையும் இணைத்து வெற்றிமணி எனப் பெயர் இட்டார். ஓசைவடிவம் பிள்ளைகளுக்குப் பிடிக்கும். அதனால்,
வெற்றிமணி டாண் டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய். நற்றமிழாம் எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய் என்ற வாழ்த்து ஒலியுடன் ஒவ்வொரு இதழையும் வெளியீடு செய்திருந்தார்.

08 பக்கங்களில் ஆரம்பித்துப் பின் 16, 32, 59 என பக்கங்கள் தேவைக் கேற்ப அதிகரித்த வண்ணம் இருந்தன. தான் ஆசிரியராக கடமை புரிந்த பாடசாலைகளில் எழுத்தாற்றமிக்க ஆசிரியர்களையும் மாணவர்களையும் வெற்றிமணியில் எழுதவைத்தார்.

பிடிவாதம் பிடித்தழுது கொடுத்ததையும் விட்டெறிந்து
படுக்கையையும் விட்டெறிந்து படுத்துருண்டு கூச்சலிட்டு
கடிதான துன்பம் தந்து கண்டதெலலாம் வேண்டுமென்றான்
கனிவாக அவை கொடுத்தான் கடுங்கோபம் கொண்டெறிந்தான்

முடியாது இவன் கோபம் நாமடக்க முடியாதென்று
முனிந்தெழுந்து நானடிக்க முற்றத்தில் வீழ்ந்தழுதான்
கொடிதான சிங்கம் புலி குவலயத்தை அடக்கிடலாம்
குலக்குழந்தை கோபமதை குணமாக்க யாருண்டிங்கே

இக்கவிதை மழலையின் பிடிவாதம் என்னும் தலைப்பில் வெற்றிமணியில் வெளிவந்த R.R.N.ஜோர்ஜ் அவர்களுடைய கவிதை

வெற்றமணியில் ஒரு சிறு மாணவன் மாடு பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தான். அக்கட்டுரைக்கு முக்கியத்துவம் கொடுத்து வெற்றிமணி வெளியிட்டு இருந்தது. மாடு பற்றி எழுதிய சிறுவனிடம் ஏன் மாடு வண்டி இழுக்கும் என்று எழுதவில்லை? எனக் கேட்டபோது, அவன் சொன்ன பதிலே ஆசிரியரை கவர்ந்தது. அவன் சொன் பதில் மாடு பாவம் வண்டி இழுக்கும் என்று சொல்ல தனக்கு கவலையாக இருக்கும் என்றானாம். ஜீவகாருண்யம் அச்சிறுவனின் உள்ளத்தில் தெய்வீக ஒளிபாச்சியது. உடனே இக்கட்டுரையை சஞ்சிகையில் வெளியீடு செய்திருந்தார்.
மாடு
மாட்டிற்று 2 கொம்பு உண்டு.
மாட்டிற்கு ஒரு வாலுண்டு.
மாட்டிற்கு நான்கு கால்கள் உண்டு.

இக்கட்டுரையைப் பார்த்த வாசகர்கள், "ஏன் இப்படி தரமில்லாத கட்டுரையை பிரசுரித்தீர்கள்? என்று ஆசிரியரைக் கேட்டபோது "இந்தக் கட்டுரை வந்தபின்பே வெற்றிமணியில் பல சிறப்பான கட்டுரைகள் வரத்தொடங்கின. வாசகர்கள் படைப்பாளிகள் எல்லோருக்கும் அட இதனைவிட எம்மால் நன்றாக எழுத முடியும் என்று எண்ணத் தோன்றியது. எனவே எப்போதும் சிறப்பான ஆக்கங்கள்தான் வெளியிடவேண்டும் என்பது அல்ல. எழுத்தாளரை கிளர்ந்து எழும்வண்ணம் இப்படி சிலவற்றையும் செய்யத்தான் வேண்டும்" என்றார். இதன் மூலம் இவருடைய ஆழ்ந்த தொலைநோக்குச் சிந்தனை புலப்படுகின்றது. ஊக்கமுள்ள ஒருவருக்கு இடம் கொடுத்தால், எதிர் காலத்தில் அவர் உச்சத்தைத் தொடுவார் என்னும் உயரிய நோக்கம் அவரிடம் இருந்ததனால், அந்த மாடு என்னும் கட்டுரை எழுதிய சிறுவன் பிற்காலத்தில் சிறந்த எழுத்தாளனாகவும் உருவெடுத்தார் என்பது யாம் அறிந்த செய்தியாகும்.
இதுமட்டுமன்றி வெற்றிமணியில் எழுதும் சிறுவர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கும் முகமாக சிலசமயம் அவர்கள் கற்கும் பாடசாலை களுக்கு நேரில் சென்று புத்தகங்களை வழங்கி அவர்களை









மகிழ்ச்சியடையவும் வைத்துள்ளார். சிறுவர்களுக்காக இலக்கியம் படைப்பதிலும் பார்க்க சிறுவர்களே தமக்கான இலக்கியத்தைப் படைப்பது பாராட்டத்தக்கதே. மாணவர்களின் உயர்வே ஒரு நாட்டின் உயர்வு எனக் கருதி இத்தன்மையை ஊக்குவித்த அமரர் மு.க.சுப்பிரமணியம் அவர்கள் எல்லோராலும் போற்றப்படக்கூடியவர்.
சிறுவர்களை வாசிக்கத் தூண்டி, அவர்களை அங்கத்தவர்களாக்கி, அவர்களுக்கு அங்கத்துவ இலக்கங்களைக் கொடுத்தார். அவர்களுக் கிடையில் போட்டிகள் நடத்தி பரிசில்கள் வழங்கியுள்ளார். மாணவர்களை அங்கத்தவர்களாகச் சேர்த்து இலக்கங்கள் கொடுக்கும் போது அவர் களிடையே ஆக்கத்திறனும், எழுத்துத்திறனும் அதற்கேற்ப ஈடுபாடும் மேம்படும் என்னும் எண்ணத்தை நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார். கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்குச் சிறந்த பரிசில்கள் வழங்கியுள்ளார்.
அன்று வெற்றிமணியில் மாணவர்களது படைப்புக்களும். மாணவர்களுக்கான பெரியவர்களது ஆக்கங்களும் சமகாலத்தில் வெளிவந்தன.

சகாராக்கல்லூரி மாத்தளை 01.06.48 தனது ஆசிரிய பணியை ஆரம்பித்து இலங்கையின் பல பாகங்களிலும் பணி புரிந்து இறுதியில் அதிபராக தனது சொந்த ஊரான குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாலத்தில் அதிபராக இருந்து 1977 ஆண்டு ஓய்வு பெற்று வாழும் வரை மாணவர்கள் நலனுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் வாழ்ந்து மறைந்த மு.க.சுப்ரமணியம் அவர்களை மாணவர் உலகம் என்றும் மறவாது. இவருடைய இந்த நூற்றாண்டு காலப்பகுதியில் படைப்புலகம் இவரை நினைத்துப் பார்ப்பதுடன் பாராட்ட வேண்டியதும் அவசியமாகின்றது.

சாதனையாளர்கள் என்றும் சாவதில்லை
சாதனைகள் என்றும் மாள்வதில்லை – மனிதன்
வாழும்வரை மறக்கப்படுவதில்லை



பட்டம்

— சி. தெய்வேந்திரம்பிள்ளை, வித்தி. கல்லூரி, முள்ளியவளை. —

பட்டம் நல்ல பட்டம்
பறக்கும் அந்தப் பட்டம்
எட்ட நின்று விடவே
ஏறிப் பாயும் பட்டம்.

காற்றில் ஓடும் பட்டம்
கயிற்றி லாடும் பட்டம்
ஏற்றி வைத்துப் பார்த்தால்
இன்பங் காட்டும் பட்டம்.

வண்ண வண்ணச் சிறகும்
வடிவு கொண்ட வாலும்
எண்ணத்துக் கோர் விருந்தாய்
ஏறி ஆடும் பட்டம்.

5.03.1970 வெற்றிமணி



# இந்நாட்டில் இன்று இனவாதத்திற்கு

## அரச ஆசீர்வாதம் இல்லை என்பது நிம்மதி தரும் உண்மையாகும்

அமைச்சர் மனோ கணேசன்





இந்நாட்டில் இன்று இனவாதத்துக்கு அரசாங்கத்தின் ஆசீர்வாதம் இல்லை என்பது நிம்மதியை தரும் உண்மையாகும். கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனக்கலவரங்களின் போது, தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டார்கள். தமிழர்களின் சொத்துகள் சூறை யாடப்பட்டன. இவ்வேளைகளில் இனவாதிகளுக்கு இலங்கை அரசாங் கத்தின் நேரடி ஆசீர்வாதம் வழங்கப்பட்டு இருந்தது.

கடந்த காலத்தின் சில ஜனாதிபதிகள், பிரதமர்கள், அமைச்சர்கள் தமிழ் மக்கள் மீதான இத்தகைய தாக்குதல்களை அன்று தூண்டி விட்டார்கள். அல்லது நியாயப்படுத் தினார்கள். அல்லது கண்டும் காணாதது போல் இருந்தார்கள்.

ஆனால், இன்று நிலைமை முன்னேறியுள்ளது. இதை நாமே மாற்றியுள்ளோம். இன்று நாம் அரசாங்கத்துக்குள் உறுதியான நிலைப்பாடுகளை கொண் டுள்ளோம். இதனாலேயே, இனவாதத்துக்கு அரசாங்கத்தின் ஆசீர்வாதம் இல்லை என்ற உண்மை, இன்றைய துன்பம் நிறைந்த சவால் மிக்க சூழலில் ஒரு நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாக தெரிகிறது.

துன்பத்தில் விழுந்து தவிக்கும், அப்பாவி கத்தோலிக்க சகோதரர்களை நோக்கி நாம் ஆறுதல், அன்பு, நிவாரணம் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம்.

அதுபோல் நடந்து முடிந்த சம்பவங்களால், அச்சத்தில் வாழும் அப்பாவி இஸ்லாமிய மக்களை நோக்கி, இனவாதத்துக்கு அரசாங்கத்தின்

ஆசீர்வாதம் இல்லை என்ற எமது பாதுகாப்பு கவச நடவடிக்கை நீளுகிறது. அதேவேளை சர்வதேச பயங்கரவாதத்தை எமது தாய்நாட்டு மண்ணில் இருந்து துடைத்து எறிவதில் நாம் திட சங்கற்பம் பூண்டுளோம்.

இந்த மூன்று நடவடிக்கைகளையும் அரசாங்கத்தின் பொறுப்புள்ள அமைச்சர்கள் என்ற முறையில் நாம் கண்காணிக்கின்றோம் என நேற்றைய அமைச்சர்களின் விசேட சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த போது தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசன் தெரிவித்


**யூச்சின் நவசக்தி விநாயகர் ஆலயம்**

தேர் 02.06.2019

Hoch Str.10 b 41363 Jüchen


## உலகத்துக்கு ஒரே கடவுள்

கொழும்பில் வலம் வரும் டு வீலர் வெடிகுண்டால் பெரும் பீதி (23.04.2019) கொழும்பு: ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட மிகப் பெரும் தொடர் குண்டுவெடிப்புகளால் நிலைகுலைந்து போயுள்ளது இலங்கை. இந்நிலையில் உலகத்துக்கு ஒரே கடவுள் என்கிற வாசகத்துடன் வலம் வரும் டு வீலர் வெடிகுண்டு குறித்து போலீசார் எச்சரிக்கை விடுத்திருப்பது பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை தொடர் குன்டுவெடிப்புகளில் பலியானோர் எண்ணிக்கை 359 ஆக அதிகரித்துள்ளது. இந்த உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த நிலையில் இலங்கை போலீசார் அடுத்தடுத்து மனித வெடிகுண்டுகள் நடமாட்டம் குறித்து வெளியிட்டு வரும் தகவல்கள் கொழும்பு மக்களை பெரும் அச்சத்தில் உறைய வைத்துள்ளது.

கொழும்பு நகருக்குள் வெடிகுண்டுகள் நிரம்பிய வேன் மற்றும் லாரிகள் நடமாடுவதாகவும் அந்த வாகனங்களின் விவரங்களையும் போலீசார் முதலில் வெளியிட்டனர். இதனைத் தொடர்ந்து “உலகத்துக்கு ஒரே கடவுள்“ என்ற வாசகத்துடன் டு வீலரில் மனித வெடிகுண்டு நபர் நடமாடுவதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனர்.




# பணத்துக்காக பணம் உழைத்தால் அவன் பணக்காரன்!






பலருக்கு வேலைக்கு போய் சம்பாதிப்பதென்பது விருப்பம் இல்லாத ஒன்று. வீட்டில் இருந்து கொண்டே பணத்தைப் பார்க்கலாம் என்றால் எவ்வளவு நல்லது என்று தான் பலா் நினைப்பார். ஆனால் ஒருவரும் இந்த நினைப்பை நிஜமாக்க முயல்வதில்லை.

பலா் அவர்கள் உழைத்த பணத்தை வங்கியில் கொண்டு போய் போட்டு விட்டு, வட்டி இவ்வளவு வரும் என்று எண்ணி பார்த்து விட்டு இருக்கிறார்கள். ஆனால் இதனால் வரும் வட்டி போதுமா?

இலண்டனை பொறுத்த வரை வங்கியில் பணத்தை போடாமல் இபபடி பணத்தை ஏதாவதில் invest பண்ணுவதால் அதிக லாபம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. சிலா் பங்கு சந்தையில் share market ரில் போடுவார்கள். ஆனால் இதில் கொஞ்சம் கவனம் தேவை. இதைப்பற்றி அறியாதவர்கள் பெரும் நட்டத்திலும் போகலாம். ஏன் சில நேரங்களில் அதைப்பற்றி தெரிந்தவர்களுமே நட்டத்தில் போவதுண்டு.

ஆகையால் வீடுகளை வாங்கி அதற்கு பணத்தை செலவிடுவதன் மூலம் நீங்கள் செலவு பண்ணிய முதலைவிட இன்னும் அதிகமாக்குவதற்கு வாய்புகள் உண்டு.

பலா் வீடு என்றதுமே. இந்தளவிற்கு எம்மிடம் பணம் இல்லை என்று ஒரு நிமிடம் கூட சிந்திக்காமல் சொல்லிவிடுவார்கள். வீடு வாங்குவதற்கு ஒரு நிலையான வேலை மட்டும் இருந்தால் போதும் அதோடு நல்லதொரு credit score ரும் இருக்க வேண்டும்.

இலண்டனைப் பொறுத்த மட்டில் வீடுகள் என்பது எல்லோராலும் வாங்க முடியாது தான் ஏனென்றால் சாதாரண ஒரு சிறிய flat ரே £200.000 மேல் வரும்.

தமிழருக்கு UK என்றாலே London தான் நினைவிற்கு வரும். ஆனால் வேறு பல நல்ல இடங்கள் உள்ளது. அங்கெல்லாம் £50.000 இல் இருந்தே வீடுகள் வாங்கலாம். உதாரணத்திற்கு Cheshire, North West of England. இங்கு கிடைக்கும் வாடகை இலண்டனை விட அதிகம். ஒரு £12.500 (%25 deposit) முன் பணம் இருந்தாலே போதும். இந்தப் £12.500 சிலரிடம் இல்லை என்றால் உடனே சோர்ந்து விடக் கூடாது.

மனம் இருந்தால் இடமுண்டு என்பார்கள். நண்பர்களிடமோ சொந்தக்காரர்களிடமோ வாங்கலாம். அப்பாடி வாங்குவது விருப்பமில்லை என்றால். Credit card 0% வட்டியில் 24 மாதங்களுக்கு அப் பணத்தைப் பெற்றுக்கொள்ளணாம். அதை எப்படி கட்டுவது என்ற கவலை தேவையே இல்லை. அதற்கும் இப்படிப் பல வழிகள் உண்டு. உதாரணத்திற்கு 2 வருடங்களுக்குப் பின் நீங்கள் கடன் வாங்கிய வீட்டின் விலை அதிகரித்து இருக்கும். ஆகையால் வீட்டை நீங்கள் re mortgage பண்ணி பணத்தை எடுத்தக் கட்டிவிடலாம்.





சிவஜெனனி

கடும் உழைப்பு இன்று கசந்துபோச்சு
எடுத்த எடுப்பிலேயே காசு வந்தாப் போச்சு

இலங்கையில் ஓட்டுமடத்தடி கந்தர்மடம் என கட்டிடங்கள் அந்த இடத்தின் Land MarK அடையாளமாக ஆக மாக்கா உள்ளது. நல்லூரின் லாண்மாக்காக சங்கிலியன் மனையைச் சொல்ல முடியும்.

பணத்துக்காக உழைப்பவன் மனிதன்

பணத்துக்காக பணம் உழைத்தால் பணக்காரன்!

இப்படி ஒவ்வொரு நாடுகளிலும் அதன் நகரங்களில் லான்மாக்காக பல கட்டிடங்கள் உண்டு. நீங்கள் நினைத்தால் ஒரு நேரம் இந்த லான் மாக்கைக்கூட வாங்கலாம். ஒரு நேரம் நம்மவர்களே இங்கிலாந்தின் அடையாளமாகவும் மாறலாம். உழைப்பு உடலில் மட்டுமல்ல விவேகத்திலும் அது சேரவேண்டும். உழையுங்கள் விவேகமாக உழையுங்கள். வருவதில் ஒரு பகுதியை வறியவர்களுக்கும் வாரி வழங்குங்கள். இறைக்கிற கிணறு ஊறும் என்று ஊர்ப் பழமொழியும் உண்டு.

மங்கல இசைக் குழு
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Tel: 0049 157 89 15 95 71





மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம்
( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen





ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941



# ஒரு மனிதனுக்கு எவ்வளவு தூக்கம் தேவை?

## Dr.நிரோஷனின் அதிசய உலகம்







நமது வாழ்வில் முக்கிய பங்கெடுக்கும் நிகழ்வுகளில் தூக்கமும் ஒன்றாகும். இன்றைய பொழுதின் களைப்பைப் போக்கவும், அடுத்த நாள் வேலைக்கு நம்மைத் தயார் செய்யவும் தூக்கம் மிக மிக முக்கியமானது. அது உங்கள் எல்லோருக்குமே நன்றாகத் தெரியும். சிலருக்குத் தூக்கமே துக்கமாக மாறக்கூடிய அளவில் விரைவான வாழ்க்கை முறையை நாம் இப்போது மேற்கொண்டு வருகிறோம். தூக்கம் சரியான அளவில் இருந்தால் அப்படியான துக்கங்களும் நம்மை நெருங்காது, அது ஏனென்றால் நமது மனதில் ஒரு விதமான ஆழ்நிலை அமைதியைக் கொடுப்பதே அந்தத் தூக்கம் மட்டும் தான். எனவே இந்தத் தூக்கம் எவ்வளவு தேவை என்பதைத் தெரிந்தால் அதை வைத்து நம்மை நாமே சரி செய்து கொள்ளலாம் தானே? எனவே தூக்கத்தைப் பற்றி சில சுவாரசியமான விஷயங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினால், தொடர்ந்து படியுங்கள்.

நமது உடல் களைப்படைந்து இருப்பதற்கும், சோம்பேறியாக அன்றைய நாள் முழுவதும் இருப்பதற்கும், முதல் நாள் இரவில் அல்லது சில நாட்களாகவே நமக்குச் சரியான தூக்கம் இல்லாததே காரணம் ஆகும். எனவே ஒவ்வொரு மனிதனும் தினமும் தூங்கத் தான் வேண்டும். எனவே ஒருவர் ஒவ்வொரு நாளும் சராசரியாக எவ்வளவு நேரம் தூங்க வேண்டும் என்பதை அறிவதற்குப் பல ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர்.

அப்படிச் செய்யப் பட்ட ஒரு ஆராய்ச்சி பற்றிக் கூறுகின்றேன், கேளுங்கள். அது என்னவென்றால்: தினமும் நான்கு மணி நேரம், ஆறு மணி நேரம் மற்றும் எட்டு மணி நேரம் என வெவ்வேறு கால அளவுகள் தூங்கும் நேரம் கொண்ட மக்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டனர். அவர்களை இரு வாரங்கள் கண்காணித்தனர். அதில் எட்டு மணி நேரம் தூங்குபவர்களின் மூளை சிறப்பாகச் செயல்படுவதாகவும், ஆறு மணி நேரம் தூங்குபவர்களின் மூளை சிறிது Alcohol உட்கொண்டவர்களின் மூளையைப் போல் செயல்படத் தொடங்கிவிடுவதாகவும், நான்கு மணி நேரம் மட்டுமே தூங்குபவர்கள் எப்போதும் சோம்பேறித்தனமாக உணர்வதாகவும் தெரிய வந்தது. இதில் மிகவும் வேடிக்கையான விஷயம் என்னவென்றால், நான்கு மணி நேரம் மட்டுமே தூங்கிய அந்த நபர்கள், இந்த ஆய்வு மேற்கொள்ளும்போதே பல நேரங்களில் சோர்வடைந்து தூங்குவதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்தார்கள்.

சரியான தூக்கம் கொண்டிருந்தால் உடலும், மூளையும் சரியான ஆற்றலுடன் செயல்படும். நாம் இன்று தேவையான அளவு தூக்கத்தை மேற்கொள்ளவில்லை என்றால், அந்த தூக்க அளவு காலம், அடுத்த நாள் தூக்கத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும். இந்தக் கால அளவை "தூக்கநேரக் கடன்" என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். நாளுக்கு நாள் நாம் தூங்க வேண்டிய கால அளவு, அதாவது தூக்கநேரக் கடன், அதிகரித்துக் கொண்டே செல்லும்போது நமது மூளையின் செயல் வேகமும் குறைந்துவிடும். இதனால் மூளையின் வழக்கமான பல செயல்பாடுகள் பாதிக்கப்பட்டுவிடும். இதில் பயங்கரமான விஷயம் என்னவென்றால், இந்தப் பாதிப்புகள் நிரந்தர பாதிப்புகளாகவும் அமைந்துவிட வாய்ப்புக்கள் உள்ளன என்பது தான்.

சராசரியாக ஏழிலிருந்து எட்டு மணி நேரம் வரை தூங்குவது தான் சிறந்தது எனக் கண்டு பிடித்துள்ளார்கள். ஏழு மணி நேரத்திற்கக் குறைவான கால அளவில் தூக்கம் கொண்டிருந்தால் அவர்களுக்கு இதய நோய்கள் வருவது, மூளைச் செயல்பாட்டில் பாதிப்பு, உடல் பருமன் அதிகரித்தல், நீரிழிவுக்கான வாய்ப்புகள் அதிகரிப்பது போன்ற பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகமுள்ளன. அது மட்டுமில்லாமல் விரைவில் இறப்பதற்கான வாய்ப்புகள் கூட 12 சதவீதம் வரை அதிகரிக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அட குறையத் தூங்கினால் தான் பிரச்சினை என்று நினைத்து விடாதீர்கள்! எட்டு மணி நேரத்திற்கு அதிகமாகத் தூங்கினாலும், இதய நோய்கள் ஏற்படுவது, உடல் பருமன் அதிகரிப்பது, நீரிழிவு நோய்க்கான வாய்ப்புகள் அதிகரித்தல் மட்டுமில்லாமல், இறப்பதற்கான வாய்ப்புகளும் 30 சதவீதமாக உயர்ந்துவிடும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். எனவே அதிக நேர தூக்கமும் ஆபத்தானது நண்பர்களே!

ஆனால் நாம் பார்க்கும் ஒரு சிலர், இரவில் நீண்ட நேரம் முழித்துவிட்டு காலையில் விரைவாக எழுந்து சிறப்பாகச் செயல்படுவார்கள். அவர்களைப் பார்த்தால் சிலருக்குப் பொறாமைகூட வரும். இவர்களா மட்டும் ஏன் இப்படி இருக்க முடிகின்றது என்பதை அறிய வேண்டும் என்றால், அதற்கு அவர்களின் டி.என்.ஏவைத் தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏனென்றால் சிறிது காலம் தூங்கினாலும் சிறப்பாக செயல்படுபவர்களின் ஜீன்களில் அதற்குத் தகுந்த தகவமைப்பு இருக்கும். இதன் மூலம் அவர்களுக்கு மற்றவர்களைப் போல எட்டு மணி நேர தூக்கம் தேவையில்லை, அதற்குப் பதிலாக அதற்குக் குறைவான கால அளவு தூக்கமே போதும். இதைச் சோதிக்க ஆராய்ச்சியாளர்கள் ஒரு எலியின் டி.என்.ஏயை மாற்றிச் சோதித்தனர். சாதாரண எலி தூங்கும் காலத்தை விட இந்த மாற்று எலி 1.2 மணி நேரம் குறைவாகத் தூங்கியிருந்தும் எப்பொழுதும் போல் உற்சாகமாக செயல் பட்டது என்று அந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

எனவே, சரியான கால அளவில் உறங்கி எழுவது நமது இதயம், மூளை என உடலின் எல்லா பாகங்களும் சிறப்பாகச் செயலாற்ற உதவும். சரி, நண்பர்களே, கடைசியாகத் தூக்கத்தைப் பற்றி இன்னும் ஒரே ஒரு சுவாரசியமான விஷயத்தை சொல்கிறேன் கேளுங்கள். உங்களுக்கு ஒன்று தெரியுமா? ஒரு மனிதன், தனது வாழ்நாளில் சராசரியாக 24 ஆண்டுகள் தூங்குகிறான். நம்ப முடிகிறதா?

சரி நண்பர்களே இனி நீங்கள் கூறுங்கள். நீங்கள் தினமும் எத்தனை மணி நேரங்கள் தூங்குவீர்கள்? இதற்குரிய பதிலை மட்டுமில்லாமல், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!



## செல்விகள். ராகவி,யாதவி, இராஜகுலசிங்கம் அவர்களின் சிறப்பான பரதநாட்டிய அரங்கேற்றம்!

செய்திதொகுப்பு: ஜெய. சக்தி



வெற்றிமணி சார்பாக அரகேற்ற நாயகிகளுக்கு வளா் கலைவிருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

நிருத்திய நாட்டியாலய அதிபரும், ஆசிரியையுமான, நாட்டிய கலைமணி திருமதி. அமலா அன்ரனி சுரேஸ்குமார். அவர்களின் மாணவிகளான செல்வி. ராகவி. இராஜகுலசிங்கம். செல்வி. யாதவி. இராஜகுலசிங்கம், அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 30.03.2019.அன்று யேர்மனியில் marl. நகரில் சிறப்பாக நடைபெற்றது. அரங்கேற்ற விழாவிற்கு தலைமை, விருந்தினராக வெற்றிமணி பத்திரிகை பிரதம ஆசிரியர் கலாநிதி, மு. க. சு. சிவகுமாரன். அவர்களும் பிரதம, விருந்தினராக திருக்கோணேஸ்வரர் நடனாலய (சுவிஸ்) அதிபர் நாட்டியக்கலைமணி திருமதி மதிவதினி சுதாகரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். சிறப்பு விருந்தினராக திரு.கி.த.கவிமாமணி அவர்கள் கலந்து கொண்டார்கள். துர்க்காதுரந்தரர் ஜெயந்திநாதக்குருக்கள் அவர்களின் நடராஜர் பூஜையுடன் அரங்கேற்றம் ஆரம்பமானது.

விநாயகர் துதியில் தொடங்கி மங்களம் வரை சிறப்பான முறையில் பரதநாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. அதில் ஆர்ப்பாட்டமில்லாமல் தேவையான அடவுகள் அங்கு காணக்கூடியதாக இருந்தது. மரபுமாறாத நடனத்தை கண்டு யாவரும் வியந்தனர். இசை வேளையில் நிரோஜன். “என்ன தவம் செய்தனை”. என்னும் பாடலை சிறப்பாகப் பாடியிருந்தார். அந்த இளம் வாய்ப்பாட்டு கலைஞனுக்கு எமது பாராட்டுக்கள். வயலினும், மிருதங்கமும் நடனத்துக்கு உயிர் கொடுத்தது.

தலைமை விருந்தினராக வெற்றிமணி பத்திரிகை, சிவத்தமிழ் சஞ்சிகை ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் கலந்து உரையாற்றினார். அவர்தம் உரையில் பொதுவாக ஒரு மாணவிக்கு அரங்கேற்றம் செய்வது சுலபம். அங்கே ஒப்பீடு பரதத்துடன் மட்டுமே இருக்கும் ஆனால் இங்கு இருமாணவிகள் என்பதால் ஒப்பீடு இரு மாணவிகளின் அசைவிலும் அது இருக்கும். அது மட்டுமன்றி பாடல்கள் இருவருக்கும் ஏற்றவகையில் தேர்வு செய்யவும், பாடவும் வேண்டிய பொறுப்பு அதிகமாக இருக்கும். இப்பாரிய பொறுப்பினை சிறப்பாகச் செய்த குருவையும், அதனை சிறப்பாக அபிநயத்த மாணவர்களையும் பாராட்டியே ஆகவேண்டும் என்றார்.மாணவிகளின் குருவாகிய நாட்டியக்கலைமணி அமலா சுரேஷ் அன்ரனி அவர்கள் மாணவிகளுக்கு அரங்கேற்றச் சான்றிதழை வழங்கினார்.

பிரதமவிருந்தினராக திருக்கோணேஸ்வரர் நடனாலய (சுவிஸ்) அதிபர் நாட்டியக்கலைமணி திருமதி மதிவதினி சுதாகரன் அவர்கள் கலந்து மாணவிகளின் நடனத்தை மிகத் துல்லியமாக அவதானித்து ஒவ்வொரு அசைவுகளையும் மெச்சி வாழ்த்தி உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக திரு.கி.த.கவிமாமணி அவர்கள் நாட்டிய மங்கையரின் நடனச்சிறப்பையும், வாய்ப்பாட்டுக் கலைஞர் திரு நிரோஜன் அவர்களையும் சிறப்பாக வாழ்த்தி உற்சாகப்படுத்தினார்.



சிம்மக்குரலோன், லோ. வலரன்ரயினதும், பென்சியா டொன் பொஸ்கோ. அவர்களது அறிவிப்பு, மேடையை மேன்மை படுத்தியது. ராகவி, யாகவி இருவரும். தொடர்ந்து இப் பரதக்கலையை பயின்று குருவுக்கும். பெற்றோர்க்கும் பெருமை சேர்க்க வேண்டி வாழ்த்துகின்றோம்..




வூப்பெற்றால் யேர்மனி அருள்மிகு 0202 47 960 17

**ஸ்ரீ நவதுர்க்காதேவி ஆலயம்**

**மஹோத்ஸவ விஞ்ஞாபனம் 2019** 17.05.2019 - 28.05.2019

16.05.2019 வியாழன் கணபதிஹோமம்.விநாயகர் வழிபாடு கிராமசாந்தி வாஸ்துசாந்தி
**17.05.2019 வெள்ளி 1ம் திருவிழா கொடியேற்றம்.**
18.05.2019 சனி 2ம் திருவிழா (கற்பகத்தருக்காட்சி)
19.05.2019 ஞாயிறு 3ம் திருவிழா (முப்பெரும்தேவியர் திருக்காட்சி)
20.05.2019 திங்கள் 4ம் திருவிழா (ஸ்ரீ சக்கரபூசை)
21.05.2019 செவ்வாய் 5ம் திருவிழா (தேசிக்காய்விளக்குப்பூசை)
22.05.2019 புதன் 6ம் திருவிழா (கைலாசவாகனக்காட்சி)
23.05.2019 வியாழன் 7ம் திருவிழா (மாவிளக்குப்பூசை)
24.05.2019 வெள்ளி 8ம் திருவிழா (சப்பரத்திருவிழா)
**25.05.2019 சனி 9ம் திருவிழா தேர்த் திருவிழா**
26.05.2019 ஞாயிறு 10 ம் திருவிழா தீர்த்தத்திருவிழா
27.05.2019 திங்கள் பூங்காவனத்திருவிழா
28.05.2019 செவ்வாய் வைரவர் உற்சவம்.


**25.05.2019 சனிக்கிழமை தேர்த் திருவிழா**

**அனைவரையும் அம்பாள் அருள்பெற்றேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

ஆலயத் தொடர்புகளுக்கு: திரு.ஜெயம் 0202 733905 - திரு.ஜெயானந்தன் 0202 7581924
ஆலயகுரு: 0202 51565474
ஆலயத்தில் கடைகள் போட விரும்புவர்கள்: திரு.லவனுடன் தொடர்புகொள்ளவும். 0177 5711 362



Sri Navathurgadevi Tempel e.V. Wuppertal- Hünefeldstrasse 63 b 42285 Wuppertal,Tel:0202 479 6017



# திருமந்திரமும் வாழ்வியலும் 37

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.




## வேதங்கள்

வேதம் மறை, சுருதி எனவும் அழைக்கப்படுகின்றது. தமிழில் நான்மறை எனக் கூறுவாரும் உண்டு. வேதங்கள் சிவபெருமானால் நாத வடிவில் ரிசிகளுக்கு அருளப்பட்டவை.

இறைவனால் அருளப்பட்ட வேதங்களை இருக்கு (ரிக்), யசுர், சாமம் (சாம), அதர்வணம் (அதர்வண) என நான்காகத் தொகுத்தவர் வேதவியாசர். வேதங்கள் ஒவ்வொன்றிலும் 1.சம்ஹிதை, 2.பிராமணம், 3.ஆரண்யம், 4.உபநிடதங்கள் என நான்கு பிரிவுகள் உள்ளன. ரிக் வேதம் முதல் தோன்றிய வேதமாகக் கருதப்படுகின்றது. ரிக் வேதத்திற்கு ஐதரேய உபநிடதம் என்னும் ஒரே ஒரு உபநிடதம் மட்டும் உண்டு. வேதாந்தம் என்பது 4 வேதங்களின் (108 உபநிடதங்கள் உட்பட) முடிந்த முடிவாகும்.வேதாந்தத்தைப் பின்பற்று பவர்கள் வேதாந்திகள். வேதங்கள் குரு சீடர் பரம்பரையாக, வாய்மொழியாக சமஸ்கிருத மொழியில் கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. சைவசித்தாந்தம் வேதங்களைப் பொது நூலாகவும் ஆகமத்தைச் சிறப்புநூலாகவும் போற்றுகின்றது. வேதாந்தமும் சித்தாந்தமும் சைவசமயத்தின் இரு கண்களைப் போன்றவை. வேதங்களில் இயற்கையோடு இயைந்த மூவகை நிலைகளில் தெய்வங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இவை விண்ணைச் சார்ந்தவை, இடைவெளியைச் சார்ந்தவை, மண்ணைச் சார்ந்தவையாகும். பஞ்ச பூதங்கள் (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) தெய்வங்களாக வழிபடப்படுகின்றன. முக்கியமாகப் பரம்பொருளை ஒளி வடிவில் இருக்கு, சாம வேதங்களில் போற்றப்படுகின்றது. யசுர் வேதத்தில் உருத்திரனுக்கு 100 பெயர்கள் கூறப்பட்டுள்ளன. திருமந்திரத்தில் முதற் தந்திரத்திற்கு முன்பாக மறைப் பெருமை என்னும் நான்காவது தலைப்பில் வேதங்கள் பற்றி திருமூலர் விபரித்துள்ளார். திருமந்திரப் பாடல் 2397

"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன
நாதன்உரை அவைநாடில் இரண்டு அந்தம்
பேதம்அது என்பர் பெரியோர்க்கு அபேதமே"

வேதங்கள், ஆகமங்கள் எல்லாம் இறையருள் கூறும், இறைவனால் அருளிச்செய்யப்பட்ட உண்மைப்பொருளுணர்த்தும் உயர்ந்த நூல்களாகும். ஓதப்படும் வேதம் பொதுவானது என்றும், ஆகமம் சிறப்புடையது என்றும் கூறுவர். சிவனருளிய இரண்டுமே வேறு வேறானவை எனச் சிலர் கூறினாலும், கற்றறிந்த பெரியோர் இரண்டையும் ஒன்றென்பர். வேறுபாடு காணார்.

திருமந்திரப் பாடல் எண் 51

"வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே"

வேதத்தில் கூறப்பட்டுள்ளதை விடச் சிறந்த வாழ்க்கை நெறி வேறில்லை. உயர்ந்த வாழ்க்கை நெறி முறைகள் எல்லாமே வேதத்தில் விளக்கப்பட்டுள்ளன. எனவே எடுத்ததற்கெல்லாம் ஏன், எதற்கென்று தர்க்கம் செய்து, வாதம் புரிவதை விட்டு, கற்றறிந்த பெரியோர்கள், அறிவு நலம் மிக்க வேதத்தைப் படித்துணர்ந்தே வீடு பேற்றைப் பெற்றுள்ளார்கள். அதாவது வீண் வாதம் செய்யாமல் வேத நெறி கூறும் அற வாழ்வு மேற்கொண்டு அதன்படி நடந்தொழுகுங்கள். பேரின்ப வாழ்வு பெறலாம்.

திருமந்திரப் பாடல் எண் 52

"வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே"

வேதத்தைச் சொன்னவனும், வேதம் ஓதுபவர்கள் வேள்விப் பயன் சிறக்க வேதப் பொருள் விழங்க வைத்தவனும் உண்மைப் பரம் பொருளான சிவபெருமானே ஆவான். ஆகவே வேதங்களைச் சொன்னவன் பிரமன் என்பார்கள். ஆனால் பிரமன் வேதம் உரைத்தவனாக மாட்டான். மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்" எனவும், திருஞானசம்பந்தப் பெருமான் தேவாரத்தில் "வேதமாய், வேள்வியாகி விளங்கும் பொருள்" எனவும் பாடியுள்ளார்கள்.

திருமந்திரப் பாடல் எண் 53

"இருக்கு உருவாம்எழில் வேதத்தின் உள்ளே
உருக்கு உணர்வாய்உணர் வேதத்துள் ஓங்கி
வெருக்கு உருவாகிய வேதியர் சொல்லும்
கருக்கு உருவாய்நின்ற கண்ணனும் ஆமே"

வேத மந்திரப் பொருளாகவும், வேதத்தின் அழகிய உருவமாகவும், உள்ளம் உருக்கும் உணர்வு தரும் வேதப் பொருளாகவும், சிறப்புக்குரியவரான வேதியர்கள் சொல்லும், உலகத் தோற்றுக்குக் காரணமாகவும் விளங்குபவன் முக்கண் முதல்வனான சிவப்பரம்பொருளேயாகும்.

திருமந்திரப் பாடல் எண் 55

"ஆறங்கமாய் வரும் மாமறை ஓதியைக்
கூறங்கம் ஆகக் குணம்பயில்வார் இல்லை
வேறங்கம் ஆக விளைவுசெய்து அப்புறம்
பேறங்கம் ஆகப் பெருக்கு கின்றாரே"

சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், சௌரம், கௌமாரம் ஆகிய ஆறு சமயத்திற்கு ஒப்பற்ற வேதத்தை ஓதி அருளிய சிவபெருமானை, உமை அம்மைக்குத் தன் உடலின் இடப்பாகத்தை தந்த சிவப்பரம்பொருளின் அருளாற்றலைப் போற்றிப் புகழ்பவர் இல்லை. இப்படிப் புகழாதவர்கள் வேறு சமய சாத்திரங்களைப் பயின்று கடைப்பிடித்து அந்த வேறானவற்றையே பெரிதாகப் போற்றி செய்து வாழ் நாளை வீண் நாளாக்குகின்றார்களே!

திருமூலரின் இக்கருத்தை அருணகிரிநாதரும் "அறு சமயச் சாத்திரப் பொருளோனே" எனக் கூறியுள்ளார்.திருஞானசம்பந்தப்பெருமான் வேதங்கள் சிவனிடமிருந்து வந்ததைப் பின்வரும் பாடலில் கூறியுள்ளார்

"பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே
வேத நான்கும் பதினெட்டோடு ஆறும் விரித்தார்கு இடம்
தாதுவிண்டம் மதுவண்டு மிண்டிவரு வண்டினம்
கீதம்பாடம் மடமந்தி கேட்டுகளும் கேதாரமே"


## 13ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
25.09-1942

மறைவு:
09.05.2006

திருமதி ஞானேஸ்வரி.சிவஞானசுந்தரம்

பதின்மூன்று ஆண்டுகள் சென்றாலும் தினம் உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல நீயில்லை! உன் நினைவால் வாடி வதங்குகின்றோம் இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள் இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன நினைவெல்லாம் நீயே தாயே! என்றும் உன்னை மறக்காமல் வாடும்

அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்.சு.சிவஞானசுந்தரம் யேர்மனி டோட்மூண்ட் Handy: 0176 69 366 433







இராவணனின் விண்வெளி தொழில்நுட்பத்தை உலகிற்கு எடுத்துக்கூறும்

# விண்ணுக்கு ஏவப்பட்ட இலங்கை செய்மதி விண்வெளி மையத்தை சென்றடைந்தது







இலங்கை வரலாற்றில் முதன் முறையாக இலங்கையின் பொறியியலாளர்களினால் நிர்மாணிக்கப்பட்ட இராவணா-1 செய்மதி சர்வதேச விண்வெளி மையத்தை இன்று 18.04.2019 சென்றடைந்தது.

நேற்று அதிகாலை 2.16 மணிக்கு அமெரிக்காவிலிருந்து சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட குறித்த செய்மதி இன்று விண்வெளி மையத்தை (18.04.2019) சென்றடைந்தது.

இந்தச் செய்மதியானது, எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதமளவில் விண்ணில் நிலைநிறுத்தப்படவுள்ளது.

அமெரிக்காவின் வெர்ஜினியா பிராந்தியத்திலிருந்து நாசா விண்வெளி நிறுவனத்தின் ஏவூர்திப் பொறியின் மூலம், புவியிலிருந்து சுமார் 400 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சர்வதேச விண்வெளி மையத்திற்கே இந்த செய்மதி கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

ஜப்பானின் கியூ பல்கலைக்ககத்தின் பர்டிஸ் என்ற விசேட திட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்டுள்ள ஆயிரம் கனசென்றிமீற்றர் நீளமுடைய இராவணா 1 செய்மதியானது, 1.1 கிலோ கிராம் நிறைகொண்டதாகும்.

ஆர்த்தர் சீ.க்ளாக் மையத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சனத் பனாவென்னவின் யோசனைக்கு அமைய, இந்த செய்மதி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கு இராவணா- 1 என்றும் பெயரிடப்பட்டுள்ளது. இராவணனின் விண்வெளி தொழில்நுட்பத்தை உலகிற்கு எடுத்துக்கூறும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த செய்மதி விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் பின்னர், இலங்கையையும் அதனைச் சூழவுள்ள வலையத்தையும் நிழற்படம் எடுத்தல் உள்ளிட்ட 5 செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






**Warendorf நகரில்**

**இரு கடைகள்**
**விற்பனைக்கு உண்டு!**

வியாபாரத்திற்கு
அமைவான இடத்தில்
நடைபெற்றுக்கொண்டு இருக்கும்
வியாபார ஸ்தாபனம் ஒன்றும்
வீட்டோடு சேர்ந்த கடை ஒன்றும்
விற்பனைக்கு உண்டு.
வர்தகத்தில் நாட்டமுள்ளவர்கள்
உடன் தொடர்பு கொள்ளவும்.

0179 48 555 54

**விநாயகா ஜோதிட நிலையம்**

**பண்டித் துர்க்கா பிரசாத்**

எவ்வித பிரச்சினைகளுக்கும் 09 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும்..!

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம்,
பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம்
வாகனம், வீசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ
முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள்,
கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!
பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08:00 மணி முதல் மாலை 09:00 மணி வரை

CONFIDENTIAL

Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655

PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach

SJ SOUTH INDIAN FOOD

0621 33 93 53 64

SOUTH INDIAN & SRI LANKAN
RESTAURANT

G2,21-23
68159 Mannheim
Mobil:0173 68 28 990



மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்

Ludwigshafen
Schulstr 7-9
67059 Ludwigshafen
Tel: 0621 545 44 276

Mannheim
S1 -11
68161 Mannheim
Tel: 0621 862 43 212

info@asian-afro.de

S.J ASIAN - AFRO STORE



# யார் இவள்?



**சின்னத்திரை, வெள்ளித்திரை கதாநாயகிகள் யாவும் இவளே**

ராம் பரமானந்தன்

அடக்கமானவள் தன் அழகை அறியாதவள், சிகப்புமேனி, உயரம் அதிகம் இல்லை, சேலையையே அணிந்துகொள்வாள். யார் திட்டினாலும், வாக்குவாதம் செய்யமாட்டாள், அநீதிகளைப் பொறுத்துக்கொள்வதே அவளின் குணம். அதிகமாக படிக்கவில்லை, படித்ததையும் காட்டிக்கொள்ளமாட்டாள். அப்பாவித்தனமாக இருந்துகொள்வாள். குடும்பத்திற்கும், முக்கியமாக கணவனுக்கோ, தகப்பனுக்கோ சாதகமாக நடந்துகொள்வாள். யார் இவள்? சின்னத்திரை, வெள்ளித்திரை கதாநாயகிகள் யாவும் இவளே.

வில்லியாக வரும் பெண், தன்னைத் தனக்குப்பிடித்த முறையில் அலங்கரித்துக்கொண்டும், நினைத்ததைப் பேசிக்கொண்டும், தன் உணர்வுகளை வெளிப்படுத்த தயங்காத முறையில் காட்டப்படுவாள். தன்நிலை அறிந்தும், தன்மானம் கொண்டவளாகவும், துணிந்தே இருப்பாள். தன் மானத்துக்கு கேடு வந்தால், அதற்கு விவாதம் இல்லாமல் அடங்கமாட்டாள். இந்த நவீனயுகப் பெண்ணின் ஆழுமைகளை வெள்ளித்திரையிலும், முக்கியமாக இந்தியச் சின்னத்திரையிலும் வில்லியின் அம்சங்கள் ஆகக் கெட்ட ஆளுமைக்கூறுகள் ஆக்கப்படுகின்றன.

வில்லனின் கெட்ட அம்சங்கள், வில்லிக்கு கொடுக்கப்படுமாயின், அவை சமுதாயத்தின் கண்களில் கூடிய விரோதமான அம்சங்களாகத் தெரிகின்றன. பெண் தன்னை அழகுபடுத்தினால் தவறென்ன?

பெண் தன்னை விரும்பி அலங்கரிக்கும்போது „இவா ஆள் கனக்கா மேக்கப், சரியான ஸ்டைல்“ என்று அவளின் உள்ள அம்சங்களை அலங்காரத்துக்கு மட்டும் சமுதாயம் குறைத்து, தப்பான கணிப்பை அவளுக்கு சூட்டிவிடுகின்றன. தன் உடலும், உருவும் அழகும், அறிவும் அறிந்து அணியும் பெண்ணின் மேல் தவறான அபிப்பிராயத்தை உள்ளுணர்விடையே கொள்ள, வெள்ளித்திரையும் சின்னத்திரையும் எமக்குப் பழக்கிவிட்டன. அதைவிட, வில்லிகளின் தமிழ் உச்சரிப்பு, நடை, உடை, பாவனை ஆகியவையால் வெளிநாட்டு வாழ்க்கை முறைகளை பின்பற்றுவதாகக் காட்டி, புலம்பெயர்தமிழ் இலைஞர்கள் எமக்குள்ளே, புதியதொரு அடையாளச்சிக்கலை ஏற்படுத்துகின்றனர். இத்துடன், ஊடகங்கள் வர்ணிப்பதுபோலவே நாம் இருப்போம் என்று தாய்நாடுகளில் இருக்கும் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

திரையில் பெண்கள் ஒருவரை ஒருவர் ஆதரவு செய்வது மிகக்குறைவு. அப்படிச் செய்தாலும், அதில் வில்லிகளுக்கு இடையே மட்டுமே நட்பாய்த்தெரியும் உறவுமுறைகள் இருக்கும். அங்கே அவமதிப்பான கருத்துகள் பாயும். இதனால் திரையில் ஒரு தங்கையையோ, அண்ணியையோ அல்லது மாமியாரையோ கண்டால், இவர் அநீதி ஏதோ செய்யத்தான் இருக்கிறார் என்று எம்மை எண்ணவே, சின்னத்திரை தூண்டுகிறது. இங்கே பெண்களின் அவதானத்தை தன் உயர்வில் செலுத்தாமல், மற்றவரை வீழ்த்துவதில் செலுத்துகிறார்கள்.

பெண்ணாவள் எங்கே யாரை உயர்த்தி உயரலாம் என்றில்லாமல், எங்கே தனக்கு ஆபத்து வந்திடுமோ என்று பயந்து அலைகிறாள். முட்டாள்த்தனமாக பெண்கள் இக்கட்டான நிலையில் இருந்தால், கதாநாயகன் அவளை கடைசி நொடியில் காப்பாற்றிடுவான்.

என்று ஒரு பெண், சினிமாவில், துணிந்து ஒரு செயலைச்செய்தாலும், அது ஆபத்திலேயே முடிகிறது.

பெண்களின் விவேகத்தைப்பற்றி ஆண் இயக்குனர்கள் என்ன சொல்கிறார்கள்?



ராம் பரமானந்தன்
Ram Paramananthan

உதாரணமாக „படையப்பா“ எனும் திரைப்படத்தை எடுத்துக்கொள்வோம். மேற்கூறிய விடையங்கள் ஒவ்வொன்றும் இத்திரைக்கதைக்குப் பொருந்த, மேலும்: “பொம்பிளைனா பொறுமை வேணும் அவசரப்படக்கூடாது, அடக்கம் வேணும் ஆத்திரப்படக்கூடாது, அமைதி வேணும், அதிகாரம் பண்ணக்கூடாது, கட்டுப்பாடு வேணும், இப்படி கத்தக்கூடாது, பயபக்தியா இருக்கனும், இப்படி பஜாரித்தனம் பண்ணக்கூடாது மொத்தமா பொம்பிளைனா பொம்பிளையா இருக்கணும்” என்று பெண்ணுக்கான இலக்ணத்தை 10 நொடிக்குள் எழுதி விடுகிறான் படையப்பன். அடக்கம், அமைதி, பயபக்தி ஆகியவை என்றும் பெண்ணுக்கே சேருமா? இல்லை ஆறறிவு கொண்ட உயிரினம் அனைத்திற்கும் சேரவேண்டியதா?

படையப்பா 99ம் ஆண்டில் ஓடிய திரைப்படம், ஆனால் இன்றும் ஆதித்யா TV தொடங்கி ZTV வரை இப்படியான திரைக்கதைகள் ஓடுகின்றன.

சினிமாவிலும் சின்னத்திரையிலும் ஆண்களால் பெண்கள் வடிவமைத்து, திரையில் நியமிக்கப்படுகின்றன. ஆண்களால், ஆண்களுக்காக எழுதப்பட்ட பெண்கற்பனைகள் கனவுக்கன்னிகளாக சமுதாயத்தின் மனங்களிலே பதிக்கப்படுகின்றன.

ஊடகவியல் தத்துவத்தில் நான் முதலில் கற்ற விதி: ஊடகங்கள் ஒரு தேசத்தினதும், காலகட்டத்தினதும், சமுதாயத்தினதும் அம்சங்களை எதிரொலிக்கும், அதே நேரத்தில் ஊடங்கள் காட்டுபவை சமுதாயத்திலும் எதிரொலிக்கும்.

ஆகவே திரையில் வருவது, தரையில் வரும். திரையில் கதாநாயகன் ஒரு பெண்ணை அவள் சம்மதம் இன்றி துரத்தித்துரத்தி வீடியோ எடுத்து „One-Side Love” எனும் பெயரில் பலாத்காரம் செய்ய, நிஜவாழ்வில் எல்லைகள் அறியாத ஒருவன் குளிக்கும் பெண்ணை வீடியோ எடுக்க நேரம் ஆகாது. சமுதாயம் சிந்திக்கும் முறைகளுக்கும், செயற்படும் முறைகளுக்கும் சினிமா/ஊடகங்கள் முக்கிய வழிகாட்டியாக அமைகின்றன. இதனால் ஊடகங்களுக்கு இன்றைய காலகட்டத்தில் அதிமுக்கிய சமுதாயப்பொறுப்பு உள்ளது.

படையப்பா பெண்ணின் இலக்கணத்தை நீலாம்பரியின் முகத்தில் விளாசும்போது, அவள் முகம் சுழிக்காமல் நிற்கிறாள், ஆனால் படையப்பா வின் இலக்கணத்தில் அடங்கும் வசுந்திரா, படையப்பாவின் முதுகின் பின்னே மறைகிறாள். “பெண்ணின் இலக்கணத்தைக்கூற நீ யார்?” என்று வசுந்திரா எண்ணவில்லை. எண்ணக்கூடாதோ?

படையப்பாவை நிற்கவைத்துப்பேசும் நீலாம்பரி ஒரு ஆணின் கையில் தனது வாழ்க்கை இருக்கக்கூடாது என்று தற்கொலை செய்கிறாள். பெண்ணுரிமைக்கு தீவிரமான எடுத்துக்காட்டை வைத்துச்செல்கிறாள் நீலாம்பரி. நீலாம்பரியின் சாவு, பெண்ணுக்கு ஆண் அடங்கினால் தான் வெற்றி என்பதை மறுத்துக்காட்டி நிற்கிறது.

“அதிகமா ஆசைப்படுற ஆம்பிளையும் அதிகமா கோவப்பட்ற பொம்பிளையும் நல்லா வாழ்ந்ததாக சரித்திரமே கிடையாது” என்று 90ம் ஆண்டுகளில் திரையில் வந்த இந்தப் பஞ்ச் டையலாக்கை (Punch Dialogue) புலம்பெயர்நாட்டில் தரையில் சென்ற வருடம் நடந்த தமிழ்பேச்சுபோட்டியில் ஒரு மாணவன் பேச நான் கண்டு தலைகவிழ்ந்தேன்.






அனைவருக்கும் எங்கள் மேதின வாழ்த்துக்கள்

# மனித நேயச் செயற்பாடுகளில் யேர்மனி!

## சுனாமிப் பேரலைக்கு அள்ளிக்கொடுத்த யேர்மனி



மனித நேயச் செயற்பாடுகள் என்பது எவ்வளவு சிறப்பானது. இந்தப் பூமியில் வாழும் மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து, இயலாதவர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவி செய்து வாழ்வதுதான் இந்த மனிதப் பிறப்பின் பெறுபேறாகக் கருதப்படுகிறது. மனிதர்களிடையே நிலவும் சாதி, மதம், ,நிறம், மொழி, போர், அதிகாரம் என நீண்டு செல்லும் பகமைகளும் போட்டி பொறாமைகளும் ஒரு புறம்.. இயற்கை அழிவுகளான புயல், சூறாவளி, நிலநடுக்கம், சுனாமி, மண்சரிவு, எரிமலைவெடிப்பு, வெள்ளப்பெருக்கு, கொடிய வறட்சி எனப் பல அனர்த்தங்களும் நமக்கு வந்து சேர்ந்து பெரும் உயிர் அழிவுகளும் சொத்து அழிவுகளும் ஏற்படுகின்றன. வசதியான நாடுகள் இதற்காகப் பல கோடிகளை மனிதநேய உதவிகளாக வழங்கி வருகின்றன என்பதை நாம் அறிவோம். அந்த வகையில் யேர்மனி நாடு கடந்த காலங்களில் இப்படிப்பட்ட பேரனர்த்தங்களுக்கு மிகப்பெரும் நிதி உதவிபுரிந்த விபரங்களை இங்கே காணலாம்.

| | | | |
|---|---|---|---|
| 01-இந்து சமுத்திர சுனாமிப் பேரலை | 2004 | - 29.9 | மில்லியன் யூரோ |
| 02-ஹயிட்டி நாடு (Haiti) நிலநடுக்கம் | - 2009 | -22.0 | “ |
| 03-பாக்கிஸ்தான் மழை வெள்ளப்பெருக்கு | - 2010 | -20.2 | “ |
| 04-யப்பான் சுனாமிப் பேரலை | - 2011 | -17.7 | “ |
| 05-சோமாலியா வறட்சி பசிபட்டினி உதவி | -2011 | -17.5 | “ |
| 06-அமெரிக்கா சூறாவளி, புயல் உதவி | -2013 | -18.8 | “ |
| 07-நேபாளம் நிலநடுக்கம் | -2015 | -18.4 | “ |
| 08-ஆபிரிக்கா வறட்சி நிவாரண உதவு | -2017 | -17.8 | “ |
| 09-மெக்ஸிக்கோ புயல், நிலநடுக்கம் | - 2017 | - 17.0 | “ |
| 10-யெமன் உள்நாட்டுப்போர் பசி பட்டினிஉதவி | -2018 | - 16.5 | “ |

## யேர்மனியில் வேலை இல்லாதோரில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள நகரங்கள்

யேர்மனி நாடு பொருளாதாரத்தில் முன்னேறிய நாடாக இருந்தாலும் வேலை இல்லாதோரும் இருக்கத்தான் செய்கிறார்கள். வெளிநாட்டவர்களின் வரவு அதிகரித்ததாலும் கணனி, இயந்திரமயமாக்கலாலும் வேலையில்லாதோர் தொகை அதிகரித்து வருகின்றது. யேர்மனியில் தற்போது சுமார் 82 மில்லியன் சனத்தொகையில் 5.1 வீதமானோர் வேலையில்லாமல் இருக்கிறார்களாம். அதே நேரத்தில் யேர்மனியிலுள்ள 16 மாகாணங்களில் சனத்தொகைகூடிய மாநிலமான நோத் றைன் வெஸ்ற்பாளின் (NRW) மாநிலத்தில் 6.6 வீதமாக வேலையில்லாதோர் தொகை காணப்படுவதாகவும் வேலை இல்லாதோரில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள இடங்களைக் கீழேயுள்ள அட்டவணை காட்டுகின்றது. இத்தகவலை யேர்மனிய வேலைத்திணைக்களத்தின் 31-03-2019 அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 01-Gelsenkirchen | - 12.5% | 02-Duisburg | -11.1% |
| 03-Herne | - 10.8% | 04-Essen | -10.4% |
| 05-Mönchengladbach | - 10.1% | 06-Dortmund | -10.1% |
| 07-Herten | - 9.9% | 08-Oberhausen | - 9.7% |
| 09-Marl | - 9.7% | 10-Bochum | - 8.4% |



# யேர்மனி மணிச் செய்திகள்!

வ.சிவராஜா

## 400 தரம் வெளிநாடுகளுக்குப் பறந்த தலைவி!



யேர்மனியின் அதிகாரம் மிக்க அதி உயர் பதவியில் இருப்பவர் கான்சிலர் அங்கலா மேக்கல்தான். இவர் தற்போது 4வது தடவையாகப் பதவி வகிக்கின்றார். யேர்மனி மட்டுமல்ல ஐரோப்பா, உலகப்புகழ் பெற்ற தலைவராகவும் இருந்துவரும் இவர் 2019 பெப்ரவரி வரை மேற்கொண்ட வெளிநாட்டுப் பிரயாணங்களைப் பார்ப்போம். அதாவது பலம்பொருந்திய நாட்டின் தலைவர் என்ற ரீதியில் இவர் பல நாடுகளுக்கும் செல்ல வேண்டிய கடமை உண்டுதானே. இதுவரை 400 வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொண்டிருக்கிறார். அதன் வரிசைக்கிரமத்தைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 01-பெல்ஜியம் | - 88 | தடவைகள் | சென்று வந்துள்ளார். |
| 02-பிரான்ஸ் | - 53 | தடவைகள் | சென்று வந்துள்ளார். |
| 03-அமெரிக்கா | - 18 | „ | „ |
| 04-ரஷ்ஷியா | - 17 | „ | „ |
| 05-போலந்து | - 16 | „ | „ |
| 06-இத்தாலி | 15 | „ | „ |
| 07-பிரித்தானியா | 13 | „ | „ |
| 08-சீனா | 12 | „ | „ |
| 09-சுவீஸ்லாந்து | 11 | „ | „ |
| 10-துருக்கி | 10 | „ | „ |

### இலங்கையில் வெளிவந்த முதல் மாணவர் சஞ்சிகை வெற்றிமணி

சான்று


:: வெற்றிமணி ::-
(மாணவர் இதழ்)

உவகையடைகின்றோம்

வெற்றிமணி மூன்று ஆண்டுகளைப் பூர்த்திசெய்து கொள்ளுகின்றது. இலங்கையில் பல மாணவர்பத்திரிகைகள் நடமாடினும், வெற்றிமணிதான் கடந்த மூன்று ஆண்டுகளாக மாணவர் சமுதாயத்திற்குத் தொண்டாற்றிவரும் பத்திரிகை என்பதை நேயர்கள் மறுக்கமாட்டார்கள். சிலபத்திரிகைகள் இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேஒரு சிறுவர் பத்திரிகை என விளம்பரப்படுத்தினும் வெற்றிமணியே முதன்முதல் உதித்த மாணவர் பத்திரிகை என்பதை மாணவர்கள் ஏற்றுக்கொள்வர். வெளிநாட்டு மருமக்கள்பலர் மாணவர்மன்றத்தில் சேர்வதையறிந்து உவகையடைகின்றோம்.






# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் உடன் பணியாற்றிய ஈழத்துச் கலைச்சிங்கம் விஜயசிங்கம்.

Dr.கதிர் துரைசிங்கம்.கனடா.



Actor MGR, actress Savithri, actor M.R.Ratha and myself in film 'Vettaikaran'

**வேட்டைக்காரன் படப்பிடிப்பின் போது மக்கள்திலகம் எம்.ஜி.ஆர், சாவித்திரி இவர்களுடன் தேவர்பிலிம்ஸ் உதவியாளரக நமது விஜயசிங்கம்**

பன்னாலை தெல்லிப்பழையில் வாழ்ந்த திருவருள் சின்னத்தங்கம் தம்பதிகளுக்கு மூத்தண்ணை (தனபாலசிங்கம்) பொன்னுக்கண்டு (குலசிங்கம்) சின்னத்தம்பி (தர்மகுலசிங்கம்) செல்லக்கண்டு (பரராஜசிங்கம்) அப்புக்கண்டு (விஜயசிங்கம்) ஜெயம் (ஜெயசிங்கம்) தம்பிப்பிள்ளை (துரைராஜசிங்கம்) சறோ (சரஸ்வதி) என செல்லமாக அழைக்கப்பட்ட பிள்ளைகள் எண்மர்.

1938 ல் பிறந்த விஜயசிங்கமும் நானும் 1946 ல் ஒரே வகுப்பு மாணவர்களாக பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் ஆரம்ப கல்வி கற்க ஆரம்பித்து பின்னர் மகாஜனாக் கல்லூரியில் 1956 வரை கல்லூரி மாணவர்களாகத் தொடர்ந்து ஏழு தசாப்தங்களாக நண்பர்களாக தொடர்பில் இருந்தோம்.

1950 களில் மகாஜனா கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீரராக விஜயசிங்கம் விளங்கினார். Adigar இல்லத்தைச்சார்ந்த இவர் பங்கு பற்றாத ஓட்டப் போட்டிகள் இல்லை என்றே சொல்லலாம்.ஓட்டப் போட்டிகள் உயரப்பாய்தல் ஆகியவற்றில் முதல் இடம் அனேகமாக வகித்த இவர் 1953 ல் இல்ல விளையாட்டு அணித் தலைவராகவும் (Athletic Captain) 1955 ல் இல்லத் தலைவராகவும் (House Captain) திகழ்ந்தார்.1957 ல் கல்லூரி விளையாட்டு சாதனை வீரராக (Athletic Champion) தெரிவு செய்யப்பட்ட இவர் யாழ் கல்லூரிகளுக்கு இடையிலான (J.S.S.A) விளையாட்டுப் போட்டியில் உயரப்பாய்தலில் சாதனை நாட்டியிருந்தார்.



Football Captain in 1954 for Second Eleven

மகாஜனாக்கல்லூரி 2 nd Eleven உதைபந்தாட்ட அணித்தலைவராக 1954 ல் பணியாற்றிய இவர் தொடர்ந்து வந்த மற்றைய ஆண்டுகளில் 1 st Eleven அணியில் விளையாடினார்.



Actress Sowkarjanaki and myself in film 'Thunaivan'

**தேவர் பிலிம்ஸ் துணைவன் படத்தில் சௌக்கார் -யானகியுடன்**

தொடர்ச்சி 38 ம் பக்கம்




37 ம் பக்கத் தொடர்ச்சி...

## மக்கள் திலகம் எம்.ஜி.ஆருடன் பணியாற்றிய ஈழத்துச் கலைச்சிங்கம் விஜயசிங்கம்.



Myself and actress K.R.Vijaya in film 'Apoorva Sagotharigal'

அபூர்வசகோதரிகள் படத்தில் கே.ஆர் விஜயாவுடன் விஜயசிங்கம்.

அதிபர் தெ.து.ஜயரத்தினம் அவர்களின் அபிமானத்துக்குரியவரான விஜயசிங்கத்தின் மறு பக்கம நடிப்புக்கலையாகும். ஆண்டு தோறும் இடம் பெறும் கல்லூரி ஸ்தாபகர் தின நிகழ்வின் நாடகங்களில் கதாநாயகனாக இவர் நடித்தவை துரோகி யார்? ராஜ ராஜ சோழன் அம்பிகாபதி ஆகியவை.

1955 ல் இல்லங்களுக்கிடையே நடந்த நாடக போட்டிகளில் இவர் கதா நாயகனாக நடித்த அஞ்சுகம் நாடகம் முதற் பரிசு பெற்று இவருக்கு சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றுக்கொடுத்தது.பன்னாலை கணேச சனசமுக நிலைய நிதி சேகரிப்புக்காக இவர் நடித்த நாடகங்கள் அமரசிற்பியும் நிராசையுமாகும்.

## தேவர் பிலிம்ஸில் இணைந்தார்.



Myself with tiger in Hindi film 'Jaanvar or Insaan'



Actor Senthaamarai and myself in film Pirenthein Valarnthein

நடிகர் செந்தாமரையுடன் பிறந்தேன் வளர்ந்தேன் படத்தில்

நடிப்பிலும் திரைத்துறையிலும் மோகம் கொண்ட இவர் 1959 ல் சென்னை சென்று தேவர் பிலிம்ஸில் சாதாரண ஊழியராக இணைந்தார். விஜயசிங்கத்தின் திறமையையும் கடின உழைப்பையும் கண்ட சின்னப்பா தேவர் எம்.ஏ. திருமுகம் இயக்கிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆரின் தாய் சொல்லைத் தட்டாதே திரைப்படத்திற்கு உதவியாளராக நியமித்தார். விஜயசிங்கம் உதவி இயக்குனராகவும் துணை இயக்குனராகவும் 25 படங்களில் பணியாற்றிய பின்னர் இணை இயக்குனராகி 19 திரைப்படங்களில் பணியாற்றினார்.



Myself, actor Gowndamani and actress Srividhya in film 'Panam Pathum Seiyum'

நகைச்சுவை நடிகர் கவுண்டமணி நாயகனாகவும், ஸ்ரீவித்யா நாயகியாகவும் நடித்த "பணம் பத்தும் செய்யும்" காட்சியை விளக்கும் இயக்குனராக விஜயசிங்கம்.

**1985 ல் வெளிவந்த "பணம் பத்தும் செய்யும்" திரைப்படம் 100 நாட்கள் கடந்து வெற்றி நடை போட்டு சாதனை படைத்தது.**

விஜயசிங்கத்தின் செயற் திறனை உணர்ந்த தேவர் பணம் பத்தும் செய்யும் என்ற திரைக்கதையை இயக்கும் பணியை இவரிடம் ஒப்படைத்தார். விஜயசிங்கத்தின் இயக்கத்தில் 1985 ல் வெளிவந்த பணம் பத்தும் செய்யும் திரைப்படம் 100 நாட்கள் கடந்து வெற்றி நடை போட்டு சாதனை படைத்தது. தொடர்ந்து இவர் இயக்கத்தில் வெளி வந்த படங்கள் பிறந்தேன் வளர்ந்தேன் எங்க ராஜா கிளி ஜோஸ்யம் பஸ் கண்டக்டர் எல்லாம் பணத்துக்காக ஆகியன தயாரிப்பாளரின் திருப்திக்கு ஓடிய படங்கள்.முண்ணணி நடிகர்கள் பலருடன் பணியாற்றும் சந்தர்பம் இவருக்குக் கிடைத்தது.எம்ஜி.ஆர்.ஜெமினி கணேசன். ரஜனிகாந்த்.ஜெய் சங்கர்.ஏ.வி.எம்.ராஜன். சிவகுமார்.சாவித்திரி. ஜெயலலிதா. கே.ஆர்.விஜயா.சௌகார் ஜானகி.சுஹாசினி என்று பல பிபலங்களுடன் நடிக்கும் வாய்ப்பும் கிட்டியது.

**இவர் பணியாற்றிய 60க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் சில:- தாய் சொல்லைத் தட்டாதே தாயை காத்த தனையன் தர்மம் தலை காக்கும் வேட்டைக்காரன் முகராசி தனிப்பிறவி விவசாயி நல்ல நேரம் துணைவன் நேர்வழி வெள்ளிக்கிழமை விரதம் ஆட்டுக்கார அலமேலு அன்னை ஓர் ஆலயம் தாயில்லாமல் நானில்லை அபூர்வ சகோதரிகள்**



தனிப்பிறவி

மூன்று பெண் பிள்ளைகளுக்குத் தந்தையான விஜயசிங்கம் மனைவி லீலாவதியடனும் பிள்ளைகளுடனும் 2011ல் லண்டனில் குடியேறினார். பிள்ளைகள் மூவருக்கும் தகுந்த வாழ்கைத்துணை தேடி திருமணம் செய்து வைத்தார்.இவருக்கு 6 பேரக் குழந்தைகள் உண்டு. தனது அனுபவங்களை I.B.C தொலைக்காட்சியின் நேர்காணல் நிகழ்ச்சியான அகக்கண்ணில் பதிவு செய்திருந்தமை லண்டன் வாசிகளின் நினைவில் நிலைத்திருக்கும்.

சிறிது காலம் சுகவீனமுற்று இருந்த விஜயசிங்கம் இலண்டனில் 2019 மார்ச் மாதம் 19 ல் காலமானார். தமிழ்நாட்டில் எதிர்நீச்சல் அடித்து வெற்றிகண்ட நம்தேசத்துக் கலைஞரின் சாதனைகள் எதிர்கால, திரைப்பட வல்லுணர்களுக்கு சிறந்தபாடமாக அமையும் என்பது திண்ணம்.


JM

Milin Impex GmbH

மலிவான தரமான மளிகைப்பொருட்களின் மொத்த சில்லறை விற்பனையாளர்

தாயக மரக்கறிகள் பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Tel: 0231 45 96 17

விபரங்களுக்கு





Web :www.milinimpex.de

எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்

Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

# கருப்பும் ஓர் அழகே

## கோடி தந்தாலும் நடிக்க மறுத்த நடிகை!



மாரி2 மற்றும் பிரேமம் படம் மூலம் பிரபலமான சாய் பல்லவியை ஒரு வழியாக கோலிவுட்டுக்கு அழைத்து வந்துவிட்டனர். அவர் தற்போது கோலிவுட்டின் பிசியான நடிகைகளில் ஒருவராக உள்ளார். இந்நிலையில் அவரை தேடி பெரிய விளம்பர வாய்ப்பு ஒன்று வந்துள்ளது.



சாய் பல்லவி



சாய் பல்லவி இயற்கையாகவே சிவப்பானவர். அவரின் கன்னங்கள் கூடுதல் சிவப்பாக இருப்பது தனி அழகு. இந்நிலையில் அவரை சிவப்பழகு கிரீம் விளம்பரத்தில் நடிக்குமாறு கேட்டுள்ளனர். உடனே அவர் முடியவே முடியாது என்று கூறிவிட்டாராம்.

நீங்க நடிக்க ஒப்புக் கொண்டால் ரூ. 2 கோடி சம்பளம் தருகிறோம் என்றதாம் விளம்பர நிறுவனம். எத்தனை கோடி கொடுத்தாலும் சிவப்பழகு கிரீம் விளம்பரத்தில் நடிக்க மாட்டேன் என்று கறாராக தெரிவித்துவிட்டாராம் சாய் பல்லவி. இயற்கை அழகே அழகு என்று நம்புபவர் அவர்.

சாய் பல்லவி தான் நடிக்கும் படங்களில் மேக்கப் போடுவது இல்லை. மேலும் பருக்களை மறைக்கவும் அவர் முயற்சி செய்யவில்லை. மாறாக பருவும் அழகு தான் என்பதை புரிய வைத்துவிட்டார். அப்படிப்பட்டவரிடம் சிவப்பழகு கிரீம் விளம்பரத்தில் நடிக்கச் சொன்னது தவறு. விளம்பரம் விளம்பரம் சாய் பல்லவி ரூ. 2 கோடி விளம்பர படத்தில் நடிக்க மறுத்தது இன்னும் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்படவில்லை. இருப்பினும் அவரின் முடிவு குறித்து அறிந்த ரசிகர்கள் அவரை பாராட்டியுள்ளனர். கருப்பும் ஓர் அழகு என்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ளன







இயக்குனர் என்.எஸ்.தனா

## ஒரு குயிலும் இரண்டு கோட்டான்களும்

அவுஸ்திரேலிய தமிழ் திரைப்படத்துறையில் தவிர்க்கமுடியாத இயக்குனரான N.S தனா என்று அழைக்கப்படடும் தனபாலசுந்தரம் அவர்களின் இரண்டாவது முழுநீளத் தமிழ் திரைப்படமான ஒரு குயிலும் இரண்டு கோட்டான்களும் மிக விரைவில் அவுஸ்ரேலியா திரை அரங்குகளில் வர இருக்கின்றது.

வாழ்க்கை நடத்துவதற்காக வேறு தொழிலை செய்தாலும் தனது விடுமுறை காலங்களில் திரைப்படத்திற்கு தன்னாலான முயற்சிகளை எடுத்து வந்தவர்.

Sydney film School இல் diploma of screen கற்கை நெறியை 2006 ஆம் ஆண்டு பூர்த்தி செய்து, 2007 ஆண்டில் சிகரம் தொலைக்காட்சியின் அனுசரணையில் நினைவுகளே நினைவுகளே என்ற குறும்படத்தை இயக்கியிருந்தார்.

2015 ம் ஆண்டு மனைவியின் பெயரில் சந்திரா புரடக்சன் என்ற தயாரிப்பு நிறுவனத்தை ஆரம்பித்து "யார் அந்த தேவதை" என்ற முழு நீளத்தமிழ் திரைப்படத்தை உள்ளூர் கலைஞர்களின் பெரும் பங்களிப்போடு இயக்கியிருந்தார். இப்படத்தில் தென்னிந்திய திரை நட்சத்திரமான நிழல்கள் ரவியும் நடித்திருந்தார். பல்லாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அவுஸ்திரேலிய திரையரங்குகளுக்கு வந்து பார்த்து ரசித்து பாராட்டி சென்றார்கள்.

### அவுஸ்திரேலிய தமிழ் திரைப்படத்துறையில் நம்மவர்கள்...


மீண்டும் N.S தனா இயக்கத்தில் சந்திரா புரடக்சன் தயாரிப்பில் மிக வித்தியாசமான காதல் நகைச்சுவை கலந்து சிறந்த திரைக்கதை கொண்ட "ஒரு குயிலும் இரண்டு கோட்டான்களும்" என்ற திரைப்படத்தில் நாயகர்களாக தினேஷ் மற்றும் சுதர்சன் நடித்திருக்கிறார்ள். தினேஷ் இரட்டை வேடத்தில் நடித்திருக்கிறார். நாயகியாக ஷோணா நடித்திருக்கிறார்.

கதையின் நகைச்சுவை நாயகர்களாக பாலசிங்கம் பிரபாகரன் மற்றும் ஜாபர் நாணா நடித்திருக்கிறார்கள். இவர்களோடு சண் குமாரலிங்கம், நடராசா கருணாகரன், மிருணாளினி ஐயமோகன், கிறேக் றைலி, சுத யாழவன், துஷ்யந்தன், தாமிரா தேவராசா, டுநபைா வுரசடிைரடட, அன்சிதா ரம்மியா அனேகன், சந்திரா, காந்திமதி,கபிலன் மற்றும் வானதி ரட்னேசன் ஆகியோர் நடித்திருக்கின்றனர். வைத்திய கலாநிதி வி.மனோமோகன் கொளரவ வேடத்தில் நடித்து படத்துக்கு சிறப்பு சேர்த்திருக்கிறார். "ஒருகுயிலும் இரண்டு கோட்டான்களும்" படத்துக்கு கமராவை சிட்னி பிரசாத் பொறுபரபேற்க எடிட்டிங்கை ஜோன் டொமினிக் ( இந்தியா) செய்திருக்கிறார். கவி பேரரசு வைரமுத்து ஒருபாடலை எழுதியுள்ளார். 3 பாடல்களுக்கு இசை அமைத்திருக்கின்றார் வர்ஷன் (இந்தியா). சிட்னியை சேரந்த கண்மணி ஜெகேந்திரன் இப்படத்தின் மூலம் பின்னணி பாடகி என்ற அந்தஸ்தை பெற்று வர்சனின் இசையில் வைரமுத்துவின் வரிகளை பாடியிருக்கிறார். இவரோடு திப்பு, சத்யபிரகாஷ் மற்றும் அமிர்தவாஷினி ஆகியோர் பாடல்களை பாடியிருக்கிறார்கள் .

மிக வித்தியாசமான காதல் நகைச்சுவை கலந்து சிறந்த திரைக்கதை கொண்ட "ஒரு குயிலும் இரண்டு கோட்டான்களும்" என்ற திரைப்படம் விரைவில் அவுஸ்திரேலிய திரை அரங்குகளில் வர இருக்கிறது.




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria
Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
VALUTRANS
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
0170 334 4059
பிருந்தாஸ்
Ludwig str.87a - 70197 Stuttgart
Tel: 0711 615 8976


Photography
Cinematography
Album Making
Graphic Designing
Wedding
Events
Live
Birthday
Saree Ceremony
Graphic Design
Printing
AKR Visualizers
PHOTOGRAPHY AND CINEMATOGRAPHY
professional photography | cinematography
+49 231 1087 6361
+49 162 803 1647
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com
Rheinische Str. 72
44137 Dortmund


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India
Singapore
Malaysia
Thailand
Hong Kong
U.A.E.
K.S.A.
Oman
Qatar
Bahrain
Kuwait
U.K.
France
Germany
Australia
South Africa
Canada
U.S.A.


Dortmund மாநகரில்
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Franziusstrasse 150 (Tor 3)
DE:44147 Dortmund
Tel:0231 860 2696
Fax:0231 860 2698
தாயக மரக்கறிகள்
பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்களை
மொத்தமாக
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Star - Impex
Asiatische & Afrikanische
Lebensmittel Grosshandel
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse 150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de